# தமிழ் தந்த கருத்துக் குவியல்

★

ஆக்கியோன் :

குடந்தை எஸ். டி. பாலு

★

UNIVERSITY EXTENSION LIBRARY
22 DEC 1960
MADURAI

வெளியிடுவோர் :-

**ஸ்ரீ இராஜேஸ்வரி பப்ளிஷிங் ஹவுஸ்,**

18, மேலச் சித்திரை வீதி, மதுரை.

கிளை : மேட்டுத் தெரு, சேலம் டவுன், சேலம்.

**1956.**

[ பதிப்புரிமை ]

முதற்பதிப்பு: செப்டம்பர் 1956.

விலை ரூ. 1—8—0

லலிதா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
18, வடக்கு வெளிவீதி, மதுரை.

# முகவுரை.

தமிழ்நாடு இன்று பல்வேறு சூழ்நிலைகட்கு இடையே முன்னேற்றம் காண விரும்புகின்றது. இந்நிலையில் தமிழ் நாட்டில் உலவிவரும் பல கருத்துக்களை என் அறிவிற் கெட்டியவாறு உருவாக்க முனைந்தேன். வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவமும், பெரியவர்களின் சந்திப்பும் இந் நூலை ஆக்கத் துணைபுரிந்தன. சிறப்பாக எனக்கு அரசியல் ஆசிரியராக இருந்து தமிழ் உணர்ச்சியை ஊட்டி என்னைத் தமிழனாக ஆக்கிய திரு. ம. பொ. சிவஞானம் அவர்களை என்றும் நான் மறக்க முடியாது.

முறையாகக் கற்காது கற்றோர் தொடர்பு ஒன்றே பெற்று இத் தமிழ் தந்த கருத்துக் குவியலை எழுதினேன். பேச்சோட்டம் நிறைந்த இந் நூலில் குறையிருப்பின் நிறைவு கொண்டு கற்று அறிவுடையோர் போற்றுவர் என்பது என் துணிவாகும். பல்வேறு சிக்கல்கள் இந் நூலில் உள்ளன. தமிழ் வாழ்வும், தமிழர் வாழ்வும் சிறப்புற வேண்டும் என்ற ஒரே நோக்குடன் என் சொந்தக் கற்பனையில் எழுந்தவைகளே இவை.

இந்நூலை உருவாக்க என்னைத் தூண்டி ஆவனசெய்த மதுரை ஸ்ரீ இராஜேஸ்வரி பதிப்பகத்தாருக்கும், எனக்கு "சொல்லரசுச் செல்வர்" எனப் பட்டம் தந்த, திரு. வித்துவான் வீ. ப. நடராசன் அவர்கட்கும், எம் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திரு. புலவர்மணி, தி. கி. சுந்தர மூர்த்தி அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி.

மதுரை
1—9—56.

அன்பன்,
குடந்தை எஸ். டி. பாலு.

# முன்னுரை

எழுதும் ஆற்றல் எல்லோர்க்கும் ஏற்பட்டுவிடுவதில்லை. ஏற்படவும் முடியாது. இதயத்துடிப்பும், எழுச்சி பெற்ற உள்ளமும் படைத்தோர்க்கே எழுதும் ஆற்றல் ஏற்படும். அவர்களிடத்தில் அந்த ஆற்றல் பூர்ண சந்திரனைப் பொலிவதில்லை. ஆயினும், முயற்சிக்கும் உழைப்பிற்கும் ஏற்ப ஆற்றல் வளர்பிறைபோல வளர்வது இயற்கை. இப்படி வளர்பிறை போன்ற தமிழ் எழுத்தாளர் பலர் தோன்றி வருகின்றனர். அவர்களிலே ஒருவர் எனது அரிய நண்பர்-தமிழரசுக்கழகம் பேச்சாளர் குடந்தை எஸ். டி. பாலு.

அவர் எழுதிய "தமிழ் தந்த கருத்துக் குவியல்" என்ற நூலைக் கண்ணுற்றேன். தமிழகத்திற்குத் தேவைப் படுகின்ற, இன்றியமையாது தேவைப்பட்டுவிட்ட பல பொருள்கள், இந்நூலாசிரியர் தம் கவனத்தைச்செலுத்தியுள்ளார். வெறும் ஆர்வத்தோடு மட்டுமல்லாமல் பொது வாழ்க்கையில் தான் அடைந்துள்ள அனுபவத்தையும் வைத்துக்கொண்டே இந்நூலை இயற்றியுள்ளார். இதனுல் கருத்து வேற்றுமை வெளிப்படுமிடங்களில் கண்டனம் சிறிது அழுத்தமாக விழுந்திருக்கிறது. அது இளமைத் துடிப்பின் இயற்கை.

நண்பர் பாலு, குற்ருலம் அருவிபோல இனிமையாகவும், குளர்ச்சியாகவும் பேசும் திறமை படைத்தவர். அந்த இனிமையின் தன்மை, அவர் எழுத்திலும் எதிரொலி செய்கின்றன. இந்நூலாசிரியர் கலைத்துறையில்

போதிய ஆர்வமும் ஓரளவு அனுபவமும் உடையவர். அதனால் கலைகளைப்பற்றி அவர் எழுதியுள்ளவை அவருடைய ஆர்வத்தை அப்படியே பிரதிபலிக்கின்றன.

நண்பர் பாலு எழுதுகின்ற எழுத்தாற்றலைப் பெருக்கிக்கொள்ளுகின்ற முயற்சியை இந்நூலோடு நிறுத்திக்கொள்ளாமல் தொடர்ந்து செய்துவரவேண்டுமென்பது என் விருப்பம். தமிழகம், வாழவேண்டும்-வளரவேண்டுமென்றால், தனி மனிதர்கள் அறிவுத் துறையிலும், பிற துறைகளிலும் வளரவேண்டும்-வாழவேண்டுமென்பதே பொருள். அன்பர் பாலு எழுதியுள்ள இந்நூலுக்கு, தமிழர் பேராதரவு தந்து, அவரை ஊக்கி, உற்சாகப்படுத்துவார்களென்று நம்புகிறேன்.

சென்னை
16—9—'56

**ம. பொ. சிவஞானம்,**
**தமிழரசுக்கழகத் தலைவர்.**

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# தமிழ் தந்த கருத்துச் செல்வம்

பெருமை பெறு நம் நாட்டின் மொழி அருமை பெறு தமிழ் மொழி. நம் தமிழ் மொழி தந்த கருத்துக்கள் யாவும் ஒப்பற்றவை. அந்தக் கருத்துக்களில் சுகாதாரம், விஞ்ஞானம், மதம், கிரகங்கள் யாவும் அடங்கியிருக்கின்றன. விமானம் கண்டுபிடித்த மேல் நாட்டினர்கூட, நம் தமிழ் நாட்டுக்கு நன்றி செலுத்துகிறார்கள். அதன் காரணத்தை விளக்க வேண்டியேதான் இந்நூலை எழுதத் தொடங்குகிறேன்.

தமிழ் நாட்டின் தெற்கெல்லை முக்கடலால் சூழப்பட்டது. எல்லையை நிர்மாணித்தவனுக்குள்ள பண்பாட்டை நினைக்கும்போது நாமே வியப்புக்குள்ளாகிறோம். முத்தமிழால் போற்றப்படுவது தமிழ். அந்தத் தமிழ்நாட்டு எல்லையைத் தெற்கே ஏற்படுத்த எண்ணும்போது, முக்கடலே முத்தமிழாக அமைந்துவிடுகிறது. இதன் காரணத்தால்தான், தமிழ் படித்தவர்கள் எக்கடலாயிருந்தாலும் தாண்டி, முத்தமிழால் வியாபாரஞ் செய்து, முத்துக்குப் பதில் பொன்னைக் குவித்திருக்கிறார்கள். முக்கடலும் மகாசமுத்திரங்கள். ஒன்று இந்துமகாசமுத்திரம், இன்னொன்று அரபிக்கடல், மற்றொன்று வங்காளக்குடாக்கடல். அந்தச் சமுத்திரத்தின் பெயரையே வைத்து தமிழ் மொழியின் வருங்காலத்தின் இயல்பை நிர்ணயித்தே தெற்கெல்லை அமைத்திருக்கிறார்கள் போலும். 'இந்துமதம்' மகா சமுத்திரமாயிருந்தாலும், தனக்குள் எவ்வித கர்வமின்றி

வங்காளத்தினரின் இலக்கியமாயிருந்தாலும், மேல் நாட்டினர் அரபிக்கடல் தாண்டி உருதின் வடிவமாக ஆங்கிலம் வந்துள்ளபோதிலும், அவ்வளவையும் முத்தமிழால் வாழ்த்தி வாழ்வதுதான் தமிழ்நாடெனச் சொல்லாமல் சொல்லுகிறது. இந்துமதம், மதமென்ற முறையில் நினைக்காமல், மனிதன் வாழ்வில் ஏற்படும் சபலத்திற்கும், நன்மை தீமைக்கும்; ஒரு வரம்பென்றும், ஆண் அலையின் வேகம் பெண் அலையின் சாந்தத்தில் அடங்கியதென்றும், உப்பு போன்ற அருளை மறந்தால், அவன் எம்மதத்திற்கும் உரியவனல்லாமல், மருளாகிய பாறையில் மோதித் துன்பப்பட்டு மரணமடைந்திடுவானோவென்ற பயம் தமிழனுக்குத் தோன்றி, இளங்குமரியைக் கடவுளாக அமைத்தான்.

குமரியைக் கடவுளாக அமைத்த காரணத்தால், மத நம்பிக்கையற்று, இயற்கையினிடம் நம்பிக்கை வைக்க எண்ணும் பகுத்தறிவு வாதி, குமரியைப் பார்த்தவுடன் சற்று திகைத்து நிற்கிறான். திகைத்து குமரியின் அழகைப் பார்க்கிறான். அழகைப் பார்த்துவிட்டுக் கடலை நோக்கினான். வலது காலில் ஒரு அலை மோதி இடது பக்கம் வீழ்த்த நினைக்கும்போது இடது காலில் அடித்த அலை விழாமல் காப்பாற்றியது. அப்பாடா! எனப் பெரு மூச்சு விடும்போது நேராக ஒரு அலை அடித்து மீண்டும் குமரி பக்கம் திரும்பச் சொன்னது. குமரி சிரித்தாள். சிரிப்பின் ஒலி அலை ஓசையாகக் கண்டான். கண்டதும் தானும் சிரித்தான். சிரித்துக்கொண்ட தன் பகுத்தறிவுக் கண் கொண்டு சிந்திக்க ஆரம்பித்தான். முத்தமிழால் உன்னை வணங்க நினைத்த தமிழன் பரந்த உலகக் கண் கொண்டு உன்னழகைப் பார்த்திருப்பான். உலக நாடுகளில் தமிழ்க் குமரியின் உருவத்தை வைத்து ஒப்பிட்டுப் பார்த்

திருப்பான். பார்த்தபிறகுதான் உன்னை முக்கடல் மோதி மோதி, முத்தமிழ் பேசும் மக்கள் அலைபோல் மொழிப் பற்றுடன், மாற்று மொழியின் பற்றும் மோதி அறிஞர்களாகப் பிறக்கவேண்டிதான் உன்னுருவத்தை நிர்ணயித்திருப்பான். அரபிக்கடலைப் பார்க்கும்போது பம்பாய், மேல் நாட்டிற்குச் செல்லும் வழி. வங்காளக்குடாக்கடலைப் பார்க்கும்போது கல்கத்தா நதிகளில் உயர்ந்த கங்கை நதி பாயுமிடம். வியாபாரத்தை மேல் நாட்டில் பரவச்செய்யும் யோசனை மேற்குக் கடலிலும், நதிகளினால் ஏற்படும் விவசாயத்தின் முக்கியத்துவம் கீழ் நாடான இந்தியாவிலும் நிலைத்து நிற்க, பல நூற்றாண்டுத் திட்டம் போட்டவன் செய்த பூகோள அமைப்பல்லவா? இத்துணை அமைப்பை வைத்தவன் தமிழனென்றால், தனது தாய் மொழியை வருங்கால நாகரீக உலகம் சிறைப்படுத்தி விடலாமென்ற யோசனையும் இல்லாமலில்லை. அதனால் தான் இளங்குமரியாக, தமிழன்னையாகக் கற்பனை செய்திருக்கிறான். விளையாட்டாக அயல்நாட்டு மொழி அன்பு கொண்டு, நம் தமிழ்நாட்டில் வியாபிக்க எண்ணினால்கூட அவைகளுக்கு வாய்ப்பளித்து தன்னலத்தைத் தியாகம் செய்து காட்டிய தெய்வம் தமிழ்க் குமரிதானெனத் தெரிய வருகிறது. அதன் எதிரொலிதான், முல்லைக்கொடி பரவத் தேர் தந்ததும், மயில் குளிரால் நடுங்குமோவென்ற எண்ணத்தில் விலையுயர்ந்த சால்வையை தந்ததும் ஆகிய மன்னர்களைத் தந்திருக்கிறது.

மாற்று மொழிகள் மட்டுமல்ல, மதங்கள் எத்தனை வகையான மதங்கள் வந்தாலும் வரவேற்பளித்துத்தானிருக்கிறாள் நம் குமரி. நம்மை நோக்கிச் சொல்லும் சொல் இதுவா யிருக்கலாமென்று நினைக்கவேண்டி வருகிறது.

"எம் தமிழ்ச் செல்வங்களே, எம்மொழி வந்தாலும், எம் மதம் வந்தாலும், எந்நிலை வந்தாலும், என் பருவமான இளமையைப்போல், என்றும் தமிழ் இளமையாகவே வாழும். அதைப் படிப்பவன் முதுமையானாலும், தமிழ் மருந்து சாப்பிட்டால் இளமையாய்விடும். அதனால் எவ்விதமான பேராபத்து வந்தாலும், தமிழ் தன் கருத்தை மாற்றாமல் வாழும் ஒரே மொழி தமிழ்தான்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் எதிரொலிதான் இன்றுவரை நம்நாட்டைநோக்கிப் படையெடுத்துவந்த ஆங்கில நாகரீகம் தமிழினிடத்தில் தோல்வியுற்றது.

உதாரணமாக, மேல்நாட்டினர் ஆப்பிரிக்க நாட்டில் பிரவேசித்தார்கள். அங்குள்ள நீக்ரோக்களிடம் பழகினார்கள். அவர்களைத் தங்கள் நாகரிக பாணியில் நுழைத்து விட்டார்கள். நிறத்திற் கறுப்பர்களாயிருந்தாலும், உள்ளத்தில் வெள்ளை நிற வர்ணத்தையும், உடலில் ஆடையையும் இணைத்து வாழ ஆரம்பித்துவிட்டார்கள். நீக்ரோக்கள் அநேகமாக அமெரிக்கப் பாணியிலும், ஆங்கிலேய பாணியிலும் பழகி அவர்கள் மாதிரியே மாறிவிட்டார்கள். நம் தமிழ் நாட்டுக்கு வந்த வெள்ளையர்கள் ஜாதீயக் கொடுமை நாடகத்தில் நடிகர்களாய் வாழ்ந்தவர்களை, தங்கள் கிறிஸ்துவ மதப் பிரச்சாரத்தில், கருணையான சுயநலத்தை இணைத்து, மதமாற்றும் நாடகத்தில் நடிக்க வைத்துவிட்டார்கள். நடிக்க வைத்தபோதிலும் மதத்தை வேடமாகத்தான் வைத்துக்கொண்டார்களே தவிர தங்கள் தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தை மறந்துவிடவில்லை. அதனால் படையெடுத்துவந்த நாகரீகம் உத்தியோக அளவிற்கு, அலுவலகத்தில் மட்டுந்தான் பயன்பட்டது. உத்தியோகம் முடிந்து வீட்டிற்கு வந்தவுடன் தமிழ்நாட்டு

வழக்கங்களைத்தான் பின்பற்றினார்கள். ஆகையினால்தான் தமிழகத்தின் கலாச்சாரத்தை யாரும் மாற்றமுடியாமல் போய்விடுகிறது.

பூகோளத்தின் வடிவமான உலக உருண்டையில் கடல் சூழ்ந்த இடமாகவுள்ள எல்லா நாட்டைவிட தமிழ் நாடுதான் நாகரீகக் கல்லூரியாக இருந்து வந்திருக்கிறது. கடந்தகால நிகழ்ச்சிகள் இலக்கிய வடிவமாக யிருப்பதை, இலக்கிய கர்த்தாக்கள், இலக்கிய நடையிலேயே நம் நாட்டுக்குத் தந்துவிட்ட காரணத்தால், பலர் உணர முடியாமல் போய்விட்டது. அயல் நாட்டார் வரும்போது குமரியைப் பார்க்க வருகிறார்கள். ஆதித்தனின் உதயமும், மறைவும் ஒரே யிடத்தில் பார்ப்பது குமரியில்தான். சூரியனை, அறிவு உதயத்தோடு, தமிழ் எல்லையில் ஆரம்பிப்பதால், மற்ற நாட்டின் அறிவுகளெல்லாம் எங்களிடம் வரும்போது, எங்களிடமே மறைந்து எங்களிடம் உதயமாவதைக் கொண்டுபோவதற்கே எல்லை அமைந்ததெனச் சொல்கிறான். அதைச் சிலர் மறுக்கலாம். தெற்கெல்லையைக் கொண்ட இந்தியாவில்தான் ஒரு காந்தி தோன்றி அஸ்தமிக்காத சாம்ராஜ்யமான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றியது. அதே இந்தியாவில் பிறந்த நேருதான் கொரியா யுத்தத்துக்கு எச்சரிக்கை செய்தார். இதே இந்தியாவில் பிறந்த விவேகானந்தர்தான் அமெரிக்கா சென்று இந்து மதத்தைச் சங்கநாதம் செய்து பேசியது. இதே குமரி எல்லையைக் கொண்ட தமிழ் நாட்டில் பிறந்த குமரகுருபரர்தான் வடக்கிருக்கும் மாற்று மொழியாரிடம் வாதாடியது. இதயமாகிய தமிழ்நாடுதான் மறையுமிடத்திற்கு வந்துவிடுமோவென்ற பயத்தில்.

வாழ்க்கையிலும் முத்தமிழிடம்பெற்று வாழ குமரியை வைத்திருக்கிருன்.

வாழ்க்கைக்கும் எல்லைக்கும் என்ன சம்பந்தமெனக் கேட்கலாம். முத்தமிழால் வணங்கும் குமரி எப்படி வாழ்க்கையோடு இணைக்க முடியுமெனக்கூடச் சந்தேகம் எழலாம். தமிழை மூன்று பிரிவாகப் பிரித்திருக்கிருர்கள். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ். இயற்றமிழ் கொஞ்சம் கடினம். சிலருக்குப் புரியாது. இசைத்தமிழ் அசையாத உள்ளத்தையும் கொஞ்சம் அசையச்செய்யும். நாடகத்தமிழ் நாட்டமில்லாதவர்களைத் தன் பக்கம் நாட்ட மடையச்செய்யும். இம்மூன்றும் பெண்களின் பருவத்தி லிருப்பதை உணர்ந்தான். இயற்றமிழாகிய தன் இளமையை இசைத்தமிழாகிய பருவத்தோடு கலந்த நாதத்தை அசையா இன்பமாக்கி, குடும்பத்தை நாடகத்தமிழாக்கி அதனின் பயனுகப் புத்திரர்களைத் தந்து நாட்டின் வளர்ச் சிக்குக் காரணமானவள் பெண்தானென உணர்ந்து இளங் குமரிப் பெண்ணைக் காவலாய் வைத்தான்.

தெற்குக் காவல் பெண், வடக்குக் காவல் ஆண். இந்தியாவின் வடக்கெல்லை இமயம். அங்கிருக்கும் உச்சி சிகரம் எவரெஸ்ட். அந்த மலையில்தான் கைலாயம், வெள்ளியங்கிரி அமைந்திருக்கிறது. அங்குதான் பரம சிவமாகிய கடவுளிருக்குமிடமாக அமைத்தார்கள். குளிர் நிறைந்த இடத்தில் கடவுள். அக்கடவுளுக்கு புலித்தோல் தான் ஆடையாம். அவர் நடனமிடுவதோ மயானத்தில். இவ்வித குணமுடைய கடவுளை வடக்குப் பக்கம் காவலா யமைத்தார்கள். கடவுளைக் கட்சியாக்காமல், கடவுளின் செய்கையைக் கட்சியாக்கி அமைத்துவிட்டார்கள்.

தெற்கே வீசும் காற்று தென்றல். வடக்கிருந்து வீசும் காற்று வாடை. தெற்கே தியாகத்தைச் செய்தவர்கள் வடக்கிருக்கும் தலைவர்களின் தியாக வாடையைப் பின்பற்றித்தான் செய்தார்கள். வடக்கிருக்கும் ஆண் மயானத்தில் நடனமாடியவர். மயானம்தான் நாம் விரும்பும் சோஷலிஸம். மயானம், பணக்காரனுக்கும் ஏழைக்கும், அழகிக்கும், அழகில்லாதவளுக்கும் இடந்தருகிறது. அதுபோல், பாட்டாளியும், பணக்காரனும், படித்தவனும் பாமரனும், சமநீதித் தத்துவத்தின் கீழ் வாழ வழிசெய்ய வேண்டுமென எல்லாக் கட்சித் தலைவர்களும் சொல்வார்கள். இப்படிச் சொல்வார்களென்று அமைத்தவனுக்கு எப்படித் தெரியும்? ஆச்சரியந்தானே. ஆண்களிருக்குமிடம் குளிர் நிறைந்த இடம். நடுக்கம் நிறைந்த உள்ளத்தில் தென்றல் வீசியவுடன் ஏற்படும் புத்துணர்ச்சி வீரமாக மாறி நாட்டைக் காப்பாற்றப் புறப்படும் வீரனாக மாறுவாயென்று சொல்வதுதான் நம் நாட்டின் எல்லைகள். எல்லைகளைப்பற்றியதில், தமிழ்நாட்டின் வடக்கெல்லைக் கடவுள் திருப்பதி வெங்கிடாசலபதி. தமிழன் உறவு பெறுமிடத்தில் சைவக்கடவுள். உரிமைக்குள்ள இடத்தில் வைஷ்ணவக் கடவுள். உறவுகொள்ளுமிடத்திலுள்ள கடவுள் தன்னலமற்றவர். உரிமை கொள்ளுமிடத்திலுள்ள கடவுள் காணிக்கை வாங்குபவர். தன்னலமற்று இந்தியா சுதந்திரமடைய வேண்டுமென்று எல்லோரும் பாடுபட்டோம். பாடுபட்ட பலனும் கிடைத்துவிட்டது. பலன் கிடைத்துவிட்டாலும், உரிமைக் கடவுளுக்குக் காணிக்கையான மொழிவாரி மாகாணம் அமையவில்லை. அமையாவிட்டாலும், இதுவரை நம்மிடம் காணிக்கை வாங்கிக் கொண்டிருந்த கடவுள் நம் சகோதர மொழியாரின் எல்லையில் போய் சிக்கிக்கொண்டார். நாம் ஏமாந்தவர்களா

என்றுகூட நினைக்கலாம். உரிமைக் கடவுள் செய்த சோதனையேயாகும். என் உரிமையைப்பற்றி, காணிக்கை கொடுத்த தமிழைப்பற்றி நினைப்பவர்கள் யார் இருக்கின்ருர்களென்று வினுக் கேட்டார்? விடை தந்த தமிழக அரசியல் மேதைகள், அதில் விட்டுக்கொடுக்கும் பேதைக ளாகவே யிருந்துவிட்டார்கள். உரிமையை நினைக்காத நாட்டில் நாமிருந்தால், தனக்கிருக்கும் மொழிப் பற்று போய்விடுமென்று, மொழிப்பற்றில் பிடிவாத குணமுள்ள ஆந்திரர் பக்கம் போய்விட்டார். போய்விட்டால்கூட நம் தமிழ் எப்படியும் விடுதலை செய்துவிடுமென்ற நம்பிக்கையு மிருக்கிறது.

ஏழுமலையுள்ள திருப்பதியில் வடக்கெல்லைக் கடவுள் அமைந்ததால்தான், தெலுங்கில் இராமனைப் பாடிய தியாகய்யர் திருவையாற்றில் சமாதி கொண்டார். சப்த ஸ்வரங்களும் ஆண்மையிடம் கலக்கும்போது லயப் பிரமாணம் தோன்றுவதால்தான். இந்த குமரி-வேங்கடத்தின் எல்லையில் இடைப்பட்டவன் எந்நாட்டிலும், எம்மொழியிலும் சிறந்தவனுக, மேதையாக வாழமுடிகிறது.

உரிமைக்குள்ள கடவுள் வைஷ்ணவமா யிருப்பதால் தான் நம் தமிழர்களும் பதவிக் காரணமாக ஒரு அவதாரம், பணம் காரணமாக ஒரு அவதாரம், பிறர் புகழைப் பெற ஒரு அவதாரம் எனப் பல அவதாரங்கள் எடுக்கிருர்கள். அத்தனை அவதாரங்களும் தமிழுக்கு அபராதம் விதிக்கும் நிலையைத்தான் உண்டாக்குகிறதே தவிர வேறு எவ்வித நன்மையும் ஏற்படுவதில்லை. வைஷ்ணவக் கடவுளோ கறுப்பு நிறம். நெற்றியில் நாமம். அதனுல்தான் நம் பகுத்தறிவு வாதிகளாகிய கறுப்புச்சட்டைக்காரர்கள் நம்

தமிழ் நாட்டில் மட்டுந்தானிருக்கிறார்கள். அவர்களும் நம் எல்லைக் கடவுளைத்தான் கொடியில் பொறித்திருக்கிறார்கள். கறுப்பு அவரின் நிறத்தை முதலில் போட்டு அவரின் நாமத்தின் சிகப்புக்குறியை மட்டும் இரண்டாவதாக போட்டிருக்கிறார்கள். இந்தக் கொடி "திராவிடக்கழகம்" என்று அமைத்தபிறகுதான் தயாரித்தார்கள். அதிலிருந்து நமது வடக்கெல்லைக் கடவுளே அவர் கழகத்திற்கு ஆசியளித்திருப்பார், "தமிழை திராவிடமென்ற கருப்பாக்கி வாழ நினைத்தால் என் நாமத்தின் சிகப்புக்குறியே, திராவிடத்திற்கு நாமம் போட்டுவிட்டு உங்களைத் தமிழராக்கிவிடுமென்று ஆசி தந்திருப்பார்போலும். அதனால்தான் வடக்கெல்லை மீட்புப்போரில், கழக உத்தரவில்லாத காளையர்கள் சேர்ந்திருந்து, பின் நாங்களும் சேர்ந்து நடத்தினோமென்று விளம்பரம் செய்துகொண்டார்கள்.

இரண்டாவதாக நமது எல்லைக் கடவுளுக்குப் போடும் கோஷம் "கோவிந்தா". கொடியும் நம் எல்லைக் கடவுளின் சின்னம். அதனால் ஒருக்கால் திராவிடம் கோவிந்தாவாகி விடுமோவென்ற அச்சமிருந்தாலும், அறிவைக்கொண்டு அடையலாமென்ற நம்பிக்கை. அடைந்தால்கூட கொடியின் நிறம், நம் கடவுள் சம்பந்தப்பட்டதுதானே. ஆனதால்தான், கடவுள் இல்லையென்று பேசும், அறிஞர்களின் மூளையில் தோன்றும் கொடி நம் எல்லைக் கடவுளின் சின்னமாக அவர்களையறியாமல் அமைந்துவிடுகிறது. அமைந்துவிட்டதால்தான், தமிழ்நாட்டிலுள்ளவர்கள் மட்டுமே அக்கட்சிக்கு அங்கத்தினர் ஆனார்களே தவிர, அவர்கள் சொன்ன ஆந்திர, கேரள, கன்னடத்தில் ஒருவரும் சேரவில்லை. கறுப்பு காமத்தின் நிறம். அதனால்தான் கறுப்பு நிறக் கடவுளை காமவயப்படுத்தி, அதன் கையில் குழலைக்

கொடுத்து, குழலின் அருள் நாதத்தால் ஐந்தறிவுள்ள மிருகங்களையும் தன்வயப்படுத்தி, அறிவுடையவர்களாக்க கண்ணனையும் கடவுளாகப் படைத்தார்கள்போலும்.

எல்லைக் கடவுளரின் அருளால், அவர்கள் நம் பக்கம் திரும்பி தமிழ்ச் செல்வங்களாக வரத்தான் வடக்கெல்லைக் கடவுளை கறுப்பாக அமைத்தான். மற்றொன்று, தற்காலத்தைக் கருதியும் வைத்திருக்கலாம். வடக்கிருக்கும் நம் அரசியலார், வடக்கிருக்கும் நம் கடவுள் கறுப்புதானே. எல்லையை இருட்டடிப்புச் செய்தாலென்னவென்றுகூட நினைக்கலாம். கறுப்புக் கடவுளாயிருந்தாலும், அசுரர்களை வதை செய்தவர். தமிழுக்குத் துரோகம் செய்தவர்களை விட்டுவைக்கமாட்டார். ஆனல் நம் தமிழ்நாட்டுத் தமிழர்களே, தன் நாட்டிற்குத் துரோகிகளாக, பதவி வெறியர்களாக வாழ எண்ணும்போது, வாழும் மககளின் பிரதிநிதிகளுக்கே கவலையில்லையென்ருல் நமக்கேன் இந்த பொறுப்பென்று கறுப்புக் கடவுள் வெறுபபுக்கொண்டிருக்கலாம். தானுகவே தமிழ் எல்லைகள் மீட்கப்பட்டுவிடும். ஏனென்ருல், பழமையில் தோய்ந்த பெரியவர்கள், வருங்காலப் புதுமைக்கேற்ப பண்பாடு அமைந்த காரணத்தால் மீட்கப்பட்டே ஆகவேண்டும்,

எல்லைக் கடவுள்களின் அமைப்பு இவ்வாருக இருப்பதால், தமிழகத்தின் கலாச்சாரங்கள் விஞ்ஞானம் வியக்கும் வண்ணம், அஞ்ஞானம் மறையும் வண்ணம், மெஞ்ஞானம் உதயமாகும் வண்ணம் எத்தனையோ வழக்கங்களை சடங்குகளாகவும், விரதங்களாகவும் வைத்து, தமிழனை ஆரோக்கியமுள்ளவனுகவும், பேராசைக்காரத் தன்மையில்லாதவனுகவுமாக்கி வைத்திருக்கும் விந்தையை எண்ணும்போது

நமக்கே வியப்பாக இருக்கிறது. கோவில்களை கலாச்சார நிலையமாகவும், அதனின் அமைப்பை வாழ்க்கை வழி காட்டிகளாகவும், அதனில் அமைக்கும் கடவுள்களை குடும்ப பிணைப்பாக்கி, எண்ணும் எண்ணத்தை இரு கூறுக்கி, நல்லதைத் தெய்வமாகவும், தீயதை எதிர்க்கும் அசுரர்களாகவுமாக்கி அமைத்த ஆச்சரியத்தைப் பார்ப் போம்.

கோவில்களைப்பற்றிக் கவனிப்பதற்கு முன் நம் நாட்டு மன்னர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். மன்னர்களின் சின்னமும் அந்நாட்டு இயல்புக்குத் தகுந்த வாறு நியமித்துக்கொண்டார்கள். மூவேந்தர்களும் தமிழ் வேந்தர்களாயினும் சண்டையில்லாமலிருக்கவில்லை. காரணம், (தணத்திடையே தோன்றிய வீரத்தை அறிவுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கும்போது சுயநலம் உருவாகித்தா னுகும். அதன் காரணத்தை முன்னிட்டுத்தான் சண்டை களும், சமாதானமும், நடந்துகொண்டிருக்கவேண்டும். சோழ நாட்டு மன்னன் புலியை தனக்குச் சின்னமாகப் பொறித்தான். புலிக்கொடியுடையவன் தான் கோவில்களின் எண்ணிக்கையை அதிகமாக்கினுன். தன் சகோதரி, புத்திரி, யாவரையும் கலையிலும், நடனத்திலும் தேர்ச்சி பெற வைத்தான். கலையிடமும், கடவுளிடமும் பக்தி கொண்ட மன்னனுக்கு புலியை ஏன் சின்னமாகப் பொறிக்கவேண்டுமென்ற வினு எழுகின்றது.

புலி மீது வரி வரியான கறுப்புக் கோடுகள். புலி பாயும். குகையில் வசிக்கும். வீரமுள்ள மிருகம். புலிமீது வரையப்பட்ட வரிகளை நிலங்களின் வரம்பாக நினைத்தான். காவிரியை வெட்டி வளமாக்கிய பரம்பரையா யிருந்ததால்

நஞ்சை நிலங்களை விருத்தி செய்ய நினைத்தான். பரந்த நிலப்பரப்பிற்கு பகிர்ந்தளிக்கும் பண்பாட்டின் அளவாக வரப்புகளைப் போட்டான். நிலத்திற்கு மரியாதை செலுத்தி உழைக்காத மக்களை புலிபோல் அரசியல் சட்டம் பாய்ந்து தண்டிக்குமென்ற எச்சரிக்கையும் செய்தான். குகையிலிருக்கும் புலி கொடியில் வந்ததென்றால், நாகரீகம் தெரியாத மக்கள் குகையில் மறைந்து, பதுங்கி பாயும் கெட்ட குணத்திலிருந்து தப்புவிக்க எண்ணி கொடியில் வைத்திருப்பதால், அன்பு கொண்ட தமிழால் கொடியவனைத் தன்வயப்படுத்த முடியுமென்று நம்பினான். பகைவன் எவ்வளவு கெட்டவனாயிருந்தபோதிலும், எங்கள் கலாச்சாரத்தால் வயப்படுத்த முடியாவிட்டால்தான், எங்கள் வீரத்தைத் தட்டி எழுப்பி புலியாகப் பாய்வோமென்றக் கருத்துமுண்டு.

பகைவன் படையெடுத்து வருமுன், புலிக்கொடி பொறித்த நகரத்தின் எல்லையில் வரும்போதே உயர்ந்த கோபுரங்கள் தெரியும். கோபுரத்தைப் பார்க்கும்போதே, கற்பனையைவிட கலையில் உயர்ந்தவர்கள் வாழும் நாடென உணர்ந்து, பகைமையை விட்டு உரிமைக்காக அன்புத்தூதனுப்பமுடியும். அன்பை வம்பாக்காமல் நடந்துகொண்டால், கொடிக்காகத்தான் புலியே தவிர, கொடுமைக்காக அல்லவென்பதையும் உணர்த்த முடியும். நடனத்தையும் இசையையும், நம்புகின்றவர்கள், புலி பதுங்கி அடி வைப்பதுபோல் லயம் தவறாமல் காலடி வைத்து, பாயும் குணம்போல் சாகித்யத்திற்குத் தகுந்தவாறு பாவத்தை முகத்தில் பாயவைத்து தன்னை மறந்து நடனமாடாவிட்டால் கொடிப் புலி, கொடும் புலியாக மாறி, கலையைக் கொலைசெய்வோர்களைத் தண்டிக்கும். அரசனோ, அரசியோ

அரசியலின் காரணமாக நன்மை செய்துவிட்டோமென்ற அகம்பாவ உணர்ச்சி மேலிட்டு, கர்வம் ஏற்பட்டால், கொடியிலிருக்கும் புலி, மக்களை அசைந்தாடிக் கூப்பிட்டு, கொடிய புலியை உங்கள் ஆர்வத்தின் அன்பால் அடக்கிய மன்னன் கொடுமை செய்கிறான். அதனால் நாணடுவது போல் அரசியலும் ஆடிவிடுமென்று கூறிவிடும். மக்களும் மன்னனிடம் சென்று பறக்கும் கொடி, பண்பாடு கெட்டு விட்டதாகச் சொல்கிறதே என மன்னனையே திருத்து வார்கள். புலிக்கொடி நாட்டிலடிக்கும் காற்றுகூட நீதிக் காகக் கொடியோடு போராடும் நிலையிலிருந்ததால்தான் சோழ மன்னர் பரம்பரை கோவிலைக் கட்டியதோடு, மக்க ளின் உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் விவசாயத்தையும் நல்ல முறையில் ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றிருக்கி றார்கள். புலியின் சின்னம் இன்றும் மறக்கமுடியாத நிலையிலிருக்கிறது. புலியைப் பார்க்கும்போது சோழ மன்னனும், தஞ்சை கோவிலும், சோற்றுடைய சோழ நாடென்ற காட்சியும்தான் பார்க்கிறோம்.

பாண்டிய நாட்டு மன்னனின் கொடி மீன். தமிழை வளர்த்தவர்கள் பாண்டிய மன்னர்கள். கோவிலைக் கட்டி ஆண்டவனை நிர்ணயித்தான் சோழன். தமிழைக் கடவு ளாக்கி கலாச்சாரத்தைக் கோவிலாகச் சமைத்தான் பாண் டியன். தண்ணீரில் நீந்திச் செல்லும் மீனையே தன் கொடியில் பொரித்திருக்கிறான். வருங்காலந் தெரிந்த மன்னனாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் மீனைத் தீர்மானித்திருக்கமாட்டான். பாண்டிய நாட்டின் பெருமை யால் தேவனும் தேவியுமே அரசாண்ட பதியாகிவிட்டது. ஆண்டவனே விருப்பப்படுமளவிற்குள்ள பாண்டி நாட்டிற்கு மீன் கொடியாக அமைந்ததை யோசிக்கவேண்டி

யிருக்கிறது. மதுரைத் திருவிளையாடலிலே பரமசிவமே வலை வீசி மீன் பிடிக்கிறார். அன்று பரமசிவம் வலை போட்டு மீன் பிடித்தாரென்பதை நம்பாவிட்டாலும், தற்காலம் நம் தமிழ் நாட்டிலிருக்கும் நிலையில் அவ்வாறு நடந்திருக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

மீன் தமிழ். அது மிதக்கும் குளம் இந்தியா. அதன் கரைகள் பல மொழி பேசும் ராஜ்யங்கள். சில ராஜ்யங்கள் அந்தந்த மொழிக்கு சுதந்திரம் கிடைத்த காரணத்தால் ஒதுங்கி விட்டது. நான்கு சுவர்களுக்கு மத்தியிலுள்ள தண்ணீரில்தான் இந்த மீன் இருக்கிறது, மற்ற மொழியாளர் நினைத்து மீனைப்பிடித்துக் கொள்ளுங்களென சொன்னாலும் மத்திய அரசாங்கம் உத்திரவு கொடுக்க மறுக்கிறது. பரமசிவன் வலைஞர் வேடந்தாங்கி வந்ததைப் போல் சில தலைவர்கள் வந்த போதிலும், குளமிருக்கும் தமிழ் நாட்டாரோ, பக்கத்தில் மாற்று மொழி பேசுபவரிடம் குத்தகைக்கு குளத்தைப் பேசுகிறார்கள். இந்த விபத்து ஏற்படாமலிருக்கத்தான் பாண்டியன் யார் வலைக்கும் அகப்படாமலிருக்க கொடியில் மீனைப் பொரித்தான். குத்தகைக்கு விடுபவர்களின் கைக்கு அகப்படாமல் செய்து விட்டான். தந்திரத்தைக் கண்டுதான சுதந்திரத் தமிழன் வடிவமாக சுந்தரர் தோன்றி, மீனைப் போன்ற கண்களையுடைய மீனாக்ஷியை மணந்தார். மீனாட்சியே தமிழ் கோனாட்சி நடத்த விரும்பும் தாய்மைக் கடவுள். கொடியின் சின்னத்தை எல்லா வகையிலும் பிணைத்திருக்கிறார்கள். அந்த ஊர்க் கடவுளிலிருந்து, திருவிளையாடல்கள் வரையில் சின்னத்தை பின்னிப் பின்னி வைத்திருக்கிறார்கள்.

புலிக்கொடியையுடைய சோழ மண்டலத்தின் குடிமகளான கண்ணகிக்கு தீங்கு வந்தபொழுது, தன் தீங்கிற்குக் காரணம் தானே யென யுணர்ந்தவுடன் தானே மரணமடைந்தான் பாண்டிய மன்னன். அவன் மனைவி கோப்பெருந்தேவி கணவன்மீது படுத்தவுடன் உயிர் நீத்தாள். அந்த மாபெரும் சக்தியிலே நாம் பார்ப்பதென்ன? அரசியாயிருந்தாலும் மக்களின் நீதித் தடாகத்தில் தவழும் மீன்கள் தான் அரசியல்வாதிகள். தவறு செய்தால் நீதியே கொன்றுவிடுமென்று தெரிகிறதல்லவா?

மூன்றாவதாக வில்லம்பையும் பார்ப்போம். சேரநாடு காடுடைய நாடு. அங்குடையவர்கள் காட்டிலேயே வசிப்பவர்கள். அவர்களின் அன்றாட வாழ்க்கையில் ஈடு படுவது வில்லம்பு. சேரநாட்டில் நடனம் பிறந்தது. நடனத்திற்கு வில்லைப்போல் வளைந்து, நாணில் நாதத்தை ஏற்றி, அம்பைத் தாளமாக்கிய கலையின் சின்னமேதான் வில்லம்பு.

சேரநாட்டின் வருங்காலத்தையும் தெரிந்து தான் சின்னம் வைத்திருப்பானென்று எண்ணுகிறேன். சேரன் ஆளும்போதுள்ள தமிழ் வருங்காலத்தில் மாறுமென்ற சிந்தனை தோன்றியிருக்க வேண்டும். வந்த மொழியையெல்லாம் வரவேற்று தன்னகத்தே பெருமை கொண்ட தமிழ், கிரந்தத்தையும் வரவேற்றது. வரவேற்றதோடு நின்றுவிடாமல், தன்னோடு காதல் கொண்டு இணைய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது போலும். வந்த மொழி நூல் வழியாக வந்ததால், நிமிர்ந்த மூங்கிலை ஒத்த வீரமுள்ள தமிழ் வளைந்து நாணை ஏற்றது. அம்பை மறந்துவிடவில்லை. அம்பை தமிழ்க் கலாச்சாரமாக்கி எப்பொழுதும் கிரந்தமாகிய நாணைத் தொட்டுக்கொண்டே

யிருந்தால் தமிழ் கலந்த கிரந்தம்தான் மலையாள மொழி யென வருங்கால சந்ததி யுணர சின்னம் வழியாக அமைத் தார்களெனத் தோன்றுகிறது. நாணின் கயிறு இன்றும் தன்னால் தான் வளைக்க முடிந்த தென்ற எண்ணத்தில் வளைந்து கொடுத்த மூங்கிலைப் பரிகாசம் செய்து சிரித்த வுடன் அம்பின் அடிப்பாகம் தொட்டுக் காண்பித்து சிரிப்பை அடக்கிவிட்டது. ஆனால் தமிழ் தெரியாத பாவிகள், சேரனை மாற்றானாக நினைத்து கயிறுக்கு மதிப்புக் கொடுக்க, அம்பாகிய நம் தமிழ் அமைச்சர்களையே உப யோகித்துக்கொண்டார்கள். நம் தமிழ் நாட்டிலுள்ள சிலரும் பதவி பந்தாட்ட பந்தயத்தில் பின்னணிக் காப்பாள ராக (Goal Keeper) மாறினார்கள். அடித்த பந்து நமது காப்பாளரின் கவனக் குறைவால் இரண்டு கோல் (தேவி குளம்-பீர்மேடு) போட்டுவிட்டார்கள். அடுத்த ஆட்டத் தில் அரைக்கோலையும் அவ்விடத்திற்கு தானம் செய்து விட்டார்கள். இதையெல்லாம் எங்ஙனம் அந்நாளில் தெரிந்து சேரனுக்கு வில்லம்பை பொறித்தார்களென்று எண்ணும்போது ஆச்சரியமும் ஆணவமும் உண்டாகிறது.

நம் குமரியைக் கூட சேரநாட்டாரிடம் சிறை வைத் திருந்தார்கள். குமரியே நினைத்து விடுதலை யடைந்து விட்டாள். எல்லைகளும், கொடிகளும் நாட்டின் நிலைமை யையும், மக்களின் மொழியையும், பண்பாட்டையும் விளக்கு கின்றன. உலக அரங்கில் பல கொடிகளின் சின்னம், நிறம், எல்லாம் மாறிக்கொண்டே வருகின்றன. கட்சிக ளின் நிலைமைக்கொப்ப, கட்சித் தலைவரின் அறிவுக் கொப்பக் கொடிகளின் நிலைமை மாறுகிறது. ஆனால் தமிழ்க் கொடியோ, எத்தனை ஆண்டுகளுக்கு, எத்தனை படையெடுப்பு வந்தாலும், மாற்ற முடியாத நிலையிலுள்ள

தென்றல், பழமையை இகழும் புதுமைப் பித்தர்களை என்னென்று நினைப்பது?

நீர்வளத்தை எடுத்துக்கொண்டால் சோழநாட்டிற்கு காவிரி. பாண்டிநாட்டிற்கு வைகை. சேரநாட்டில் பறம்பை. காவிரியைப்பற்றித் தெரியாதவர்கள் கிடையாது. நதிகளுக்கு பெண்மையின் பெயர்சூட்டினான் தமிழன். காவிரிக் கரையில் மூங்கில் காடுகளுண்டு. காவிரி உற்பத்தி மைசூரைச்சார்ந்த குடகு மலையில். சிறு சுரங்க ஊற்றில் உற்பத்தியாகும் காவிரி, தமிழ்நாட்டை யடைந்தவுடன் பெருநதியாகி, சங்கமமாகுமிடத்தில் மறுபடியும் சிறு நதியாகி முடிகிறது. காவிரியின் உற்பத்தியும், சங்கமுமே ஒரு தமிழனின் படிப்பினை.

வாழ்வின் ஆரம்பத்தில் மூலாதாரச் சுனையான தாய்மையின் அன்பால் வளர்ந்து, வளர தந்தையின் ஆதரவால் பெரியவனாகி, வாழ்க்கைத் துணைவியைக் கட்டியவுடன் புத்திரப்பேறடைந்து, முடிவில் சிக்கனமாக வாழ்ந்து அகண்டாகார சச்சிதானந்த சொரூபமாகிய கடலிடம் கலந்துவிடவேண்டுமென்றதை நிரூபிக்கிறது. அதனால் தான் காவிரிக்கரையில் இசையும் நடனமும் வளர்ந்தது. துணையாகிய நாதத்தில் கலந்து, லயமாகிய உலகில் சஞ்சரித்து, மக்களின் உள்ளத்திலெல்லாம் நடனமாடி, நல்ல பெயர் வாங்கினாலும் முடிவில் கலப்பது உப்புத்தண்ணீரில். நல்ல தண்ணீரில் சோறு வடித்தாலும் குளம்புக்கு உப்பு போட்டுத்தானாகவேண்டும். உப்பைப்போன்றது தமிழ். அது கலக்காமல் கலாச்சாரமே உற்பத்தியாவதில்லை. உப்பு கலந்த தண்ணீர்தான் குருமாரின் வேதாந்தம். உப்பென்று துப்பிவிட்டு, சற்று தூரம் வந்து சமுத்திரக்

கரையில் ஊற்று தோன்றினல் நல்ல தண்ணீர் உண்டாகும். அதுபோல், பிறர் தன்னை வெறுத்து ஒதுக்கத்தான் ஞானிகள் சமுத்திரம்போல் காட்சியளிக்கிறார்கள். அவர்களையடையுமுன், சற்று தூரத்திலிருந்தே நம்மை நல்ல தண்ணீராக்கிக்கொண்டு, சமுத்திரத்திடம் சென்றால்தான் பயனுண்டு. இதன் எதிரொலிதான் காவிரி சங்கமமாகுமிடத்தில் கண்ணகி பிறந்தாள். நல்ல தண்ணீரும், உப்புத் தண்ணீரும் கலந்த இடத்தில் பிறந்ததால்தான், அவள் வாழ்க்கையின் தலைவன் கோவலன் உப்பில்லா மாதவிபாலிருந்து, அவளையும் உப்புள்ள உத்தமியாக்கிவிட்டு பாட்டால் வெறுத்து கண்ணகியையடைந்தான்.

"காவிரி" என்றாலே வயல்களின் வளர்ச்சி. மொழி வெறியில்லா இசை. தனக்கெனத் தனிப் பாணிகொண்ட பந்தநல்லூர் நாட்டிய பாணி. தர்க்கத்தின் உறைவிடம், கறுப்பான கொடியை பொறுப்பாகப் பிடிப்பவர்கள். அத்தனையும் நிறைந்தது. இசைக்கு நல்ல பெயர் வேண்டுமென்றால் தியாகய்யர் பாட்டுப் பாடவேண்டும். அந்தப் பாட்டுத் தெலுங்குப்பாட்டு. தியாகய்யரின் சமாதி பஞ்சநதியும் கலந்த காவிரிக் கரையில். தமிழனுக்கு மொழி வெறியென்று பிதற்றும் பித்தர்கள்கூட தியாகய்யர் உத்சவத்திற்கு தலைமை வகிக்கச் செல்வார்கள்.

அவ்வளவு பெருமையுள்ள காவிரிக்கரையில் வண்டல் மண்தானிருக்கும். கவனக்குறைவாக கால் வைத்தால் சறுக்கி விழுந்துவிடுவோம். அதனால் காவிரிக் கரையிலுள்ளவர்கள் எந்த நாட்டிற்குப் போனலும், சறுக்கி விழாமல், அந்நாட்டோடு ஒத்து வாழ்ந்துவிடுகிறார்கள். காவிரித்தண்ணீருக்குத் தனிப் பெருமையுண்டு எவனவது

நன்ருகப் பாடிஞலும், பேசிஞலும், "காவேரித் தண்ணீல்ல, அது போட்ர போடு" என்று சொல்வதைப் பார்த்திருக்கலாம். தண்ணீரிலா பெருமை. அது ஓடிவரும் நிலத்தின் நிலேதான் காரணம். பூமி, சதுப்புநில பூமி. சதுப்புநில பூமி என்றும் பிராணவாயுவையும், கரியமில வாயுவையும் மாற்றிக்கொண்டேயிருக்கும். மாற்றிக்கொண்டேயிருப்பதால், ஜல வாயு தன்னிடமுள்ள வீழ்ச்சி சக்தியை கரியமில வாயுவிடம் கொடுத்துவிட்டு, பிராணவாயுவுடன் கலந்தே ஓடுகிறது. கரியமில வாயு இரவில் வெளியாகிவிடுகிறது. கரையில் மூங்கில் மரங்களிருப்பதால், இரவில் உரசியாடும் போது உண்டாகும் பாஷாண வாயு, கரியமில வாயுவின் சக்தியைக் குறைத்துவிடுகிறது. அதஞல் காவிரியின் தண்ணீரில் பிராணவாயு கலந்த ஒரு ஜீவசக்தி உண்டாகிறது. ஜீவசக்தி வயல்களுக்குப் பயன்பட்டு, இருபோக சாகுபடி நடக்கிறது. உண்பதற்கு வழியுள்ளவன், சோம்பேறியாக வாழமுடியாமல் ஓய்வு நேரங்களில் எல்லாக் கலே சம்பந்தமான புத்தகங்களேப் படிக்க வாய்ப்பிருப்பதால்தான் காவிரிக்கரையிலுள்ளவர்கள் தர்க்கவாதிகளாக மாறிவிட்டார்கள். பழமொழிக்குப் பண்பாடிதுதானே தவிர வேறில்லே. காவிரிக்கரையில் எத்தனேயோ பேர்கள் உலக ஞானம் தெரியாதவர்களில்லேயா?

நாதஸ்வர சக்ரவர்த்தியான இராஜரெத்தினம்பிள்ளே மட்டுமா நாதஸ்வரம் வாசிக்கிருர்கள். அந்தக் கலேயிலும் எத்தனேயோபேர்களிருக்கிருர்கள். அதே விதமாக, உழைப்பின் பயனே வீண் வாதம் செய்யாமலிருக்கத்தான் வேதாந்தத் தர்க்கங்களே ஏற்படுத்தியது. காவிரிக் கரையில் எழுந்த சிலப்பதிகாரம், பாண்டிய நாட்டில் முடிந்து, சேரநாட்டில் கோவில் எழுந்தது. காவிரிக்கரை கலே

பிறந்த இடம். கருத்து பிறந்த இடம். தர்க்கத்தின் உறைவிடம். தந்தைக்கு மந்திரம் உரைத்த மகனைத் தந்த சீர்திருத்தவாதிகளின் புண்ணிய ஸ்தலம்.

**வைகை:** பாண்டி நாட்டில் ஓடும் நதிகளில் எல்லோர்க்கும் தெரிவது வைகைதான். வைகை எனப் பெயர் வந்ததற்குக் காரணம், மீனாட்சியின் கல்யாணத்தில், சிவபெருமானின் தூதனான குண்டோதரன் சாப்பிட்டுவிட்டுத் தண்ணீர் கிடைக்காத காரணத்தால் கை வை என்று சொன்னதும், நதி தோன்றியதாக கதை. கதையை எழுதிய கவிஞன், தமிழன் நடக்கவேண்டிய முறைகளை மறக்கவில்லை.

மன்னன்வீட்டுக் கல்யாணத்தில் தண்ணீருக்குப் பஞ்சம், சோற்றுக்குப் பஞ்சம். வந்த மருமகன் தீர்த்து வைத்தான். கல்யாண வீட்டில் சமைக்கும் சோறு பற்றாக் குறைக்குக் காரணம் அளவுக்குமீறி சாப்பிடும் குண்டோதரன். தமிழகத்தில் இன்னும் சிலர் விசேஷ காலங்களில் பெண் வீட்டாரை அவமானப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் படைத்தவர்களுமுண்டு பெண் வீட்டாரும் சமாளித்துப்பார்ப்பார்கள். நழுவினாற்போலிருந்து மாப்பிள்ளை வீட்டாரை சமாதானப்படுத்திவிடுவார்கள். ஆனால் மாப்பிள்ளையாகிய பரமசிவனோ, தாய் தந்தையற்றவர். பூதத்தையும், கணங்களையும் துணையாகக் கொண்டவர். சங்கை நாதமாக்கி இவ்வுலகத்தையே ஓம்கார வடிவத்தில் ஆழ்த்தியவர். பஞ்சபூதங்களை அக்ஷரமாக்கி, நெற்றிக் கண்ணை அறிவாக்கி தீப்பிழம்பான சோதி வடிவமானவர். அவ்வித பெருமையுடைய வடநாட்டுக் கடவுள், தென்னாட்டுத் தமிழ் கன்னி மீது காதல் கொண்டு மணம் புரிய

வந்தார். இங்குள்ள தமிழ் அவரை அழைத்து வந்துவிட்டது. தமிழ் நாட்டில்தான் பாக்களால் பகவானை வேண்டுவது. வடக்கிலெல்லாம் பஜனைதான். மணம் புரிந்தபிறகு, தன்னிடமுள்ளவர்களின் திறமையை தமிழ் நாட்டோடு ஒத்துப்பார்த்தார். சோறு வேண்டுமென்று சொன்னவுடன், சோற்று மலையே வந்துவிட்டது. தண்ணீரை நினைத்தார். நதியாகவே வந்தது.

சோறு தின்ன குண்டோதரனுக்காக வரவழைத்த வைகையா யிருப்பதால்தான் அடிக்கடி தண்ணீர் வருவதில்லை. ஊற்றில்தான் தண்ணீர் வரும். அன்றே மதுரை மக்களுக்கு ஊக்கத்தோடு உழையுங்கள். அதற்கு வைகை தான் சாட்சியெனச் சொல்லியிருக்கலாம். சோம்பேறிக்கு வரவழைத்த நதியாயிருப்பதால் வற்றிவிடுகிறது. ஊக்கத்தோடு தோண்டினால்தான் தண்ணீர் வரும். அதுபோல் உழைத்துப் பயன் பெறுங்களென்று நமக்குச் சொல்லுகிறது. கைவை என்பதுதான் வைகையாக மாறியதால் கடந்த காலத்தில் கள்ளர் பயம் படிப்படியாக மாறிவிடுமென்றுதான், கள்ளர்களையும், அழகர்களாக்கி, வீரமுள்ள மறவர்குல மாணிக்கங்களாகவும், மாற்றியமைக்களண்ணியே மீனாட்சியின் தமையன கள்ளழகராகக் கற்பனை செய்திருக்கிறான். திருமணத்திற்கு வரும் அழகரைக் கள்ளர் வேஷம் போட்டேதான் கொண்டுவருகிறார்கள். மதுரைக்கு வந்தவுடன், கள்ளர்களின் கருத்தை மாற்றி தசாவதாரக் காட்சி தருகிறார். நவதுவாரங்களையுடைய மனிதனின் அவதாரத்தை, பத்து அவதாரமாக மாற்றிக் காண்பித்தார். பத்தாவது துவாரம் காற்று கலந்த அறிவு. அது இல்லாவிடில் மனிதன் இறந்துவிடுவானென்பதால், அங்கிலே வரும்போது அறிவாகிய ஆண்டவனாக மாறி

உங்களைக் காப்பாற்றுகிறேனென்று ஆற்றில் சொல்லு கிருர். மணலைப்போன்ற எண்ணங்களையுடைய மக்களே, மனமாகிய குதிரையில் வைராக்கியமென்ற கடிவாளத்தி ஞல் அடக்கி அலங்கார புருஷஞக நான் பவனி வருவ தோடு, மண்டபத்திற்கு மண்டபம் தங்கி காட்சியளித்து வருவது, வாழ்வில் எத்தனையோ துன்பங்கள் வந்தபோதி லும், தங்கி, தங்கி யோசித்து, மனமாகிய குதிரையை, கண்டபடி போகாமல் தடுக்கக் கடிவாளமாகிய பக்தி யோடு, எம்மை வணங்குவீராகில் எவ்விதமான துன்பத்தி னின்றும் விடுதலையடையலாமெனத்தான் சொல்கிருர்.

தெற்கெல்லை திருப்பரங்குன்றம். மேற்கெல்லை, நாக மலை, கிழக்கெல்லை யானைமலை, வடக்கெல்லை அழகர்மலை தென்பரங்குன்றம் திருப்பரங்குன்றமாக வாழ்க்கைத் துணைவியோடு திரும்பாமல், காமத்தின் எதிரொலியாக திரும்பினுல் நாகமாகத் தீண்டித் திருத்தி, யானையான பலத்தைத்தந்து தமிழ் அழகர்களாக மாற்றும் மதுரை. அம்மதுரையில்தான் வைகை நதி.

சேரநாட்டிலுள்ள பறம்பையாற்றைப்பற்றித் தெரிந்த வரையில், புறம்பான முறையில் சேரநாட்டவர் பிரிந்து விட்டதால், பறம்பையாற்றுக் கரையைப்பற்றித் தெளி வான விவரத்தைச் சுருக்கி கலைக்கோவில்களைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

தமிழ்நாட்டிலுள்ள கோவில்கள் ஒவ்வொன்றும், ஒவ் வொரு அதிசயம் நிறைந்தது. அதைக் கட்டிய சிற்பிகள் பரம்பரையை நினைக்கும்போது தன்னை மறந்து கட்டியவ ஞகவே இருக்கிருன். மன்னர்களும் கலைஞர்களுக்காகத்

தன் பதவியையே தியாகம் செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் சிறந்த சிற்ப வேலைப்பாடமைந்த கோயில் ஆவுடையார் கோயில்தான். ஒரே கல்லில் அகோர வீர பத்திரர். ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள ஆறுமுகன். எழுதகத்தின் கனபேதங்கள். வெள்ளையன் ஒருவன் வந்து எழுதகத்தின் மீது சுட்டுப்பார்த்திருக்கிறான். சுட்ட இடத்தில் காலணா கனமும், அதைத் தொடர்ந்து ரூபாய்க் கனம்வரையிலடித்திருப்பதைக் கண்டு அவனே வியந்து தமிழ்நாடு ஒரு கலைப் பொருட்காட்சி சாலையென வரைந்தான்.

அதே ஆவுடையார் கோவிலில்தான் சிற்பிக்கு மன்னன் சேவை செய்தான். கும்பாபிஷேக நாள் குறிப்பிட்டாய்விட்டது. வேலை துரிதமாக நடக்கவேண்டும். இரவும் பகலுமாக வேலை நடந்துகொண்டு வருகிறது. மன்னன் இரவு தூங்கவேயில்லை. மன்னனின் கலை ஆர்வம் அழகான கோவிலாக அமைந்துவிடவேண்டுமென்ற எண்ணமுடையவனாகிவிட்டான்.

ஒருநாள் மாலை புறப்பட்டுக் கோவிலுக்கு வருகிறான். ஒரு சிற்பி அர்த்தநாரி உருவத்தைச் செதுக்கிக்கொண்டிருக்கிறான். அவன் பக்கத்தில் ஒரு பையன் எச்சில் படிக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறான். சிற்பி திரும்பி எச்சில் துப்பிக்கொண்டே வேலை செய்துகொண்டிருக்கிறான். அந்தப் பையனையும் சிற்பியையும் கவனித்துக்கொண்டே யிருக்கிறான் மன்னன்.

சிற்பி தன்னை மறந்து சிலையைப் பார்த்துக்கொண்டே வேலை செய்யாமலிருக்கிறான். அந்தச் சமயம் எச்சில் படிக்கத்தை வைத்துவிட்டு, அந்தப் பையன் வெளியே சென்று

விட்டான். இதைக் கவனித்துக்கொண்டிருந்தார் மன்னர். சிறிது நேரம் கழித்து சிற்பி வேலைசெய்யத் தொடங்கினான். மன்னன் யோசித்தான். எச்சிலைத் துப்ப நினைக்கும்போது, எச்சில் படிக்கமில்லாவிட்டால் சிற்பியின் கற்பனைக்குத் தடை ஏற்பட்டாலும் ஏற்படலாமல்லவா? என்று யோசித்து தானே சென்று படிக்கத்தை ஏந்தி பக்கத்தில் நிற்கிறான். இந்தக்காட்சியைப் பார்த்த மற்ற சிற்பிகள் திகைத்து நிற்க, மன்னன் ஜாடை காட்டி பேசாமலிருங்களென்று சொல்லிவிட்டான். சிற்பி வேலை பார்த்துக்கொண்டே எச்சிலைத் துப்பினான். நடுக்கத்தோடு படிக்கத்தைப் பிடித்துக்கொண்டதால், எச்சில் தவறி, மன்னனின் உடையிலும், கையிலும் பட்டுவிட்டது. அதையும் அந்த சிற்பி கவனிக்கவில்லை. படிக்கம் பிடிக்கும் பையனும் வந்து திகைத்து நிற்கிறான். இரண்டாவது தடவை எச்சில் துப்ப படிக்கம் சரியான இடத்தில் இல்லாததால், சிலையைப் பார்துக்கொண்டே, பின்புறமாகக் கையாலடித்தான். கையில் பட்டது சிறுவனுயில்லாததால் திரும்பிப் பார்க்கிறான். பார்த்தவுடன் வாய்குழறித் தடுமாறி,

மன் : பிழை நேர்ந்துவிட்டது, மன்னிக்கவேண்டும்.

ம : நான் உன்னை மன்னிப்பதா, நீயல்லவா என்னை மன்னிக்கவேண்டும்.

சி : உயர்ந்த வார்த்தை. நாடாளும் மன்னர் எனக்கு பணிபுரிவதா?

ம : என்னைப், புகழுலகத்தில் இடம் பெற வைக்கும் ஆசிரியர்களாகிய நீங்கள்.........

சி : கற்களில்தான் எங்கள் கற்பனை. நாட்டிலுண்டாகும் சங்கடங்களைத் தீர்த்து வைக்கும்.........

ம: பொறுப்புதானே நீங்கள் செய்யும் சிலைவடிவங்கள். கற்களைச் செதுக்கி சிலையாக்குகிறீர்கள். நாங்கள் பாமரரைத் திருத்த சட்டமியற்றி சன்மார்க்கிக ளாக்குகிறோம். அவர்கள் துன்மார்க்கர்களாகாம லிருக்க கோவிலைக் கட்டச்சொல்கிறோம். அந்த மாற்றத்திற்குக் காரணமான ஆசிரியர்களல்லவா தாங்கள்?

சி: ஆசிரியராயிருந்தாலும், மன்னன் எச்சிலை.........

ம: என் பதவிக்கு மதிப்புக் கொடுத்திருக்கிறீர். பதவியிலிருந்த எனக்கு ஒரு எச்சில் படிக்கத்தைக் கூட பிடிக்கத் தெரியவில்லையே என்ற வருத்தம். எச்சிலை நான் இகழ்கிறேன். எச்சில் ஊறும் இடத்தில்தானே கற்பனையும் ஊறுகிறது. எச்சில் என் உடையில் பட்டவுடன், ஒரு தொழிலாளியாக மாறி வாராதமைக்குக் கிடைத்த தண்டனை.

சி: தங்களின் கலை ஆர்வத்திற்கு நன்றி. மன்ன தங்க ளின் சேவைக்கு எங்கள் பரம்பரையே நன்றி செய்யக் கடமை பெற்றிருக்கிறோம். கலையும், கற்பனையும் ஒன்றுபட்டு உழலும்போது, தன்னை மறக்கும் நிலையிலாழ்ந்துவிடுவதால், கடவுளா யிருந்தால்கூட தனக்குக் கட்டுப்பட்டவனென்ற இறுமாப்பு வந்துவிடுகிறது. அந்த இறுமாப்பு இல்லாவிட்டால், இறைவனை வடிவழகனாகச் செதுக்கமுடியாது. தங்களின் மேலான ஆதர விற்கு எனது இதய வணக்கம்.

ஆனதால் அந்தக் காலத்தில் கலைஞர்களோடு மன் னன் சம அந்தஸ்துடன் பழகிய காரணத்தால்தான்

விண்ணுயர் கோபுரங்களும், மகத்தான கோவில்களும் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளி, தன் தொழிலுக்கு மதிப்பு போட்டானே தவிர, உழைப்புக்கு மதிப்புப்போடவில்லை. "வேலைக்குத் தகுந்த கூலி" என்ற போராட்டத்தை நடத்தியிருந்தால், இத்தனை விசித்திரங்கள் தோன்றியிருக்காது. பண்டையத் தொழிலாளிகள் மன்னர்களை முதலாளியாக எண்ணவில்லை. மன்னர்களும் தொழிலாளிகளுக்கு கலை வழியாக மரியாதை தந்தார்கள். மரியாதை யிருந்திராவிட்டால் மகத்தான பொறுப்புடன் இவ்வளவு பெரிய காரியங்களைச் சாதித்திருக்கமுடியாது.

சுனை ஊற்றில் கடவுளையமைத்தார்கள். வற்றாத ஊற்றில் ஈசனையமைத்தார்கள். திருவானைக் காவலிலுள்ள ஈஸ்வரன் சன்னதி, ஊற்றிலிருக்கிறது. ஏதாவதொரு அதிசயத்தை கடவுளோடு இணைத்த காரணத்தால்தான் ஊரைச்சுற்றி பார்க்கவேண்டிய அவசியமேற்பட்டது. ஸ்ரீரங்கம் கோவிலைக் கட்டியவன் கோட்டையாகக் கட்டினான். கோட்டைக்குள் ரங்கநாதனைப் படுக்கவைத்துவிட்டான். அஞ்சு தலைப் பாம்பில் படுக்கவைத்து, பெண்களை கால் பக்கம் வைத்து, வயிற்றில் மூன்று தலையுள்ள தெய்வத்தை உயரத்தில் வைத்துவிட்டான். தலைப்பக்கம் காவிரி. கால்பக்கம் கொள்ளிடம். அஞ்சுதலை என்றால் பயப்படுதலென்றுதான் அர்த்தம். எவ்வளவு கோட்டையாகிய உலகத்தில் மனிதன் வாழ்ந்தாலும், மாயையில் சம்பந்தப்படும் வரையில் பயப்பட்டுத்தானாகவேண்டும். பயப்படுதலாகிய செய்கையில் படுத்து, பாவையர்களைக் கால்பக்கம் வைத்து, வயிற்றிற்காக, ஆணவம், கன்மம், மாயை, மூன்றையும் சமாளித்து வாழ்வதுதான் வாழ்க்கையென்பதைக் கோவிலுக்குள் வைத்தான். வற்றாத ஜீவ

நதி காவிரியைத் தலைப்பக்கம் வைத்திருப்பது, ஆண்கள் உள்ளதைக் கொண்டுதான் சமாளிப்பார்களென்றும், இடது பக்கமுள்ள கொள்ளிடம் தண்ணீரில்லாதது. வந்தாலும் நிறைய வரும். அது பக்கம் பெண்ணை வைத்திருப்பது, வரண்ட வாழ்க்கையை ஜீவநதியாக்கும் திறமையுண்டென்றும், அவளின் சக்தியைத் தெரியாமல் நடந்து கொண்டால், பெரும் வெள்ளமாகிய கோபத்தால் அழித்து விடுவாளென்றும் சொல்லிவைத்திருக்கிருன். இவ்வித கற்பனையுள்ள கோவில்களுக்கு ஸ்தல புராணம் எழுதுபவர்கள், புராணங்களையே இணைத்து எழுதுவதால், நம்பி நம்பாதவனுக தன் வாழ்க்கையை விளம்பரப் புகழோடு இணைத்து வாழ்பவனுக்கு திட்டுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது.

உயர்ந்த கருத்துக்களை மேல்நாட்டுப் படிப்பினுல்தான் உணரமுடியுமென்று சொல்பவர்களையும், திகைக்க வைத்திருக்கிருர்கள் பழமையான கலைஞர்கள். விஞ்ஞானத்திற்கும் இடமளித்திருக்கிருர்கள். மருத்துவக் கலையை சடங்காக்கி, சடங்கு மூல்யமான பயிற்சியால் நிவிர்த்தி செய்யும் மார்க்கங்களை வழிவகுத்திருக்கிருர்கள். ஒவ்வொரு சடங்கும் மருத்துவ சிகிச்சையாகவே யிருக்கிறது. பழனியில் அக்னி நக்ஷத்திர நிவர்த்திக்கு கிரிப்பிரதக்ஷிணம் செய்தால் வயிற்றுவலி, நீர் ரோகம் முதலியவைகள் நிவர்த்தியாகின்றனவென்று எல்லோரும் சென்று சுற்றுகிருர்கள். சுற்றுகிறவர்கள் கடவுள் நம்பிக்கையில்தான் சுற்றச் செல்கிருர்கள். மருத்துவர்கள் சொன்னுல்கூட போய் சுற்றமாட்டார்கள்.

வயிற்றுவலியையும், நீர் ரோகத்தையும் போக்குவதற்கு என்ன மருந்திருக்கின்றதெனக்கூடக் கேட்கலாம்.

பழனியே ஒரு மருத்துவசாலை. பழமையான கதை. பரம சிவத்திடமிருந்த மாங்கனியைப் பெறுவதற்கு சகோதரர் இருவர் போட்டியிட்டனர். முருகன் உலகத்தைச் சுற்ற வேண்டுமென்ற நிபந்தனையை நம்பி மயிலின்மீதமர்ந்து சென்றுவிட்டதாகவும், விநாயகர் உலகமே உன் வடிவ மென்று பரமனையே சுற்றிவந்து கனியைப் பெற்று விட்டார். உலகத்தைச் சுற்றிவந்த முருகன், கோபமுற்று வந்துவிட்டதாகவும், உமையவளாகிய தாய் பழம் நீயென்று சொன்னதாகவும், அதனுல்தான் பழனியெனப் பெயர் வந்ததாகவும் புராண வரலாறு கூறுகிறது.

ஓம்கார வடிவத்தை விநாயகமாக வைத்த காரணத் தால், நாதாந்த வடிவந்தான் தன் தந்தையென்று சுற்றி விட்டார். தன் முகத்தோடு ஐந்து முகத்தை தோற்று வித்து, ஆறுக்கி, அந்த ஆறுமுகத்திலுள்ள நெற்றிக் கண்ணின் தீப்பொறியால் முருகனை உண்டாக்கினுர். பஞ்சபூதமான பஞ்சாக்ஷரத்தோடு, பீஜாக்ஷரத்தை ஏக முகமாகக் கலந்த காரணத்தால் தீயாக மாறி, தீக்கடவு ளாக மாறிற்று. உடற்கூறில், பஞ்சேந்திரியங்கள், மூலாதார உஷ்ணத்தால் பாதிக்கப்பட்டு, சீதளத்தோடு கலக்கும்போது ஜுரம் உண்டாகிறது. அதே ஜுரம் பித்த வாயுவோடு கலந்துவிட்டால் சன்னி பிறந்து மரணம் கூட சம்பவிக்கிறது. அதற்குச் சிகிச்சை உஷ்ணமான மருந்தையே கொடுத்துவிடுகிறோம். வாதம், பித்தம், சிலேஷ்மம், சூட்சுமம், பூதம், முதலிய ஐந்து நாடிகளின் ஓட்டம், இதயத்தில் நடமாடும் காற்றோடு கலக்கும்போது மனிதன் வாழ்கிறுன். கலக்காவிட்டால் சவமாகிறுன். இந்த உண்மையில் முருகன் தோன்றியதால் காற்றோடு கலக்க எண்ணி மேகத்தைக் கண்டு ஆடும் மயிலின்மீது

சுற்றி, காற்று அடங்கும் மூலாதாரத்திற்கு வந்தபிறகு தான், அருளாதாரத்தின் வெற்றியைக் கண்டு கோபப் படுகிறான். கோபப்பட்ட மகனை சிதாகாச வடிவமான தாய், பழமாகிய ஜீவனே நீதானேயெனக் கேட்கிறாள். கேட்ட காரணத்தினால்தான் தண்டபாணி விக்ரகத்தை போகர் செய்யும்போது நவபாஷாணங்களைக் கட்டி செய்துவிட்டார். நவ துவாரத்தையும் பாஷாணம் போன்றவைகளாக்கிக் கொள்ளும் மனித வர்க்கம் தன்னை வணங்கியாவது விஷத்தை மாற்றிஅமுத நிலையாக வாழவேண்டுமென்ற நல்லெண்ணமாயிருக்கவேண்டும்.

நவபாஷாணத்தாலான விக்ரகத்தை வைத்த மலை மீதுதான் கடம்ப மரங்கள் வளர்ந்திருக்கின்றன. வெயில் காலத்தில்தான் கடம்ப மலர் மலரும். சித்திரை 23உ முதல் வைகாசிமீ 7உ வரையில் கொடைக்கானலில் அடிக்கும் காற்று பழனி மீது அடிக்கும். கடப்ப மலர் தாம்பர சத்து. கொடைக்கானலிலிருந்து அடிக்கும் காற்று வங்கம் (ஈயம்). இந்த இரண்டு சத்துக்களும், நீர் ரோகத்தையும், வயிற்றுவலியையும் போக்கிவிடும். சித்தர்கள் சொல்லியதை, இடையில் வந்த குணசித்தர்கள் பண்பாட்டுக்குத் தந்தவாறு திருத்தியமைத்துவிட்டனர் திருத்தி யமைத்ததையும் கடவுட்டண்மையோடுதான் திருத்தியிருக்கிறார்கள்.

உள்ளிருக்கும் தண்டபாணிக்கு இரவில் கட்டும் கோவணத்தை, காலையில் தண்ணீரில் நனைத்து, அத் தண்ணீரை எல்லோரும் பருகுகின்றனர். குஷ்டம், மேகம் போன்ற வியாதிகள் ஆரம்பகாலமாயிருந்தால், நீங்கிவிடுகின்றன. நெற்றியில் சாத்தும் சந்தனம்

சூதக வியாதிகளுக்கு உதவுகிறது. பாஷாணக் கட்டில் வீரமும், பூரமும், நல்ல முறையில் அமைந்திருப்பதால் தான் வசியசக்தியுமிருக்கிறது. வசியத்தில் கட்டுப்படாதது வீரமும், பூரமும் ஆகும். வீரமுள்ள ஆடவனும், பூரமாகிய உறுதியுள்ள பெண்ணும், வசியத்திலகப்படமாட்டார்கள். கட்டுப்படாத பாஷாணத்திற்குப் பெயர், வீரம், பூரமாம். ஆண்டவன் தலையில் வீரத்தையும், இடுப்பில் பூரத்தையும் அமைத்திருக்கிறார். அதனால் தலையில் மூளையுள்ளவனை யும், மூளையில்லாமல் காமமே வாழ்வாகக் கொண்டு பணத்தைச் சேர்ப்பவனையும் தன்வயப்படுத்திவிடுகிறான் பழனி நாதன்.

பூட்டிய பூட்டின் சாவியை இடுப்பில்தான் சொருகிக் கொள்கிறோமே தவிர, வேறிடத்தில் வைத்துக்கொள்வ தில்லை. தான் சம்பாதித்த பொருளைக் காப்பாற்ற உதவும் கருவியை இடுப்பில் வைத்துக்கொள்கிறோம். வாழ்விலும் இன்பத்தின் காரணமான விந்தாகிய சொத்தையும் இடுப்பில்தான் வைத்திருக்கிறோம். பூட்டைத் திறக்கச் சாவியையும். மனப்பூட்டைத் திறக்க அறிவையும் சாவியாக உபயோகிக்கிறோம். அந்த அறிவைக் கடவுளாக்கி, பகுத் தறிவு ஆறுவது அறிவாயிருப்பதால் ஆறுமுகமாக்கிவைத் தோம். ஆறு முகத்தையும் ஒருமுகமாக்கிவிட்டதால் ஊன்றுகோலுக்கு கையில் ஒரு தடியைக் கொடுத்து வைத்திருக்கிறோம். காரணம், "ஐந்தறிவைத் தடியில் வைத்திருக்கிறேன். சந்தர்ப்பத்தில் ஐந்தறிவு கொண்டு அறிவாகிய கடவுளை நிந்தித்தால், தடியாலடித்து, தமிழால் அணைத்து, அருளால் தன்வயமாக்கிக்கொள்வேன்" என்று அறிவிக்கும் சின்னம்தான் தண்டபாணியென்ற தமிழ்கண்ட கடவுள்.

இவ்வளவு சிறப்பினைத் தந்த தமிழ்நாடு சீர்கெட்டு வாழ்வதைக்கண்டு உள்ளம் நோகத்தான் செய்கிறது. நொந்தாலும், பழமையைக் கண்ட தமிழ், புதுமையைக் கண்டு மிரளாமல், தன்னழகைக்கொண்டே இதுவரை காலந்தள்ளிவருகிறது. கவிதைகள், கட்டுரைகள், காவியங்களெல்லாம் தற்காலத்தில் எவ்வளவு மாறுதலடைந்து விட்டாலும், பழமையில் தோன்றியதைப்போல் செய்ய முடியவில்லை. பழமையில் சொன்னதை மாற்றி புதுமையாக்க முயற்சித்தாலும், புதுமை வெகுநாட்களுக்கு நிலைக்கவில்லை.

நிழல்படத்தை எடுத்துக்கொள்வோம். புராணக் கதை நடந்துகொண்டு வரும்போது எல்லோரும்தான் பார்த்தார்கள். சமூகக் கதைகள் வந்தபொழுது சிறிது நாள் வரையில் அமோக வரவேற்பிருந்தது. கடவுள் வந்தால் பணம் வராதென்ற முடிவிலிருந்தபொழுது, துணிந்து விநாயகரையும், முருகனையும், தோன்றச்செய்து ஔவையார் படமெடுத்த பெருமை திரு. எஸ். எஸ். வாசனையே சாரும். அடுக்குச்சொல் வசனகர்த்தாக்கள், துடுக்கான பேச்சுக்காரர்கள், மிடுக்கான நடையில் கதை அமைப்பவர்கள், இத்தனைபேரு மெழுதிய சீர்திருத்தக் கதைகள், சீராயிருந்த கலாச்சாரத்தை திருத்தம் செய்து அனுச்சாரமாக்கித்தான்விட்டார்கள். பழமையிலுள்ளவர்கள் திருத்தத்தைச் சமுதாயத்தில் வைத்து, காலநிலைக்கேற்ப சீர் செய்தார்கள். அப்படிச் செய்திராவிட்டால், இந்த சீர்திருத்தவாதிகளின் வாதப்பிரதிவாதங்களுக்கு இடமிருந்திருக்குமா? பாருங்கள் தமிழ்நாட்டு அறிவுத்திறனை.

தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் சகல கலைகளிலும் தேர்ந்தவர்களா யிருந்திருக்கிறார்கள். சோதிடத்திலும் தேர்ந்தவர்கள்தான். மலையாளத்திலுள்ளவர்கள் பரல் போட்டுப் பார்த்துச் சொல்வார்கள். தமிழ்நாட்டில் ஒப்புயர் வற்ற நூல் சினேந்திர மாலை. சினேந்திர மாலையை முறைப் படி பயின்றவன், திருட்டுப்போன சொத்தை மதிப்புப்போட் டுச் சொல்வான். அதிலென்ன சிரமமென்றால், சினேந்திர மாலையை மூன்று பிரிவாக்கிவிட்டார்கள். தாது, மூலம், ஜீவனெனப் பிரித்துவிட்டனர். பொதுவான பெயர்களை வைத்தால் நிதானம் செய்து சொல்லவேண்டும். சோதி டத்தை நம்பாதவர்கள் தனக்கு சிரமம் வந்தபிறகு நம்பு கிறார்கள். வருங்காலம் தெரிந்த சோதிடர்கள் கேவலமாகத் தெருக்களில் உட்கார்ந்திருக்கிறார்களே தனக்கே தெரிந்து கொள்ளமுடியாதவர்கள் இவர்கள் எப்படிப் பிறருக்குச் சொல்வார்களென்ற வினாவை அறிவியல் வாதிகள் மேடை களில் பேசி ஆர்ப்பாட்டம் செய்வார்கள். ஆனால் அவர்கள் அவர்களுக்குத் தெரியாமல் அவர்களின் தலைவர்களை மூடத்தனத்துடன் பின்பற்றுவார்கள். தனக்கே அறி வுள்ள இந்த வாதிகள் தலைவர்களின் அறிவை ஏன் பின் பற்றவேண்டும்?

பள்ளிக்கூட ஆசிரியரிடம் படிக்கும் மாணவன், உத்தி யோகத்திலமர்ந்து, தனக்குச் சொல்லிக்கொடுத்த ஆசிரி யரைச் சோதிக்கும் உத்தியோகஸ்தனாக வருகிறான். தன்னிடம் படித்த மாணவன்தானேயென்று அலட்சியமா யிருக்கமுடியாமல், அந்தப் பதவிக்காக மரியாதை செலுத்தவேண்டிவருகிறது அதுபோல் கிரகநிலைமையை உணர்ந்தவர்கள் எல்லோருமிருக்கமுடியாது. சோதிடர்கள் எல்லோரும் அருள் வாதிகளல்ல. வயிற்றுப்பிழைப்பு

அதனால் நடக்கவேண்டியிருக்கும்போது சோதிடக் கலையை தன்னலத்திற்காக மாற்றவேண்டி வருகிறது. அதுவும் நம் தமிழ்நாட்டில் வாழ்ந்தவனுக்கு மாரடிக்கும் கூட்டத்தைத்தான் வளர்த்திருக்கின்றனரேயொழியத் தாழ்ந்தவனைக் கைதூக்கிவிட ஒருவரைக்கூட உண்டாக்கவில்லை. சோதிடத்தை வானிலை ஆராய்ச்சியோடு ஆராய்ந்தவர்களில்லாவிட்டால் குடந்தை நாகேஸ்வரன் கோவிலைக் கட்டி, அதில் சூரிய வெளிச்சத்தை ஈஸ்வரன் மேல் படும்படியாக வைத்திருக்கிறார்கள். சித்திரை மாதம் 11, 12, 13 தேதிகளில்தான் சூரியன் புறப்பட்டவுடன், அந்த ஒளி லிங்கத்தின் மீது படுகிறது. உத்ராயணத்தில் சூரியனுடைய கதிவேகத்தை அறிந்து கட்டியிருக்கிறான். அறிவோடு அதிசயத்தையும் இணைத்த கலைஞர்களாகவே வாழ்ந்ததினால்தான், அறிவுள்ள தமிழ்நாடு, தமிழை ஆட்சிமொழியாக்காத அதிசயமாக இன்று காட்சியளிக்கிறது.

வீரமுண்டு, போருண்டு, எல்லாம் அந்தக்காலத்தில். இந்தக்காலத்தில் வீரம், பிறரை வஞ்சிக்கும் நிலையிலும், மாற்றுமொழியாருடன் கலந்து தமிழ்நாட்டைக் கெடுக்கப் பயன்படுகிறது. இதை மாற்ற நினைப்பவனை குறுகிய புத்தியுள்ளவனென்ற பட்டமளிப்பு விழா நடத்துகின்றனர். தமிழ்நாட்டின் கலைகளையும், செல்வங்களையும், தன்னதாகப் பாவிக்கும் சுதந்திர உணர்ச்சி இன்னும் நம்மவர்களுக்கு வந்தபாடில்லை. தன் காரியம் நிறைவேற யாரையும்,........? நாட்டையே காட்டிக்கொடுக்கவும் தயாராகயிருக்கின்றனர். கடந்தகாலச் சரித்திரத்திலும் புதுக்கோட்டை மன்னர்களிருக்கத்தான் செய்தார்கள். தற்கால

சரித்திரத்திலும் புதுக்கோட்டை மன்னர்கள் பரம்பரை பலரிருக்கத்தான் செய்கிறார்கள்.

தமிழ்நாட்டில் வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாற்றை அறியாதவர்கள் ஒருவருமிருக்க மாட்டார்கள். வீரனாக வாழ நினைத்தான், வாழ்ந்தான். முடிவில் இனம் இனத்தையே கெடுத்த விதமாக, தமிழனைத் தமிழனே காட்டிக்கொடுத்துவிட்டான். எதற்காகக் காட்டிக்கொடுத்தான்? நாடு பெறும் ஆசைக்காக. அதுவும் யாரிடம்? வெள்ளைக்காரரிடம். ஆனால் தற்காலத் தமிழர்கள் புதுக்கோட்டை மன்னனுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்துதிருக்கிறார்கள். ஒரு நாட்டைப் பெற தன்னினத்தைக் காட்டிக்கொடுத்தான். அமைச்சர் பதவிக்காக நாட்டின் எல்லையையே விட்டுக்கொடுத்து, இன்னும் தமிழனாக, தமிழ் நாட்டானாக வாழ்கிறார்கள். இவர்களுக்குப் புத்தி சொல்ல ஒரு இயக்கம் தோன்ற வேண்டுமென நினைத்த தமிழ் கட்டபொம்மனைப் புளியமரத்தில் தான் தூக்குப்போட வைத்தது. ஊரின் பெயர் கயத்தாறு. இரண்டையும் இணைத்துப் பார்க்கும்பொழுது, தமிழ்நாட்டின் அரசியல் வாதிகளே தமிழுக்குத் துரோகம் செய்வார்கள், அதைப் பொருட்படுத்தாமல் புளியமரத்தின் தன்மைபோல் தமிழுக்குச் சேவை செய்பவர்களும் தோன்றுவார்களென்று தெரிகிறது.

கயத்தாறு, காட்டிக்கொடுக்கும் கயவர்களை ஆறு போல் தமிழகத்தில் உலவ விட்டதால்தான், தமிழ்நாட்டு சுதந்திர வீரனைக் கயத்தாற்றில் தூக்குப் போட்டார்கள். புளியமரம், இலையும் புளிப்பு, காயும் புளிப்பு, பழமும் புளிப்பு. வேறு எந்த மரத்திற்கும் இந்த குணம் கிடை

யாது. சுதந்திர புருஷனை வேறு மரத்தில் தூக்குப்போட்டால் சுதந்திர உணர்ச்சி போய்விடுமென்ற எண்ணம் இந்த நாட்டிற்குத் தோன்றியிருக்க வேண்டும். உடல், பொருள், ஆவி மூன்றையும் அடிமையை அகற்றி சுதந்திர புருஷர்களாக வாழ்வதற்குத் தத்தம் செய்தவனை மூன்று ஒரே குணமுடைய புளியமரத்தில்தான் தூக்கிலிட்டிருக்க வேண்டும். தூக்கில் சாகும்போது கட்டபொம்மன் மரத்தைப்பார்த்து "மரமே, உனக்கிருக்கும் தேசப்பற்று கூட, இங்கு நிற்பவர்களுக்கு இல்லை. உன் இலையிலிருக்கும் சுவைகூட என்னைக் காட்டிக்கொடுத்தவர்களுக்கில்லை. உன் காயிலுள்ள புளிப்பு இங்குள்ள வெள்ளையர்களுக்கு இல்லை. உன் பழத்தின் நிலைதான் வருங்காலத் தமிழகத்திற்கு ஏற்படும். பழமானபிறகு வெளி ஓட்டிற்கும், உள்ளிருக்கும் பழத்திற்கும் சம்பந்தமில்லாமல் போய்விடுகிறது. அதுபோல் சுதந்திரத்தைப் பழமென்று நினைக்குமளவிற்குக் கொண்டுவந்துவிட்டேன். மேலிருக்கும் ஓடாகிவிட்டார்கள் நம் செந்தமிழ்நாட்டு மன்னர்கள். என்னையும் ஓடாக்கி குற்றவாளியாக்கிவிட்டார்கள். வெளி ஓட்டைத் தூக்கிலிட்டார்கள். உள்ளிருக்கும்பழத்திலுள்ள கொட்டை விதையாகி அநேக கட்டபொம்மன்களை உற்பத்தியாக்கி விடும் நிலைமையை உண்டாக்கி விடுவாயென்று நம்புகிறேன்" என்று சொல்லியிருக்கலாம். மேலும் கட்டபொம்மன் தெலுங்கு நாட்டிலிருந்து வந்து குடியேறியவன். குடியேறியவனால்தான், குடியேற நினைக்கும் வெள்ளையனை விரட்டப் பாடுபட முடியுமென்ற கருத்தும் கிடைக்கிறது. மூன்று குணமும் ஒரே மரத்திலுள்ளதால், தமிழ் ஆட்சி மொழியாக, மூன்று மொழியாளர்களும் நம்மை எதிரியாக நினைத்துத்தான் பின் நம் தமிழ் ஆட்சிமொழியாகும்.

ஆந்திர, கேரள, கன்னட, முதலிய மும்மொழியாரும் நம் ராஜ்யத்தில் ஒத்திருந்து ஒவ்வொருவராய் பிரிந்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு விடுதலைக்கு வெள்ளையரின் கொடுமைக்குப் பலியானான் கட்டபொம்மன். சுதந்திர இந்தியாவில் மொழிச் சுதந்திரத்திற்காக உயிரையே பலியிட்டு பொட்டி ஸ்ரீராமுலு ஆந்திர மாகாணத்தைப் பெற்றான்.

நம் சுதந்திர நாட்டில் மொழிவழி மாகாண அமைப்பிற்கு, நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே இடையூறோடு துப்பாக்கிக் குண்டும் பரிசாகத் தருகின்றனர். பரிசாகத் தருவதைப் பெருமையோடு வேறு சொல்லிக்கொள்கிறார்கள். நாட்டில் வாழும் ஒவ்வொரு மொழியும் அவரவர்களுக்கு உயர்வு பெற்றது, ஒவ்வொரு மொழியாளனும் தன் தேசத்திற்குப் பாடுபடும்போது, நம் தமிழன் மட்டும் பரந்த மனப்பான்மையில் வாழ்கிறான். மதுரையில் வாழும் தேசபக்தனோ, மீன் கொடியைக் கருவாட்டுக் கொடியாக்கிப் பேசுகிறான். பாவம்! பதவி மீன் மக்களின் உதவி வோட்டில்லாவிட்டால், லஞ்ச உப்பைப் போட்டுக் காய வைத்து வாடையை மத்திய தரத்தினர்க்குக் காண்பித்து தன் தேச சேவைக்கு விளம்பரம் தேடும் குணம் படைத்தவர்கள்; ஐயோ பாவம்! அன்னவர்களைக் கண்டு பரிதாபப் படுவதைத் தவிர வேறு வழியில்லை.

தமிழ்நாட்டின் வீரத்தைப்பற்றிய நிகழ்ச்சிகள் எத்தனையோ இருக்கின்றன. அத்தனை வீரமும், அறத்திற்குப் புறம்பானவையல்ல. அறத்தை அரணாக வைத்துத்தான் வீரத்திற்கு இடமளித்தார்கள். தூது அனுப்புவது தூதில் இயல்பைத் தெரிந்துகொள்வது. பின் போருக்குத் தயா

ராவது. போரிலும் கடமையிலும் தவராத தர்மத்தைப் பின்பற்றுவது. இவ்வளவோடு பெண்களையும் வீர முள்ளவர்களாகவே பழக்கி வைத்திருக்கிறார்கள்.

ஒரு நாட்டரசனுக்கும் மாற்றுநாட்டரசனுக்கும் போர் மூண்டது. வேலடித்துக் கொடுக்கும் வம்சத்தில் பிறந்த ஒருத்தி, தன் சகோதரனை யுத்தத்திற்கு அனுப்புகிறாள். மாலையில் சகோதரனிறந்த செய்தி கிடைத்தது. அன்று தன் தலைவனிடம்,

"இன்று தாங்கள் யுத்தத்திற்குச் செல்லவேண்டும்"

"நானா, நான் இறந்துவிட்டால் நீ விதவையாக......

"வீரத்துடனிறந்தால், வீரமுள்ள ஆத்மாவைத் தலைவனாகப் பாவித்து வாழ்வேன்" என்று சொன்னவுடன் யோசித்துக்கொண்டே செல்கிறான். உலைக்கூடத்தில் கடினமான இரும்பு நெருப்பிலிட்டவுடன், அடிக்க வசதியளிப்பதைக் கவனித்தான். கடினமான இரும்பைக் காய்ச்சி நம் இஷ்டத்திற்குத் திருப்பும்போது, கடினமான யுத்தத்தை, நெருப்பைப்போன்ற வீரத்தை மனதிலிட்டால் ஏன் வெற்றி கிடைக்காதென்று எண்ணி, தான் யுத்தத்திற்குச் செல்வதாகத் தலைவிக்குச் சொல்லியனுப்புகிறான்.

யுத்தத்திற்குச்செல்ல தயாரென்று சொல்லியனுப்பிய வுடன் மிக்க மகிழ்ச்சியடைகிறாள். தலைவனுக்காகப் பால் காய்ச்சுகிறாள். பால் கொதிக்கிறது. கொதிப்பைக் கண்ட வுடன் தீயை வெளியே இழுக்கிறாள். இழுத்தபிறகு தானே சிரித்துக்கொண்டு "கொதித்த பாலைத் தந்தால், உதிக்கும் அன்பால் தங்கிவிடுவானோ" என்ற சந்தேகம் வந்துவிட்டதாக எண்ணுகிறாள். தலைவன் வருகின்றான்.

இருவரும் பாலை அருந்துகின்றனர். காலையில் போர்முரசு கொட்டுகிறது. தலைவியிடம் சொல்லாமலேயே போருக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

காலையிலெழுந்து பார்க்கிருள். முதலில் அவள் கண்களில் பால் பாத்திரம்தான் படுகிறது. அதில் ஆடை படர்ந்திருந்தது. வேகமாகச் சென்று, ஆடை படர்ந்திருப்பதால் மனைவியின் வாடையால் தங்கிவிடுவானேவென்ற பயத்தால் வேகமாக விளக்குகிருள். பாத்திரத்தின் விளிம்பு பட்டு கையில் இரத்தம் வந்துவிடுகிறது. இரத்தம் வந்தவுடன் படுக்கையைத் திரும்பிப் பார்க்கிருள். தலைவனில்லை. "பிரியும் கொடுந்துன்பம் இக்குருதியெனத் தோற்றினையோ" என்று ஆறுதலடைகிருள்.

மாலை செய்தி கிடைத்தது. தலைவன் இறந்துவிட்டான். மாற்று நாட்டு அரசனும், காட்டிக்கொடுத்த மந்திரியும் பவனி வருவதாகக் கேள்விப்படுகிருள். தன் ஒரே புதல்வனைக் கூப்பிடுகிருள். தலையைச் சீவி வெண்ணுடை உடுத்துகிருள். கையிலே வேல் தருகிருள். வேலைத் தந்து, "மகனே, இந்த வேல்தான் கடந்த யுத்த காலத்தில் நாட்டின் மானத்தைக் காப்பாற்றியது. உன் பாட்டனர் மாறுவேடமணிந்துவந்த அயல்நாட்டு மன்னனைக்கொன்று இந்நாட்டு மானத்தைக் காப்பாற்றினர். மகனே! வீரக் கதை சொல்லி பால்தந்தது ஞாபகமிருக்கிறதா?"

"அம்மா, வேலைப் பிடித்தவுடனேயே என் உடலில் ஒரு வேகம் பிறக்கிறது"

"வேகத்தோடு திறமையும் கலக்கவேண்டும்." என்று சொல்லி, தன் மகனையும் கூட்டிக்கொண்டு, பவனி வரும் இடம் நோக்கிச் செல்கிருள். கையில் வேலுடன் போகும்

இளங் குமரனையும், தலைவிரி கோலமாகச் செல்லும் மங்கையையும் பார்த்து வழிவிட்டு விலகுகின்றனர். போகும் வழியில் மகனைப்பார்த்து, "மகனே ஆகாயத்தைப் பார். யார் தெரிகின்றார்கள்?"

"அம்மா, நீதான் தெரிகின்றாய்"

"நான் தெரிவதால் பயனில்லை. உன் தந்தை தெரிகின்றாரா?

"இப்பொழுதுதான் தெரிகின்றார். கருமேகத்திடையே தெரிகின்றார்".

"கருமேகந்தான் இந்நாட்டு ஐந்தாம்படைக்காரர்கள். அவர்களினால்தான் இந்நாட்டு மன்னனும் உன் தந்தையும் மரணமடைந்தனர். உன் தந்தையை வணங்கிக்கொள்"

"அவர்களுக்கு நாட்டுப்பற்று கிடையாதா?"

"நாட்டுப்பற்று வஞ்சத்திலும், சூழ்ச்சியாலும் கலந்தது. முடிவில் அவர்கள் செய்த வஞ்சகமே அவர்களைத் தண்டித்துவிடும். மகனே! ஒரு வரம் வேண்டும்"

"என்னம்மா என்னிடம் வரம் கேட்கிறீர்கள்"

"நீ எறியக்கூடிய வேல், மாற்றுநாட்டு மன்னன் முடியைத் தள்ளி, காட்டிக்கொடுத்த மந்திரியின் நெற்றியில் ரத்தம் உண்டாக்கவேண்டும்.

"அம்மா, குறியைமட்டும் காண்பி."

"மகனே, நீ விடக்கூடிய வேல் குறி தவறிவிட்டால் இந்த நாட்டுச் சரித்திரம் என்ன எழுதும் தெரியுமா? குறிப்பிட்ட ஒரு கணவனுக்கு உன்னைப் பெருத காரணத்

தால் குறி தவறிவிட்டதென விபசாரப்பட்டம் எனக்குச் சூட்டிவிடும்" என்று சொல்லி வேலை எறியச்சொல்ல, முடி வீழ்ந்து, மந்திரிக்கும் காயமேற்பட்டது. பக்கத்தி லுள்ள போர்வீரன் இளங்குமரனை இரண்டு துண்டாக வெட்டிவிட்டான். இரண்டு துண்டுகளையும் மடியில் போட்டுக்கொண்டு, "மகனே, தியாகத்தை இளம் வயதி லேயே செய்துவிட்டாய். நீ போனபிறகு நான் உயிரோ டிருப்பதில் பயனில்லை. உன்னைத் துண்டாடியவன் வாள் தான், இந்நாட்டை இரண்டு துண்டாக்கி விட்டது. மீண்டும் தாய்மையின் மரணத்திலாவது நாட்டுப் பற்றை யும், மொழிப்பற்றையும் விட்டுக்கொடுக்காமலிருப்பவர்கள் வரட்டும்" எனச் சொல்லி தானும் மரணமடைந்தாள். அந்தச்சங்ககால எதிரொலிதான் மகாத்மாகாந்திநாட்டைத் துண்டாக்கிய ஓராண்டு எல்லைக்குள் தன்னையும் தியாகம் செய்துகொண்டு அமரத்வமடைந்தார். அந்த காந்தி சொன்ன மொழிவழிப் பிரிவினையைத்தான் இன்றுள்ள காந்திப்பட விளம்பர தேசியவாதிகள் வெறுக்கின்றனர்.

காந்தியின் நாமத்தைச் சொல்லி சாந்தி பெறவேண் டிய மக்கள், காந்தியின் மரணத்தை நினைத்து தற்கால நிலைமை சரிதானேவென எண்ணுகிறார்கள். காந்தியே சுட்டுக்கொல்லப்பட்டதால், அவரின் லட்சியமான மொழிப் பற்றுள்ளவர்களையும் சுட்டுத்தான் கொல்லுவோமென்று அவரின் வாரிசுக்காரர்கள் சொல்கிறார்கள். மூன்று குண்டு களால் சுட்டுக் கொல்லப்பட்டதின் காரணமாகத்தான், முத்தமிழுக்கு ஆட்சி தர மறுக்கின்றனர் போலும். மதத் தின் சார்பிலுள்ளவனே சுட்டானென்ற காரணத்தால் மதத்தை நம்பும் தமிழ்நாட்டிலுள்ள அரசியலே, தமிழ் நாடு தனியாட்சி செய்வதைத் தட்சிணப்பிரதேசமென்ற

துப்பாக்கியால், வஞ்சகமென்ற குண்டுகளால், படித்தவர்கள், அறிஞர்கள் என்ற விரல்களினுல், தேர்தலென்ற வில்லினுல் சுடப் பார்க்கிருர்கள். குறிவைத்த சமயம், வஞ்சகக் குண்டுகளேத் தயாரித்துக் கொடுத்த கமிட்டியார் குண்டுகளே தங்கள் வசத்தில் வைத்துக்கொண்டு, சூழ்நிலேக்கொப்ப உபயோகிக்கலாமென்று சொல்லி விட்டார்கள். சொல்லிவிட்ட காரணத்தால், தட்சிணப் பிரதேசமென்ற விளம்பரப் பலகையில், கறுப்புக்கண்ணுடிக் காரரின் கருத்தோவியத்தை வரைந்ததை அந்தரங்கத்தில், சொந்தரங்கத் தேர்தல் பிரகடனமாக மாற்றி விட்டனர்.

கலேச்சுவையறியாதவர்கள், பதவியிலே தன்னே ஐக்யப் படுத்திக் கொண்டவர்கள், இவர்கள் தானின்று தமிழ் நாடு தனித்திருப்பதை எதிர்ப்பவர்கள். திராவிடத்தின் நாடகத்தை தயாரித்தவரே, நாடகத்தின் பெயரை மாற்ற யோசனே செய்துவிட்டார். அதன் எதிரொலிதான் ராமர் சிலே உடைப்பு. ராவணன் ஒரு பிராமணன் ராமன் ஒரு க்ஷத்திரியன். க்ஷத்திரியன் அவர்களிலக்கணத்தில் திராவிடன்.

திராவிடநாடு கிடைக்காதபொழுது, திராவிட ராமனே உடைக்கத் திட்டமிட்டுவிட்டார். பலருக்குப் பெரியார்மீது கோபமிருக்கலாம். ராமனே உடைப்பதிலும், முருகனே உடைப்பதிலும் அர்த்தமிருக்கிறது. ராமன் ஏகபத்தினி விரதன். பெரியாரும் பெரியாரின் சீடர்களும் அதற்கு நேர் விரோதமானவர்கள். ராமன் தந்தை சொல் கேட்டு வனத்திற்கு சென்ருன். பெரியாரான தந்தை சொல்லேக்கேட்டு மனேவிக்கும் மகளுக்கும் வித்தியாசமில்லாமல் நடந்து

வனத்திற்கு செல்ல வேண்டியவர்கள் பெரியாரின் புத்திரர்கள். இவ்விதமான எண்ணத்தில் வளர்ந்தவர்களுக்கு ராமன் குடிகாரனாகத்தான் தெரியும்.

சீதை விபசாரி, யார் சொல்கிறார்கள், மகளை மனைவியாக்கிக்கொண்ட ராமசாமி சிவனையும், மணி பார்வதியையும் வாழ்க எனச் சொல்லும் கூட்டத்தினர். நாம் ஏன் கவலைப்படவேண்டும். ஒருவர் சொல்லும் வார்த்தை, அவர்களின் நடவடிக்கையின் அனுபவத்திலிருந்து வருவதுதான். தமிழகத்தின் எல்லைகளைப்பற்றிய போராட்டத்தையும், இழந்த எல்லைகளை மீண்டும் பெறுவதற்கான வழியையும் நாம் கவனிக்க வேண்டும். முருகன்மீது கோபம் வந்ததற்குக் காரணம், தனக்கு முன்னதாகவே கலப்பு விவாக பிரச்சனையை அமுலுக்குக் கொண்டு வந்த கடவுளிருக்கக் கூடாதென்றுதான். முருக விக்கிரகத்தையும், ராமர் விக்கிரகத்தையும் உடைப்பதைவிட திருப்பதியையும், திருத்தணியையும் விடாத ஆந்திர சர்க்காரின் பிடிவாதத்தை கொளுத்துவதாக யிருந்தாலும் தேவலை. தமிழர்களாகிய நாம் என்றும் தெய்வத்தை மறந்தவர்களில்லை. ஆனதால் தமிழர்களாகிய நாம் பழமையான கருத்துகளை மனதில் வைத்து, தமிழ்நாடு வளம்பெற, சோஷலிஷ குடியரசாக வருவதற்கு பாடு படுவதுதான் சிறந்த வழி. மத சம்பந்தமான விஷயங்களில் காரணமில்லாத முறையில் ஈடுபட நினைப்பவர்களை நாட்டு மக்களே புத்தி புகட்டுவதோடு தண்டனையும் தருவார்கள்.

தமிழ் நாட்டுக் கருத்துக்களை நாட்டில் பரப்பி, தமிழர்களை நல்லவர்களாக்கி, குரோத மனப்பான்மையை ஒழித்து, ஒன்றுபட்ட தமிழர்களாய் வாழ வழியமைப்போம்.

**காதல்**

காதலைப்பற்றி சிந்திக்கும்போது பழமையில் தெய்வீகத்தோடும், பண்பாட்டோடும் கலந்திருந்தது. காதலின் தன்மையே தெய்வீகமென நினைத்தார்கள். தெய்வீகத்தின் கோபத்தின்மீது நம்பிக்கை வைத்தார்கள். அதனால், காதலுக்கு கற்பு வேலி போட்டு, கடமையுணர்ச்சியை இணைத்து, வாழ்க்கை நாடகத்தின் ஒத்திகைக்கு முதியோர்கள் வாக்கை தலைமை வகிக்கச் சொல்லி வந்தார்கள். அதனால் தான் காதலின் வேகம், கலாச்சாரத்துடனடங்கிவிட்டதே தவிர, அனுச்சாரத்தைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. தலைவனும், தலைவியும், சந்தித்துப் பேசினால்கூட, ஒழுக்கத்தின் பிறப்பிடமாகத் தானிருக்குமே தவிர, வேறுவிதமான எண்ண எழுச்சிகளே இடம் பெறாது. காதலிலே வீரம் கண்டான். காதலிலே கற்பைக் கண்டான். காதலிலே கடமையைக் கண்டான். அப்படிக் கண்டிராவிட்டால், நமக்கு ஒப்பற்ற இரத்தினங்களான பாவாணர்களையும், வீரர்களையும் தீர்க்கதரிசிகளையும் பெற்றிருக்கமாட்டோம்.

காதல் இப்பொழுது இதழ் ரூபமாகி, அட்டைப் படக் கதையாகமாறி அந்தரங்க விஷயங்களை அள்ளித் தரும் ஏடாக வருகிறது. அந்தப் பத்திரிகை ஆசிரியர் ராமநாதன் அவர்கள். காதல் நாகரீக காலத்தில் பல வகையான நிலையில் நடமாடிவருவதை, இயந்திரத்தின் வேகத்திலாவது அடக்கி, எழுத்தோவியமாகத் தரலாமென்ற யோசனையாயிருக்கலாம். நாகரீகத்தில் காதல் இடம் பெற்று கைதட்டுதலைப் பெறுவதைப்போல் வேறு எந்தக்கலையும் இடம்பெறவில்லை. காரணம் பெண்களும், ஆண்களும், பால்ய வயதிலேயே காதலைப்பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்கிவிடுகிறார்கள். நாகரீக சூழ்

நிலை, ஆங்கிலப்படிப்பு, உடையலங்காரம், இம் மூன்றும் உள்ளத்தை மாற்றிவிடுகிறது. உள்ளம் மாறியவுடன் நடையே மாறிவிடுகிறது. நடை மாறியவுடன் தமிழகக் கலாச்சாரத்தையே மறந்துவிடுகிறார்கள்.

ஆங்கிலத்தில் லவ் "LOVE" தான் காதல். தமிழில் "காதல்" ஆங்கிலத்தின் முதலெழுத்து L. L என்றால் LOW. கீழ்த்தரமாகவுள்ள, OPINION. அபிப்ராயத்தை, VIRGIN, கன்னிப்பருவமுள்ள பெண்ணை Enjoy அனுபவிக்க நினைத்தால் Eப் போலாகிவிடுவாயென்று தெரிகிறது. E என்பது ஒரு கோட்டில் மூன்று குறுக்குக் கோடுகள். மூன்று கோடுகளும் மூன்று வித முயற்சி. முயற்சி செய்தால்கூட 1 நீண்ட கோடு நிற்பதுபோல் முச்சந்தியில் நின்று அவமானப்படுவாயாதலால் கண்டபெண்ணைநேசிக்காதேஎன்ற அறிவுறுத்தலின் அறிகுறி. ஆனால் ஆங்கிலம் படித்த மாணவன் லவ்வை கவ்வரத்துக்கு நினைக்கிறான். ஆங்கிலப் படிப்பு வேண்டாமென்று சொல்லவில்லை. படித்தாலும் நாட்டுப் பண்பாடு தவராமலிருக்கவேண்டும். ஆங்கிலத்திலுள்ள சொற்களை சேர்த்துப் பேசினால் தான் பெருமையுண்டெனப் பழகிய வித்வான்கள் சொற்பொழிவின் போது சிரமப்படுவதைக் கண்ணாரப் பார்த்திருக்கிறேன். என்னுடைய மேடை அனுபவத்தில் ஒரு ஊரில் "தமிழ்" என்ற தலையங்கத்தில் ஒரு பட்டதாரி பேசினார். அவர் பேசியதை அப்படியே தருகிறேன்.

நான் இந்த Tamil language ஐ Force க்கு கொண்டு வர ரொம்ப Try பண்ணினேன். அது Impossible போயிடுச்சு. காரணம் மொழி ரொம்ப Hard யிருக்

குது. என்னுலான வரையில் இந்த Tamilஐ Public language ஆகக்கொண்டுவர, Try பண்ணப்போறேன். அதற்கு இங்கேயுள்ள Ladies & Gentlemen எல்லாம் Help பண்ணிஞல் என்னுடைய Thought க்கு ஒரு Way கிடைக்குமென்று நம்பித்தான் இங்கே தலைமை வகிக்க Accept பண்ணிகிட்டேன்.

இவ்வாறு பேசுபவர்களெல்லாம் "மொழிக் காதல்" என்றஅதிகாரத்தில் கலந்தவர்களாக நடந்து வருகிருர்கள்.

"காதல்" என்பதை நல்ல முறையில் பயன்படுத்தமுடியாமல் செய்துவிட்டது இருபதாம் நூற்ருண்டு நாகரீகம். ஒவ்வொன்றின் மீதும் காதல் கொள்ளும்போது, பெயர் மாறியே வருகிறது. தற்காலக் காதல், நாடோடிக் காதல், காலேஜ் காதல், கடற்கரைக் காதல், சினிமாக் காதல், கடிதத்தில் காதல், கவரில் காதல், போட்டோக் காதல் உடையின் நிறத்தில் காதல், கூந்தல் காதல். முதலிய வகைப்படும். இத்தனைக் காதல்களும் படித்தவரிடையே, பட்டதாரியிடத்திலே தோன்றும் அதிசயமான வகைகள். ஆங்கிலத்தில் F-கீழ் உதட்டைமட்டும் மடித்துக்கொண்டு சொல்லும் எழுத்தைப்போல், Femalesஐ ஆங்கில நாகரீகம் ஒரு உதட்டின் மடிப்பைப்போல் மடித்து, மேல் உதடாகிய ஒரு தலைவனின் அன்பைப் பெற்று வாழவகை செய்வதில்லையென்று புரிகிறது. நடையலங்காரத்தைத் திருத்தி, உடையலங்காரத்தை உவகையோடு இணைத்து, கலாச்சாரத்திற்கு தடையழகிகளாகவே வாழ்பவர்களைத்தான் பார்க்கிறோம்.

பழமையிலுள்ளவர்கள் குறிப்பிட்ட வயதிற்குப் பிறகுதான் திருமணம் செய்துகொள்ளும் வழக்கத்தை வைத்திருந்தார்கள். அதனுல் ஆரோக்கியமும் கெடாமல் நல்ல

முறையில் உடலமைப்புடன் ஒழுங்காக வாழ்ந்தார்கள். பழமையிலுள்ள நாடகங்கள், கதைகள் முதலியவைகள் ஒழுக்கக் கேட்டைக் கண்டித்து எழுதியிருந்தார்கள். பார்ப்பவர்களும் கெடாமலிருந்தார்கள்.

உதாரணமாக, சாவித்திரி, நாடகத்தை எடுத்துக் கொள்வோம். சாவித்திரி ஒரு ஆண்டில் மரணமாவான் சத்தியவானெனத் தெரிந்தும், திருமணம் செய்துகொள் கிருள். குறிப்பிட்ட தினத்தன்று சத்யவானுடனிருந்து, யமனிடமிருந்து தன் கணவனுயிரை மீட்கிருள். இந்தக் கதையை அறிவுக்குப் பொருத்தமில்லையெனச் சொல்லும் அறிவு வாதிகள் எழுதும் நாடகங்களைப் பாக்கும்போது, ஒழுங்குக்குப பதில் விபசாரம்தான் தாண்டவமாடுகிறது. சாவித்திரி நாடகத்தைப் பார்த்துவிட்டு வரும் ஒரு பெண், தன் கணவனிடம் அன்பில்லாதவளாயிருந்தாலும், தன்னை மாற்றிக்கொள்ள முயற்சிப்பாள். சாவித்திரி பேசும் வசனங்களை எண்ணும்போதும், நாரதரிடம் தர்க்கம் செய்யும் போதும், பார்ப்பவர்களுக்கு ஒரு பண்பாட்டை விளக்கும் நிகழ்ச்சியாக யிருக்கும். யமனிடம் வரம் கேட்கும்போது தனக்கொரு புத்திரன் வேண்டுமென்று கேட்டு, யமனை ஏமாற்றும் கட்டத்தில், பெண்மையைக் கண்டு இரங்கும் சுபாவம் தேவர்களுக்குமுண்டெனத் தெரிகிறது.

அறிவுக் கண் கொண்டு சாவித்திரியைக் கவனித்தால், ஒரு பெண்ணின் கடமையுணர்ச்சியைத்தான் கண்டுபிடிக்க முடியும். யமனைப் பார்க்க முடியுமா? என்ற விஞவிலே, வாழ்க்கைக்கு விரோதமாக எத்தனை யமன்களைக் கண்டு, அவர்களின் பாசக் கயிராகிய காதல் வலையில் சிக்காமல் தப்புவிக்கும் பெண்ணினங்களே பதில் சொல்வார்கள்.

நாகரீகக் கதையை எடுத்துக் கொள்வோம். சமூகக் கதைகள் பெயர் புரட்சிவீரன், தவறியவள், தாலிக்கயிறு முதலியவைகள். இந்தக் கதைகளில் விபசாரத்திற்கு வக்காலத்து வாங்கும் ஆசிரியரின் சொல்லடுக்கு பாணி நிறைந்திருக்கும். அந்தப் பெண் பேசுவாள் "நான் கெடுவதற்கு எனக்கு சுதந்திரமில்லையா? சுவைக்கும் உணர்வு வண்டினங்களுக்குண்டென்று சொல்லும் போது, பல மலர்களின் சுவையை நாங்கள் அனுபவிப்பது பிசகா. காதலுக்கு வேலி போடும், மூடவழக்கங்கள் ஒழியட்டும்" என்று வீராவேசமாகப் பேசுவாள். உடனே தரை டிக்கட் வித்வான்கள் கைதட்டுவார்கள். இதைக் கவனித்துக்கொண்டிருந்த இளம் பெண்கள், தன் சுகத்திற்கு அதிகாரம் பிரிக்கத் திட்டமிடுவார்கள்.

அதிகாரம் பிரிக்க எண்ணுபோது, முன்னுரைக்குத் துணை தேடுவார்கள். முன்னுரையாக "வாழமுடியாதவர்கள், ஓடிப்போனவள்," முதலிய புத்தகங்கள் அட்டைப் பட அலங்காரத்தோடு கிடைக்கும் அதைப்படிக்கும்போது, தந்தைக்கும் மகளுக்கும் கூட கூட்டுறவு அமைக்கலாமென்று முடிவிற்கு வருவார்கள். காரணம், இவ்விதமாகக் கதை எழுதியவர்களுக்கு "கலைஞர்" பட்டத்தைச் சூட்டிய நாடு என்ன முட்டாள்தனமாகவா செய்திருக்குமென்ற பகுத்தறிவு யோசனையில் முடிவுகட்ட முனைவதில் ஆச்சரியமில்லை.

இவ்விதமான புத்தகங்கள் மூலமாகவும், நாடகங்கள் மூலமாகவும், சினிமாக்கள் மூலமாகவும், "காதல்" நாடகங்கள் கற்பிலக்கணத்திற்குப் புறம்பாக நடக்கும் நிலைக்கு வந்துவிட்டது. புராணங்களில்கூட கற்புக்கு முதலிடம்

கொடுத்திருக்கிறார்கள். கற்புள்ளவர்களின் சாபத்திற்கு தீ கூட உதவிசெய்தது. இன்னும் கற்புள்ள சிலருக்கு உறுதியென்னும் தீ உதவியும், பாதுகாப்புமளிப்பதால் தான், சிலராவது பழமையின் எதிரொலி பெண் தெய்வங்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஓடிப்போன பெண்ணைத் தேடி செவிலித்தாய் வருகிறாள். வரும்வழியில் காதலர்களைப் பார்க்கிறாள். அந்த ஆண் மகனைக்கண்டு “இவ்வழியாக இருவர் போகிறதைப் பார்த்தீர்களா” எனக்கேட்கிறாள். அதற்கு ஆண்மகன் “திடகாத்திரமுள்ள ஆண் ஒருவர் போகக்கண்டேன், பக்கத்தில் சிலம்பொலி கேட்டதைத்தவிர வேறொன்றுமறியேன்” என்கிறான். அந்தப் பெண்ணைக் கேட்கும்போது “தான் கருத்து வெற்றியடைந்தமைக்கு மகிழ்ச்சியை நடையிலும், சொல்லாமல் வந்துவிட்டோமென்பதைத் திரும்பிப் பார்ப்பதிலும்,.கைவிடாதவனைத்தான் கைப்பிடித்திருக்கிறோமென்ற மகிழ்ச்சி முகத்திலுமாக நடந்து சென்றாள். அவள் பக்கத்தில் வீரக்கழலணிந்த பாதங்களைத்தான் பார்த்தேன்” என்கிறாள்.

இந்த நிகழ்ச்சி பண்டையகாலக் கதைதான். கதையை கற்பனையாக நினைத்தாலும், எத்துணை அழகை கடமையோடு நினைத்திருக்கிறான். தற்காலத்தில் ஓடிப்போனவர்களைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்றால், நாடோடிக்கும்பலாயிருப்பவர்களிடமும், போலீஸ்காரர்களிடமும், விபசாரத்தை நிலைமையாக வைத்திருப்பவர்களிடந்தான் விசாரிக்கமுடியும். வருத்தத்தோடு சொல்கிறேன். காதலை காமமாக்கிவிட்டார்களே தவிர, தெய்வீகமாக்க மறந்துவிட்டார்கள்.

தெய்வீகக் காதலாயிருந்தால் உறவின்முறை எதிர்ப்பு எவ்வளவு இருந்தபோதிலும், வெற்றிதான் கிடைத்திருக்கிறது. சமூகக் கொடுமைகள் ஆரம்பத்தில் சங்கடப்படுத்தினுலும், பின் சமூகமே ஒத்துக்கொள்ளும் நிலைக்கு வந்துவிடுகிறது. எல்லாவற்றையும்விட கடிதப்போக்குவரத்துக் காதல்தான் மிகக் கொடுமையானது. குற்றமற்றவர்களையும் குற்றவாளியாக்கிவிடும் நிலைமையை உண்டாக்கிவிடுகிறது.

கல்லூரியில், உயர்நிலைப் பள்ளிகளில், படிக்கும் மாணவிகளுக்குத்தான் இந்த விபத்து ஏற்படுகிறது. வசதியுள்ளவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் பணத்தைக்கட்டி, அவர்களின் மோட்டாரில் போய்விடுவார்கள்.

ஏழைப் பெண்களோ, புத்தகங்களை வரிசையாக அடுக்கி, அதை நெஞ்சில் சாயவைத்துக்கொண்டு, பஸ்ஸுக்காகக் காத்து நிற்பார்கள். இது வரும் நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கும் நாகரீக பேடிகள் சிலரிருக்கின்றனர். அவர்களும் ஏதோ பஸ்ஸுக்காகக் காத்திருப்பதுபோல் வந்து நிற்பார்கள். அதற்குள் அந்த மாணவிக்குத் துணையாக மற்றொரு மாணவி வந்துவிடுவாள். இருவரும் எதையாவது நினைத்துச் சிரிப்பார்கள். இங்கு நிற்கும் மனித உருவத்தில் வாழுமிவர்கள், தன்னைப்பார்த்து சிரிப்பதாக எண்ணிக்கொள்வார்கள். பஸ் வந்துவிடும். எல்லோரும் அதில் ஏறுவார்கள். அந்த மாணவியின் புத்தகத்தின் மேல் எழுதியிருக்கும் பெயரை, இந்த ஆள் பார்த்து ஞாபகத்தில் வைத்துக்கொள்வான். பின் அந்தப் பெண்ணுக்குக் கடிதம் எழுதுவான். அந்தக் கடிதத்தின் மாதிரியை நான் பார்க்க நேர்ந்தது. கடிதத்தை அப்படியே தருகிறேன்.

சிங்கார நடையழகி,

உன் அலங்காரம் என்னை மயக்கவைத்துவிட்டது. நீ இரு சடைபின்னி, ஒன்றில் ரோஜாவும், ஒன்றில் கனகாம்பரமும், வைத்திருந்தாய். அது எனக்கு உன் நிலை சொல்லுவதைப்போலிருந்தது. மணமில்லா கனகாம்பரமாகிய என்னை, மணமுள்ள ரோஜாவாக்க நினைக்க மாட்டீர்களா? என்று கேட்பதுபோலிருந்தது. முள்ளிருக்குமோ என யோசித்தேன். அதைத்தான் கூந்தலுக்குள் மறைத்து விட்டேனே என உன் புன்முறுவல் கூறிற்று. நீ புத்தகத்தைத் தாங்கிக்கொண்டிருக்குபோது, என் கை வலித்தது. பாடப் புத்தகங்களை வைத்த ஆசிரியர்களை வைது விட்டேன்.

அன்னமே, சொர்ண விக்கிரகமே, உன் நா அசைந்தால் நானிலமே ஆடுமென்றால், நான் ஆடமாட்டேனா? நாளை ஸ்டாப்பில் சந்திக்கிறேன். ஸ்டாப்பைக் கவனித்தால். மேல் வட்டமான தகட்டில், சுற்றிச் சிகப்பு. மத்தியில் கறுப்பு நிறத்தில் மோட்டார் சின்னம். அதைத் தாங்கி நிற்கும் ஒரு கம்பம். அதனடியில் நீ நிற்கும்போது, இயந்திர வேகமுள்ள உன் காதல் வாகனத்தை, இரத்தம் போன்ற கட்டுப்பாட்டினால் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அதைத் துணிந்து தாங்கி என் வாழ்க்கைக்குத் தூணாக வரமாட்டீர்களா?' என்பதுபோலிருந்தது. எல்லாம் வல்ல உன் கடைக்கண் வீச்சு, கருணை புரியுமென்ற நம்பிக்கையில் வாழ்கிறேன்.

இங்ஙனம்,
பஸ் ஸ்டாப் காதலன்.

இந்தக் கடிதம் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியை கைக்கு கிடைக்கிறது. இந்தக் கடிதத்தைப் படித்தவுடன்,

ஏதாவது பேச்சில்லாமலா இந்த முறையில் கடிதம் எழுதுவானென்று அந்த மாணவியைச் சந்தேகக் கண்களோடு பார்க்கிறார்கள்.

அறிமுகமில்லாத ஒருபெண்ணுக்கு இவ்வளவு கற்பனையாகக் கடிதம் எழுதச்சொன்னது எது? நாகரீகமென்ற பெயரால் நடக்கும் விளம்பரங்கள். பழமையை இகழும் புதுமைவாதிகளின் கதைகள், கட்டுரைகள் ஒழுக்கத்தைப் போதிக்கும் நாட்டில், மகளுக்கும், சகோதரிக்கும், உள்ள உறவின்முறையை, சோஷலிஸமாக்க நினைக்கும் தலைவர்களுக்கு பாராட்டுரையும், பட்டமளிப்பும், பணமுடிப்பும், கார் தானமும், நடக்கும் வரையில் நம் தமிழ்நாடு இந்த நிலைமையை விட கீழான நிலைக்கு வந்துவிடும். கீழான நிலைக்கு வரவிடாமல் பாதுகாக்கத்தான் கற்பையும் காதலையும், கடமையோடு கலந்த சிலப்பதிகாரத்தை, சீரழிந்ததைத் திருத்த காவியமாகத் தந்திருக்கிறது. சிலப்பதிகாரம், பதவி வேண்டாமென்ற ஒரு துறவியால் பாடப்பட்டது. சகோதரனுக்காகத் தன்னைத் தியாகம் செய்துகொண்டவரின் கருத்தோவியம். சிலம்பொலி கேட்ட பிறகுதான், திருத்தவாதிகள் திருந்திவருகிறார்கள்.

சிலப்பதிகாரக் கதையை நாடகமாக்கியவர்கள் உண்மைக் கதையையே கொலை செய்துவிட்டார்கள், கோவலன் நாடகத்தில் மாதவியை, பணம் பிடுங்கும் தாசியாக்கி, கண்ணகி பருவம் தெரியாத கன்னிப்பருவத்தில் திருமணமானதாக்கி, வதை செய்துவிட்டார்கள். நாடகத்தில் மாதவி மாலையைப் போட்டதும் "எழுந்து என்னுடன் வாரும் துரையே" என்ற பாட்டைப் பாட ஆரம்பிப்பாள். கட்டுப்படாத கோவலனுக்கு வசிய மருந்து

கொடுப்பதாகவும், பின் மனம் மாறி மாதவியைத் தேடிச் சென்றதாகவும் கதை. கடைசியில் காளிவந்து பாண்டியன், வஞ்சிப்பத்தன், துன்மந்திரி, முதலியவர்களின் குடலைப் பிடுங்கும் காட்சி. நாடகத்தைப் பார்த்தால் வேடிக்கையாக யிருக்கும்.

மதுரையைப் புகழ்ந்து பேசும் நாடகக்காரர்கள் எந்த ஊரில் நாடகம் துவங்கினாலும் மதுரையின் பெயரையே போட்டுக்கொள்வார்கள். ஏனென்றால், மதுரை ஒரு கலை நகரம். சங்கத் தமிழ் வழங்குமிடமென்றுதான். ஆனால் கோவலன் நாடகத்தில் கண்ணகியின் சிலம்பை விற்கச் செல்லும் கோவலனிடத்தில் கண்ணகி "மாபாவிகள் வாழும் மதுரைக்குச் செல்லாதீர்" என்ற பாட்டைப் பாடுவாள். அதை இந்த மதுரைவாழ் நடிகர்கள் தவறுமலின்றும் கோவலன் நாடகத்தில் பாடிவருகிறார்கள். இந்த நாடகத்தை மாற்றி எழுதியவர் திரு. சங்கரதாஸ் சுவாமிகள் அவர்கள் முருகனருள் பெற்றிருக்கவேண்டும். வருங்கால நடிகர்களின் கலை உணர்ச்சி பாழ்பட்டு கட்சிகளின் பேயாட்டங்களில் ஈடுபட்டு மாபாவிகளாக மாறிவிடுவார்களென்று தெரிந்திருக்கும். திரு சுவாமிகளைப்போல் துரிதமாக எழுதும் நாடகாசிரியர்கள் இனித் தோன்றுவது கிடையாது. "வள்ளிதிருமணம்" நாடகத்தில் முருகன் வேடந்தாங்கியவர், முருகனே யில்லையெனப் பேசும் திரு. அண்ணாத்துரையவர்களைப்பற்றிப் பாடுகிறார். வள்ளியோ "வெண்ணிறத் தாடி, ஈரோட்டு வேந்தே" என்ற பாட்டுப் பாடுகிறார்கள். இவ்விதக் கொடுமை கடந்த நாடகக் காலங்களில் கிடையாது. இந்தக் கொடுமையை வேறு நாடகங்களில் வைத்தால், தெய்வீகப் பண்பு கெட்டுவிடுமென்று

தான் கோவலன் நாடகத்தில் கண்ணகி வாயிலாகத் தெரிவிக்கிருர்கள்.

மாதவியினுல் விரட்டப்பட்ட கோவலனை நாடகக் கண்ணகி பண்பாடோடு வரவேற்று, சாப்பிட அழைக்கும் போது, கடனைப்பற்றி யோசிக்கிருன். கடனைத் தீர்க்க கால் சிலம்பைக் கேட்டு மதுரைக்குப் போய் விற்கவேண்டு மென்று சொல்லும்போது பாடும் பாட்டு. ஆனதால் நாடகக் கலைஞர்களின் வருங்கால வாழ்க்கையை யுணர்ந்து கோவலன் நாடகத்தில்தான் பாடவைத்தார். மாத்வியின் கலையை நேசித்து, காமவயப்பட்டு, திருந்தி வந்தவனைப் பார்த்து "மாபாவிகள் வாழும் மதுரையெனச் சொல்வதி லிருந்து, நாடகக் கற்பை மறந்து, பணத்திற்காகக் கலையைக் கடனுக வைத்து வாழ்பவர்கள்தான் மதுரை நடிக குலத் தின் வருங்காலத்தின் நிலையெனவே உணர்ந்திருக்கிருர். ஏனென்ருல், தெய்வீக உள்ளம் படைத்தவர்களின் வாக்குக்கு அத்தனை வலிமையுண்டு. ஆசிரியருக்கு மரி யாதை செய்யாத நடிகனும் நல்ல முறையில் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. காதலிலும் கடமை யுணர்ச்சி வேண்டு மென்று பழமையான ஆசிரியர்கள் நினைத்ததால்தான், காதலை கடவிட்டன்மையாக்கி நாடகத்தை யமைத்திருக்கி ருர்கள். காதலின் தன்மையை உயர்ந்த சித்திரமாக மதித்து பழமையில் வீரமுள்ள காதலையமைத்திருக்கிருர் கள். போருக்குச் சென்று திரும்பியவனையும், போருக்குப் புறப்படுபவனையும், காதலித்தவர்கள் தன்னையே தியாகம் செய்திருக்கிருர்கள். ஆனதால் காதலைப்பற்றிய கதைகள் முன்னுளிருந்ததைப்போலிருந்தாலும் வரம்பு மீருமலிருந் திருக்கலாம். புதுமை, புதுமையெனச் சொல்லி, பாழாக்கு வதைத் தவிர வேறென்ன இருக்கிறது.

மாணவிகளைப் பொறுத்தவரையில் தற்காப்புக்குத் தான் இவ்வளவு எழுதவேண்டியிருக்கிறது. கல்வியிலே காதல் கொண்டு, அது முடிந்தபிறகு வாழ்க்கையை நல்ல முறையில் செப்பனிடவேண்டிய திட்டங்களைப் போடலாம். சரித்திரம் படிக்கும் மாணவி கஜினி முகம்மதின் படை யெடுப்பைப் படித்திருக்கலாம். எத்தனை முறை படை யெடுத்தானென்பதைப் பார்க்கும்போது, கல்வியின் வெற்றிக்காக அத்தனை தரம் படையெடுக்காமலிருக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். தோல்வியிலும் மனம் கலங்காம லிருக்கவேண்டும். உங்களின் உள்ளங்களை உடைக் கவனத் திலும் செலுத்தவேண்டும்.

பழமையான காலத்தில் உடல் மறைக்கத்தான் ஆடையேதவிர, உடல் தெரிவதற்காக ஆடை அணிவது அநாகரீகம். மாணவிகளின் ஆடை அலங்காரத்தின் அலங்கோலமே ஒரு மனிதனைப் பார்க்கும்படியாகச் செய் கிறது. அடக்கமே தன் கடமையென்று வாழவேண்டிய நம் பெண்கள், அடக்கத்தை விட்டு, அடங்கா உருவங்க ளாக நடனத்துடன் நடக்கும் நடைப் பதுமைகளாகக் காட்சியளிக்கின்றனர். இவ்விதமான ஆடைகளே அனுச் சாரத்திற்கு வழியமைக்கும் வழிகாட்டியாக அமைவதை நினைத்துத்தான் வருந்துகிறோம். சடை பின்னும் வழக்க மும், பின்பக்கம் பிடரியை மறைத்துக்கொள்ளும் வழக்க மும், வெகுகாலமாக உண்டு.

சடை பின்னுவதையே வைத்தற்குக் காரணம், மருத்துவ நிலைமையை யுணர்ந்தும், கற்பிலிருந்து நழுவா வண்ணமும் வைத்திருக்கிறார்கள். பிடரியிலிருக்கும் நரம்பு கள் மூளைக்கும், கண்களுக்கும் சம்மந்தமுடையன. ஒருவன்

கூர்ந்து பிடரியைப் பார்த்தால், திரும்பிப் பார்க்கவேண்டிய நிலை ஏற்படும். காரணம் கண்களின் சக்தி 45 அடிவரையில் தன் பக்கமிழுக்கும் நிலையிலுள்ளது. பிடரியை நல்லெண்ண மில்லாமல், சுமார் 7 நிமிடங்கள் பார்த்தால், தானுகவே திரும்பிப் பார்க்க நேரிடும். அதைத் தடுக்கத்தான் பெண் களின் பிடரியை மறைத்து சடை பின்னும் பழக்கத்தை யும் ஏற்படுத்திஞர்கள்.

பிடரியின் நரம்புகளில் எதிர்பாராவகையில் ஆடவ னின் கை பட்டாலும் கற்புநிலை தவறிவிடும், ஆண் பாஸிடிவ் (Positive). பெண் நெகடீவ் (Negative). பாஸிட் டீவ் மட்டும் எரிந்தால் சிகப்பான நிறமாக மங்கிய வெளிச்ச மாக யிருக்கும். நெகடீவ் இயந்திரங்களை ஓடச்செய்யும். பச்சை நிறத்துடன் வெளிச்சம் அதிகமாக எரியும். அதனுல்தான் சக்திக்குப் பச்சை நிறமும், சிவனுக்குச் சிவந்த நிறமுமாக ஆதிகாலத்தில் அமைத்துவிட்டார்கள். நெகடீவ் சக்தியும், பாஸிடீவ் சக்தியும், சேர்ந்தால் விளக்கு எரியும். பாஸிடீவ் ஆண் பெண் நெகடீவ்வைத் தொட்டால், சமமாகிய உஷ்ணம் எரிந்து, கற்பைச் சூரையாடி விடு மென்ற நோக்கத்தில்தான் ஒப்பந்தம் நடந்த பிறகுதான் தம்பதிகளாய் வாழத்திட்டமிட்டார்கள்.

பிடரியில் 48நரம்புகளின் தொடர்பு மூளையில் சம்பந்தப் பட்டிருப்பதால் அறிவு நிலைமையிலும் தவரவிடக் கூடா தென்ற கட்டுப்பாட்டையும் நினைத்தே பிடரியை மறைத்து சடை பின்னவும், தலைமயிரை முடிந்து பிடரியை மறைத் துக் கொள்ளவும் ஏற்பாடு செய்தார்கள். சடையை இரண் டாகப் பின்னிச் சேர்த்து முடிவில் முடிச்சு போட ஒரு கறுப் புக் கயிற்றையும் வைத்தார்கள். சடையைப் பார்க்கும்போது

நாமும் யோசிக்கவேண்டிய நிலையிலிருக்கிறோம். நாங்கள் எப்படிக் குடும்பம் நடத்துவோமென்று சொல்லாமல் சொல்லுகிறார்கள்.

"பெருமையாயிருந்த குடும்பம். வறுமையோடு போராடிச் சிறுமையடைந்தபோதிலும், கன்னியொருத்தியோடு காதல் புரிந்து என்னைப்பற்றி சிந்திக்காமலிருந்தாலும், மகத்தான மர்மங்களை மறைத்துச் சீவி, இரண்டாகப் பின்னி ஒன்றுக்கும் நிலைமையிலே தான் தமிழகப் பெண்கள் வாழ்வார்களென்று தெரிகிறது. இவ்வளவு உயரிய கலாச்சாரத்தையும் இணைத்து வாழ்வதற்கு வழி செய்து வைத்த தமிழகப் பெரியோர்களை நினைக்கும்போது உண்மையில் வருங்காலத்தைத் தெரிந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அதனால்தான் தமிழ்நாட்டிலுள்ள பெண்களின் திருமணத்தின்போது ஜாதகம் பார்க்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். வாழ்க்கையில் பாதகம் ஏற்படாமலிருக்கச்சாதகமாய்க் கிரகங்களமைந்ததாவெனப் பார்க்கும் முறையுமிருந்திருக்கிறது.

ஜோதிடமென்பது, சோதித்து திடம்பண்ணிக் கொள்வதுதான். ஆண், பெண், ஜாதகத்தில் ஏழாம் பாவத்தைப் பார்த்துத்தான் ஏற்பாடு செய்வார்கள். செவ்வாய்க் கிரகம் 2, 8, 12 லிருந்தால் செவ்வாய்த்தோஷம். செவ்வாய்க் கிரகம் பிர்ம்மச்சரிய கிரகம். செவ்வாய் 2-ல் இருந்தால் குடும்ப நிலை சரியாயிருக்காது. 2. குடும்ப ஸ்தானம். வாக்கு ஸ்தானம். 2 உதடுகள் சேர்ந்து பேசுவது வாக்கு. இரண்டு இதயங்கள் சேர்ந்து வாழ்வது குடும்பம். அந்த இடத்தில் செவ்வாய் பிர்ம்மச்சரியமாயிருப்பதால், குடும்பத்தில் தாம்பத்ய உறவு கெட்டு விடுமென்று

நிதானம் செய்தார்கள். அடுத்தது 8, மாங்கல்யஸ்தானம், பகுத்தறிவு 6. ஆண் பெண் 2. இரண்டு மனமும் பகுத்தறிவு கலந்து கற்போடு வாழக் கட்டுப்பாடு அமைப் பதைத் தாலி (மாங்கல்யம்) என்கிறோம். அதில் செவ்வாய் இருந்தால் தன்னைப்போல் ஒற்றையாக்கி விடுவானென்ற தால் அதையும் நிராகரிக்க வைத்தார்கள். அடுத்தது 12 சயன சுகஸ்தானம். விரயஸ்தானம். வாழ்க்கையின் சுகத்தையும், பொருளையும் சம்பாதிக்க இரு பகுத்தறிவும் ஒத்துழைத்தால் தான் நல்லமுறையிலமையும். ஒன்றுக் கொன்று ஒத்துழைக்காவிட்டால் சம்பாதித்த பொருள் விரயமாகிவிடும். ஆனதால் தாம்பத்ய பொருளாதாரத் துறைக்குக் கெடுதி வந்துவிடுமென்று அதையும் நீக்கி இருக்கிறார்கள்.

இந்த உண்மையை ஜோதிடர்கள் சொல்வதில்லை. காரணம், தனக்குரிய கலை ஞானத்தைப் பிறருக்கு அறிவிக்கக் கூடாதென்ற எண்ணம்தான். இந்த எண்ணத் தில் தான் தமிழ் நாட்டிலுள்ள ஒப்பற்ற கலைகள் மறைந்து, மாற்று நாட்டானிடம் சிக்கி ஆங்கிலப் பெயருடன் வெளி வரும்போது எல்லோரும் கலையை விரும்புகின்றனர்.

பழமையிலிருந்தவர்கள் திருமணம் செய்துவைத்தால் இருவரும் ஒற்றுமையுடனும், உடல் ஆரோக்கியத்துட னும் வாழ்வதற்காகவே பல திட்டங்களை வைத்திருக் கின்றனர். நம் தமிழ் நாட்டில் பெண்ணைப் பார்க்கும்போது, உறவின் முறையில் மாமன் மகள், மைத்துனன் மகளென்ற முறையில் தான் பார்ப்பது. அந்தப் பெண்ணின் தலைமுறை களில் ஏதாவது வியாதியுண்டாவென்று பார்ப்பார்கள். பிறகு, பெண்ணின் குணத்தைப் பார்ப்பார்கள். அதன்

பிறகுதான் பெண்ணின் ஜாதகத்தைக் கேட்பார்கள். முடிவு சொல்லும்போது, சாதகம் சாதகமாயிருந்தால் பேச வேண்டியதைப் பேசுவோம். பாதகமாயிருந்தால் கடிதம் மூல்யமாய்த் தெரிவித்துவிடுகிறேனென்றுதான் சொல்வார்கள்.

சாதகத்தைப் பார்த்துச் செய்யும் கல்யாணங்கள் விதவையாகிவிடவில்லையா? என்ற கேள்விகூட உண்டு. சோதிடம் மெய். சோதிடர்கள் பொய்யர்கள். தன்னலத்திற்காக சாதகத்தைப் பாதகமில்லாமல்கூடச் செய்துவிடுவார்கள். இவர்கள் செய்யும் சுயநலம், ஒரு பெண்ணின் வாழ்க்கை பூராவையுமே பாதித்துவிடுகிறது. அதனுல்தான் ஆங்கிலேய முறையில் நம் சாதகத்தில் ஐந்தாமிடம் இருதய ஸ்தானமாக வைத்து, கூட்டுறவு ஸ்தானத்தை ஏழும், ஒன்பதுமாக வைத்து யோசித்து கூட்டுறவு ஏற்படுத்துங்களென அறிவிக்கிருர்கள் மேல்நாட்டார். தீர்த்துக்கட்டும் கல்யாணமாக யிருந்தால் கவலையில்லை. கூட்டுறவிற்கு 5, 7, 9 ஐ ஏன் நிதானம் செய்யச்சொன்னுர்களென்ருல் உடற்கூற்றின் தன்மை தெரிந்துவிடுமென்றுதான். 5 நிமிடத்துக் கிரகம் பாபியாயிருந்து, 6 மாதபத்ய தோஷம் பெற்றிருக்குமானுல் ஆணுக்கு க்ஷயரோகமும் பெண்ணுக்கு வெட்டை வியாதியுமிருக்குமென்று உணரலாம். 7, 9 க்குமுள்ள கிரகங்கள் கெட்டியாயிருந்தால் மர்ம வியாதியும், நபுஞ்சகவும், ஆணிருப்பானென்றும், பெண்ணுயிருந்தால், சூதகத்தில் குற்றம் ஏற்பட்டு தாம்பத்ய வாழ்வில் வெறுப்புள்ளவளாகவுமிருப்பாளெனவும் தெரியவரும்.

இவ்வளவு ஆராய்ச்சிகளுக்கிடையேதான் வாழ்க்கை நிலையத்தை நிர்மாணிக்கத் திட்டமிட்டவர்களின் காலத்

தில் எவ்வாறு காதல் கயமைத்தனத்திற்கு ஆளாகமுடியு மென்ற கேள்விதான் பிறக்கிறது.

காதல் என்பதை பரிமாறிக்கொள்ளும்போது, உள்ளத்திலூறும் உணர்வை பெரியோர்களின் வாக்கில் இணைத்துவாழ்வதற்கு ஆண்மையும், பெண்மையும் இறைவனுல் படைக்கப்பட்டதென்றே நினைக்கவேண்டிவருகிறது. பெண்மைக்குத் துரோகம் செய்பவன் இறைவன் கோபத்திற்காளாகிருன். பெண்மையிடம் பேதமையை இணைத்தான். பேதமையைப் புகழ்வதால் தன்மானத்தை விட்டுக் கொடுக்கக்கூடத் துணிந்துவிடுகிருள். அனுபவித்து முடிந்த ஆண்மை மோசம் செய்துவிடுகிறது. பின் பெண்மையின் நிலை அபவாத உலகத்தில் நடிகையாக மாறி தற்கொலை நாடகத்தில் நடிக்க முற்படும்போது, பக்கவாத்தியக்காரர்களாக சில பாவிகள் வந்து, கற்பரங்கத்தை விபசார அரங்கமாக மாற்றிவிடும் கொடுமையை நினைக்கும்போது, பெண்மையிடம் ஏற்படுகின்ற கருணை போலியாகத்தான் பிரதிப்லிக்கும்போலிருக்கிறது.

பழியும், பாதகத்தையும், தன்னகத்தே கொண்டு வாழும் பெண்ணினத்தைத்தான் தமிழோடு இணைத்து, தாய்மையாக்கினுன். தாய்மையான பெண்ணினத்தை என்றும் மாரு இளமையுள்ள குமரியாக்கினுன். அதனுல் தான் தமிழைக் கெடுக்க நினைத்து, காதலிப்பதுபோல் பாவனை காட்டினுல்கூட, அவனுக்கும் புத்தி சொல்லித் திருத்திவிடும்.

**கலைகள் :**

திருத்திவிடும் மனப்பான்மையைக் கருதி இசையை குழல் வாத்தியமாக அமைத்து, நீர்வீழ்ச்சி சப்த பேதத்தி

லிருந்துமிருதங்கத்தையும்கண்டுபிடித்தான். பாடுவதற்குப் பின்னணி வேண்டுமென்ற நினைப்பே யில்லாமலிருந்திருக்க லாம். எதிரொலியின் சத்தத்தைக் கவனித்தான். தான் பேசும்போது, அதுவும் பேசுவதைக் கவனித்தான். எதி ரொலியின் சத்தம், தன் சத்தத்தோடு ஒத்திருப்பதைக் கவனித்து, தனக்கு ஒரு சத்தம் உதவி செய்யுமானால், தான் பாடுவதற்கு நலமாயிருக்குமென்ற முடிவில்தான் தனக்குப் பின்னால் சுருதி தெரியும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறான்.

இசையைப் பாடுபவனும், இசைக் கருவியை முழக்குப வனும், ஒருமனப்பட்டு வாழ்ந்திருக்கின்றனர். கலைவாணி யான கலைத் தெய்வத்திற்குக் கையில் வீணையைக் கொடுத் திருக்கிறார்கள். கல்லின் மீது உட்காரவைத்து, பக்கத் தில் தடாகமும், தடாகத்தில் தாமரை மலரும், அன்னமும் மயிலும் வைத்துச் சித்திரம் எழுதியிருக்கிறார் கள். கலைக்கு அதிபதியான பெண்ணுக்குக் கட்டிய புடவை வெள்ளை நிறம். நான்கு கைகள். ஒன்றில் ஜெப மாலை, ஒன்றில் சுவடிக்கட்டு. மயில் தெய்வத்தை நோக்கி உடலை வைத்துவிட்டு, கழுத்தை நம் பக்கம் திருப்பிக் காண்பிக்கிறது. சித்திரத்தை ரவிவர்மா என்ற சித்திர நிபுணர் வரைந்துள்ளார்.

கலைமகளை அவ்வாறு சித்திரம் எழுதியதிலிருந்து நம் நாட்டுக் கலைகளின் இயல்பை உணரலாம். இயற்கைக் காட்சியில் மலைமீதிலிருந்து விழும் நீர்வீழ்ச்சி. நல்லதொரு தடாகம். கல்மீதமர்ந்த கலைமகள் காலின்மீது காலைப் போட்டுத்தான் வீணை வாசிக்கும் பாவனையாக எழுதியிருக்கிறான். உலக இயற்கையிலுண்டாகும் நீர்,

பாறைகளில் மோதும்போது பாறைகள் சிதறத்தான்செய்கிறது. பாறைகளிலிருந்து வழியும் நீர் வேகமாக வரும்போது, அதில் மின்சார சக்தியுண்டாகிறது. தண்ணீரில் மறைந்த மின்சார சக்தி வேகமாக ஓடும்போது தடுத்தால் மறைந்திருக்கும் சக்தி, பல தொழில்களுக்கு உதவுகிறது. உந்த உண்மையைக் கண்டுபிடித்தவனுக்குப் பெயர் விஞ்ஞானி அல்லது ஆராய்ச்சி நிபுணன்.

பழமையில், நீரைத் தேக்கி ஒரு தடாகத்தில் நிறுத்தி கல்லின் மீது ஒரு பெண்ணை நாலு கையுடன் உட்கார வைத்து, வீணையைக் கையில் கொடுத்திருக்கிறுன். உள்ளத்திலூறும் கலை நீரை உறுதியுள்ள பண்பாட்டில் தேக்கி, உயிராகிய தெய்வத்திடம் இணைத்தோமானல் உடலில் அறிவென்னும் மின்சாரம் பரவி கலையறிஞனுக மாற்றிவிடும். அதிலும் நான்கு கையுள்ள பெண் கரையில் வாழ்க்கையின் சுகத்திற்கும், கடமைக்கும் தான் இரு கரங்களுடைய சாதாரண பெண்கள் உதவுவார்கள். வாழ்க்கையில் மறைந்த உண்மைகளை, பாமரத் தன்மையிலும் படிப்பிலுமாக, மாற்றி மாற்றி ஏமாற்றுபவர்களிடமிருந்து தப்புவிக்கத்தான் மற்ற இரண்டு கைகளும். சுவடியுள்ள கை படித்த கூட்டத்தை ஆதரிப்பது. ஜெபமாலையுள்ள கை, கேள்வி ஞானத்தைக் கேட்டு, அதை மனதில் வைத்து உருட்டிக்கொண்டே அறிஞுவது. கால்மேல் கால் போட்டிருப்பது, சொல்லும் கருத்துக்களையும் பார்க்கும் காட்சிகளையும், ஒரு காலோடு கால் போட்டிருப்பதுபோல், உள்ளத்திலுள்ளவைகளைப் பின்னிக்கொண்டே வீணையாகிய நாதத்தைத் தியானித்து, உடையின் தூய்மையைப் போல் பரிசுத்த உள்ளத்தோடு கலைக்கு மரியாதை செய்தா

யானுல், அக்கலையே உனக்குக் கருணை புரியுமென்ற தத்துவத்தைத்தான் நினைக்கவேண்டிவருகிறது.

நடனமாடுபவர்களும் கலைமகளைத்தான் வணங்கி நாட்டியத்தை ஆரம்பிக்கிருர்கள், கலைமகளோ, அமைதியான முறையில் உட்கார்ந்திருக்கும்போது, நடனமாடுபவர்கள் ஏன் கும்பிடவேண்டுமென்றுகூட எண்ணலாம். தடாகத்திலுள்ள தாமரைதான் நடனம். அன்னம்தான் நடன இயல்பு. மயில்தான் பாவம். வீழும் நீர்வீழ்ச்சிதான் நடன வகைகள். கலைமகள் படத்தைப் பார்த்தவுடன் இந்தக் கற்பனை உதயமாகும்? உதயமாகித்தானுகும்.

தடாகமாகிய அரங்க மேடையில் தாமரைபோன்ற இடத்தில் நடனமாடவேண்டும். தாமரையின் மத்தியை மேடையாக்கி, சுற்றியுள்ள இதழ்களை நடனத்தின் வகைக்ளாகவும், வாத்தியங்களாகவும் அனுமானித்துக்கொள்ள வேண்டும். கொஞ்சம் நிலைமாறினுலும், தாளம் தவறினுலும், தடாகத்தில் விழுந்துவிடும் நிலை வந்துவிடுமென்ற பயத்தோடுதான் ஆடவேண்டும். அவ்வாறு ஆடமுடியாவிட்டால், கரையிலிருக்கும் கலைத் தெய்வத்தின் உடையைப் பார்க்கவேண்டும். உடை வெண்மையாயிருப்பதால் நம் உள்ளத்தில் பரிசுத்தமில்லாத காரணத்தால்தான் தவறிவிட்டோமென்று தன்னைப் புனிதமாக்கிக்கொள்ள வேண்டும்.

உள்ளத்தைப் புண்படுத்த முடியாவிட்டால், வீணையைப் பார்த்து, தன்னை மறந்து ஆண்டவனைப் பாடியாவது பரிசுத்தமாக்கிக்கொள்ளவேண்டும். பரிசுத்தமானவுடன் அன்னத்தைக் கமனிக்கவேண்டும். அன்னத்தின் குணம், பாலிலிருந்து, தண்ணீரைப் பிரிக்கும் சுபாவத்தைப்

போல், கலைநோக்கோடில்லாது, காமத்தின் எதிரொலி யான கலைஞனை, குருவாகப் பெற்றிருந்தால், அக்குருவை வெறுக்காது, கலையை மட்டும் காற்று, தண்ணீரான குருவின் மனதை மாற்ற, உன் நடனத்தை நீர்வீழ்ச்சியாக எண்ணி ஆடு. பாறைமீது தண்ணீர்ப்பட்டால் பாசந்தான் உண்டாகும். பாசம் பிடித்திருந்தால் கால்களை வழுக்கி விட்டுவிடும். அதை அபிநயத்தில் காண்பிக்கவேண்டும். அதுபோல் கலையிடம்பாசமிருக்கலாம். ஆனால் தண்ணீருக் குள்ளிருக்கும் பாசமான காமமாயிருக்கக்கூடாதென்பதை சொல்லாமல் சொல்லி ஆடினால், உண்மைக் கலைஞனா யிருந்தால் திருந்திவிடுவான். கட்டை தட்டும்போதே, உடற்கட்டைத் தட்டிவிட எண்ணும் கயமைத்தனமுள்ள கலைஞனாயிருந்தால் எந்தக் கருத்தைச் சொல்லியும் பய னில்லை. அவன் மீது அனுதாபப்படுவதைவிட வேறு வழியில்லை.

தாமரையின் இதழ்களை நினைக்கும்போது, வருங் காலத்தில் இதழ்களின் எண்ணிக்கையைவிட வாத்தியங் கள் ஏற்படுமென்று நினைத்திருப்பான். மயிலைப் பாருங்கள் உடலைநேராகவும், தலையைக் கலைமகள் பக்கமாகவும் திருப்பி நிற்கிறது. தோகையைப் போன்ற வர்ண ஜாலங்கள் தெய்வத்தைக் கண்டவுடன் அடங்கியிருக்கின்றன. கரு மேகத்தைக் கண்டவுடன் தோகையை விரித்து நடன மாட ஆரம்பிக்கிறது. கருமேகமாவது மழையைத் தரும். இந்தக் காட்சி நடனமாடும் பெண்களுக்கு அறிவு தரும் காட்சியாயிருக்கிறது.

மயில் தோகையைப்போல் உடையணிந்து நடன மாடுகிறீர்கள். நடன அரங்கத்திலிருக்கும் வரையில்,

தலையை அசைவிலும், காதை கலைஞன் சொல்லும் தத்தா காரச் சொல்லிலும், பதியவைத்து, எதிரேயுள்ள மக்களை தெய்வீகமாக யெண்ணி ஆடுகிறீர்கள். மக்களிடம் நீங்கள் கேட்கும் வரம் புகழ்தான். புகழேணியில் ஏற ஆரம்பித்த வுடன், கருமேகமாகிய நயவஞ்சகப் பணக்காரர்களிடம் தோகை விரித்தாடுகிறீர்கள். இயற்கை மேகம் மழையைத் தந்து பயிரை வளர்க்கும். செயற்கை பணக்கார மேகம் மழை போன்ற பணத்தை முதலில் தந்து கலைப்பயிரை அழித்துவிடும். இந்த அபாயங்களிலிருந்து தப்புவிக்கக் கருதி, மயிலை கலைமகள் பக்கம் திருப்பியிருப்பதால், அவ்வித அபாயம் வரும் நேரத்தில் கலைமகளைப் பார்த்து "கலைமகளே, நீயும் ஒரு பெண், நானும் ஒரு பெண். உன்னை நம்பி நான் கெடுவதா" என்ற கேள்வியைக் கேட்கலாம். அதற்குக் கலைமகள் "நான் உட்கார்ந்திருக்கும் நிலைமை யைப் பார்த்தாயா? கால்மேல் காலைப் போட்டு உட்கார்ந் திருக்கிறேன். உடல் சம்பந்தமான உணர்வு தோன்றும் போது, கெட்ட எண்ணத்தின் மேல் நல்லெண்ணத்தை வைத்து, வீணையாகிய உள்ளத்தை, நாதமான உறுதி யுடன் இணைத்துப்பார்த்தால், உள்ளம் தெளிவாகி தடாக மாகிய கலை அரங்கிடம் நளினத் தாமரையாக வாழ்வாய்" எனப் பதில் சொல்லும்.

நடனமாடுபவர்களுக்கு கலைத் தெய்வத்தின் பெருமையைச் சொல்லவேண்டுமென்பதல்ல என் நோக் கம். அதிலடங்கியுள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தி, நடனத்தை விளம்பரத்திற்குப் பலியிடும் பாவையர்களையும், புகழ் வந்தவுடன் தானுடியதெல்லாம் நடனமெனச் சொல்லித்திரியும் அகம்பாவ அணங்குகளையும், திருத்தத் தான் எழுதுகிறேன்.

கலையின் மீது பற்றுக் கொண்டவர்கள் சிலர்தான். பலர் கலையின் புகழை இணைத்து, பத்திரிகை தரும் செய்திகளின் நற்சாட்சியை நங்கைகளிடம் செலுத்தி, கைத்தட்டும் காலமிது. அதனுல்தான், புகழடைந்த நடனமாடுபவர்களை இனியாவது தமிழகத்தின் பண்பு கெடாத நடனங்களைக் கற்று, வீணுகாமல் வாழ வழியமைத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எனது வேண்டுகோள்.

நடனமாடுபவர்களின் மனதின் பக்குவத்தை மட்டும் ஒரு உதாரணத்தோடு சொல்லி, அடுத்தக் கருத்துக்குச் செல்ல நினைக்கிறேன். நடனமாடி வீட்டுக்கு வந்தாள் ஒரு மாது. அவளின் தலைவனும் கூடவே வந்தான். தலைவனென்றவுடன் வேறு முறையில் நினைத்துவிடாதீர்கள். சொந்தக் கணவனேதான். வந்தவுடன் அலங்காரத்தைக் கலைத்துக்கொண்டிருந்தாள். தலைவன் வியப்புடன் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் "தலைவ, தங்கள் கண்ணே எனக்குப் பட்டுவிடும் போலிருக்கிறதே"

"என் கண்களுக்கு அவ்வளவு பொருமை எப்பொழுது ஏற்பட்டது தெரியுமா?"

"நடனமாடக் கற்றுக்கொண்டதிலிருந்து. சரிதானே?"

"பொய். இன்று நீ ஆடிய நடனத்திலிருந்துதான்..."

"எந்தப் பாட்டின் ஆட்டத்திற்கு?"

"கண் நுதல்க் கடவுளுக்கு கலையைத் தானம் செய்" என்ற பாட்டில் கடவுளைப் பாவத்தில் காண்பிக்கும்போது தான் பொருமை பிறந்தது"

"என்ன தலைவ, என்னை சந்தேகப்பட்டுவிட்டீர்கள். கடவுளைப்பற்றிப் பாடும்போது, தன்னை மறந்த நிலைய

ல்லவா உண்டாகியிருக்கவேண்டும். பொருமையுண்டான தென்ருல், யாரோ ஒருவர் என்னைக் காமத்தோடு பார்ப் பதை நான் கவனித்திருக்கவேண்டும். இல்லாவிட்டால்...

"அட பைத்யமே, நான்தான் குற்றவாளி. உன் நடனத்தைக் கவனிக்காமல், ரசிப்பவர்களின் எண்ணிக் கையைக் கவனித்துக்கொண்டிருந்தேன். என் முன்னிருந்த ஒரு ரசிகர், உன்னையும் தன் வைர மோதிரத்தையும் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தார். நடனத் திற்கு முதல் வகுப்பு, நடனமாடும் நங்கையர்களின் கடைசி வகுப்பாயிருப்பதைக் கண்டு வருத்தப்பட்டேன். அந்த நிலையிலுள்ள அந்தக் கனவான் கடவுளென்று சொன்ன வுடன் உன்னைப் பார்த்தவர் பிரமித்தார். காமக்கண், அருள் கண்ணுக மாறி உன் கலையை ரசிக்க ஆரம்பித்து விட்டார். அதனுல்தான் காமக்கண்களே மாறியபிறகு கூட என் கண் உன்பக்கம் திரும்பாமலிருப்பதினுல்தான், பொருமைப்பட்டேனென்று சொன்னேன்"

தலைவ, பொருமையென்றவுடன் பயந்தேன். நடன மாடும் பெண்ணை நம்பும் ஆண், என்றென்றும் சந்தேகத் துடன் வாழவேண்டிவருகிறது. அழகில் பொருமையை வைத்து, இன்னெரு பெண்ணை ஒத்திட்டுப் பார்க்கிருர்கள் புகழில் பெருமையை வைத்து, பொருளுலகத்தில் நடமாடுகிருர்கள். இறுதியில், நடனப் பெண்களின் ஜீவா தாரமான கற்பில் பொருமையை வைத்து, குற்றவாளிக் கூண்டில் பெண்களைத்தான் நிறுத்துகிருர்களே தவிர, பொருமையின் அடிப்படை ஆண்தானென்பதை உணர்வ தில்லை"

உண்மையான பேச்சு. ஆண்களுலகத்தின் நீதிபதிகள் ஒருதலைப்பட்ச தீர்ப்பளிப்பவர்கள். வாதாடும் பெண்கள்

தன்மானமுள்ளவர்கள். அவமானத்திற்குப் பயப்படுவார் கள். அந்த தைரியம் ஆண்களுக்கிருக்கும் வரையில் இந்த நிலைதான்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, காலில் சதங்கையை அவிழ்த்துக்கொண்டிருந்தாள். இரண் டாவது முடிச்சை அவிழ்க்கும்போது மாடிப்படி யேறும் சத்தம் கேட்டது. அவிழ்த்த முடிச்சை மீண்டும் முடித்துக் கொண்டு கதவைத் திறந்தாள். கலைஞன் நின்று "இன் றைய நடனம் மிக்க உயர்வு" என்றான். "தங்கள் ஆசி" என்றவுடன் புறப்பட்டுப் போய்விட்டான். கலைஞன் போன வுடன் தலைவன் "தலைவி, கலைஞன்தானென எப்படிக் கண்டுபிடித்தாய்?"

"படியேறும் காலடி சப்தத்திலிருந்து"

"காலடி சப்தம் கலைஞனின் காலடியென்று எப்படித் தெரியும்?

"கட்டைத்தட்டும் சப்தத்தையும், காலடி போட்டுக் காண்பித்த தாளத்தையும் ஞாபகத்தில் வைத்திருந்ததால் தான் கலைஞரென்று தெரிந்துகொள்ள முடிந்தது. காலடி யின் சப்தத்திலிருந்து, மனிதரின் இயல்பை சொல்லத் தானே நாட்டியக்கலை. அந்தக் கலையைக் கற்றுக்கொடுத்த கலைஞனின் காலடியின் சப்தத்தைத் தெரிந்துகொள்ளா விட்டால், அக்கலையே என்னைச் சபித்துவிடாதா?

"நடனத்தோடு நற்பண்புகளையும் சொல்லிக்கொடுத் திருக்கிறார்" எனச் சொல்கிறான்.

தற்கால நடன ஆசிரியர்களின் நிலையையும், நடனமாடும் பெண்களின் நிலைமையும் மிக்க வேடிக்கை யானது. ஆசிரியர்கள் மூன்று மாதத்தில் அரங்கேற்றம் வைத்துவிடலாமென்று சொல்லிவிடுகிறார்கள். பெண்கள்

சினிமாப்படத்தைப் பார்த்துப் பார்த்து தானுகவே நடன மாட ஆரம்பித்துவிடுகிருர்கள். நடனத்தின் ஆர்வத்தைப் பார்த்து தாய் தந்தையர்கள் அந்தப் பெண்ணிற்கு நடனம் கற்றுக்கொடுக்க ஆசிரியரைக் கூப்பிடுகிருர்கள். அந்தப் பெண்ணுக்கு மூன்று மாதத்தில் கற்றுக்கொடுத்துவிடுவ தாக ஆசிரியர் சொன்னவுடன் நடனம் ஆரம்பமாகிறது.

பணம் படைத்த வீடாயிருந்தால் பெண்ணிஷ்டம் போல் நடனம். பெற்ருேர்கள் கேட்டால், "பிரமாதமான பாவம் அமையுது. என்னமோ நான் சொல்லப்படாது. வருங்காலத்திலே ஒரு நக்ஷத்திரமாக வரும்" என்று வாயாரப் பொய் சொல்லுவார். அந்தப் பெண் நடன மாடுவதை அந்தப் பெண்தான் பார்க்கவேண்டும். மூன்ரு வது மாதத்தில் ஒரு நீதிபதி அல்லது ஒரு மந்திரி தலைமையில் அரங்கேற்ற விழா நடைபெறும்.

அரங்கேற்று விழாவிற்குப் பத்திரிகையில் போட்டோ போட்டிருக்கும். அலாரிப்பு முதல் தில்லாஞ வரையில் நிகழ்ச்சிநிரல் இருக்கும். அதோடு மார்வாடி, பாம்பாட்டி, சினிமா நடனமும் கலந்திருக்கும். நடனத்திற்குத் தலைமை வகித்தவர் நடனமாடிய பெண்ணையும், நடனத்தையும் பிரமாதமாக புகழ்ந்து பேசிவிடுவார். மறுநாள் பத்திரிகை களில் நடனத்தின் விமர்சனங்கள் மிக்க உயர்ந்த முறை யில் வெளிவரும். நடனமும் இரண்டொரு இடங்களில் நடைபெறும் அடுத்த இடத்தில் நடனம் நடக்கும்போது, நடனத்தில் குற்றம் தெரிந்தவுடன் புகழடைந்த கலைஞர் களை அணுகி கலைக்குப் புதுமெருகேற்றி பழையபடியும் அரங்கேற்றுவிழா நடக்கும்.

நடனத்தை வெறும் விளம்பரத்திற்கும், புகழுக்கும், பலியிட்டுவருகிருர்களே தவிர, நல்வழியில் திருப்பமுடிய

வில்லை. காரணம் நிழல்படா வாய்ப்பு, வறுமை நிலையில் தவிப்பு, முதலிய இடையூறுகள் ஏற்பட்டு கலையுலகத்தில் இடம் பெறவேண்டியவர்கள், கயமைத்தனத்தில் ஈடுபடும் நிலைமை வந்துவிடுகிறது. நிலைமையைச் சமாளிக்க நினைக்கும்போது, ஆசிரியர் பகுதியிலுள்ளவர்களே வழிகாட்டிகளாக வந்துவிடுகிறார்கள்.

ஒரு பெண் கலையுலகத்தில் முன்னேறவேண்டுமானால் எத்தனை விதமான ஆபத்துக்களிலிருந்து தப்பவேண்டியிருக்கிறது. முதலில் ஆசிரியரின் காம எண்ணத்தின் எதிரொலி. ஏழு, எட்டுப் பெண்கள் நடனம் கற்றுக் கொள்வார்கள். அந்தப் பெண்களில் ஒருத்திக்கு மட்டும் சிரத்தையாகச் சொல்லிக்கொடுப்பார். காரணம், அந்தப் பெண் சொல்வதைக் கேட்டு நன்றாக ஆடும். ஆனால் மற்றப் பெண்கள் அதை நினைப்பதில்லை. "ஆசிரியருக்கும் அவளுக்கும் கள்ள உறவென நினைத்து, ஆசிரியரைத் தன் கைப்பொம்மையாக்க நினைத்து, தன் மானத்தைத் தியாகம் செய்ய ஆரம்பித்து, இருவரும் கலைத் துரோகிகளாக மாறுவார்கள்.

சில இடங்களில் பெண்களால் இடையூறும், சில இடங்களில் ஆண்களினால் இடையூறும் ஏற்படுகிறது. பழமையில் நடனமாட எண்ணும் மங்கையரை ஆசிரியர்கள் மருத்துவமுறையில் கூட பரீட்சை செய்வார்கள். பரீட்சையில் தேறினால்தான் நடனத்தைக் கற்றுக் கொடுப்பார்கள். ஏனென்றால், நடனத்தின் முத்திரைகளை, தெய்வம், மானுஷ்யம், ராக்ஷஸம் என மூன்று பிரிவுகளாக பிரித்திருப்பதால். வாத, பித்த, சிலேஷ்மத்தைப் பார்த்து நிதானம் செய்யவேண்டும். உடலில் தெய்வீக முத்திரையில் சாந்தமும், மானுஷ்ய முத்திரையின்போது வீரமும்,

ராக்ஷஸ முத்திரையின்போது கோபமும் உண்டாகவேண்டும். சாந்தத்தை உள்ளத்தில் பதியவைக்கும்போது, உடலிலுள்ள எல்லா அங்கங்களும் நிலைக்குத் தகுந்தவாறு கட்டுப்பட வேண்டும். வீரத்திற்கும் கோபத்திற்கும், நரம்புகளெல்லாம் துடித்தெழவேண்டும்.

உடல் அமைப்போடு ஆரோக்கியமு மிருந்தால்தான் நல்ல முறையிலிருக்கும். நடனம் நிகழ்ச்சி நேரத்திற்குள் எல்லா நிலையும் வந்து முடிந்துவிடுவதால், அதற்குத் தகுந்த மனோநிலையும் அமையவேண்டும். கோபத்தைக் காண்பிக்கும்போது, நாமே கோபக்காரனாக மாறுகிறோம். கோபமே மிதமீறிய உஷ்ண நிலைமையை யுண்டாக்குவது. நிகழ்ச்சி முடிந்தவுடன் உஷ்ணத்தைச் சமாளித்து, வீரத்திற்கு நரம்புணர்ச்சியைத் தந்து, சாந்தத்திற்கு எல்லா சக்திகளையும் அடக்கியபோதெல்லாம், உடல்நிலை தளர்ந்துவிடுகிறது. தளர்ச்சி தெரியாமலிருக்கத்தான் பக்கவாத்தியங்களை தோல்கருவியிலும், வெண்கலத்திலும், மரக்கட்டையிலும் அமைத்தார்கள்.

பழைய காலத்தில் நடனத்திற்குப்பின் வாத்தியமாக துருத்தியூதுவதென்றிருந்தது. துருத்தியானது ஒத்துப் போன்றது. நடனமாடுபவர்களுக்குப் பின்னால் நின்றுகொண்டுதான் வாத்தியக்காரர்களும், நட்டுவனாரும், தொழில் செய்வார்கள். நடனமாடும் பெண்ணும் கச்சைக் கட்டியிருக்கும். கச்சைக்கட்டியாடுவதெனபது, இடுப்பைச் சுற்றித் துணியும், கோவணம் மாதிரி குறுக்கே ஒரு கட்டும் கொண்டது. அந்தக் கட்டு, எவ்வளவு நேரம் ஆடினாலும் களைப்பு வராமலிருக்கும். தோல் வாத்தியத்தைக் கேட்கும்போது நினைவு ஒன்றாகும். வெண்கலத்தால் செய்த தாளத்தின் சப்தம் நரம்புத் தளர்ச்சியை சரிசெய்யும். தோலைப்

பதனிட்டு வாத்தியமாகச் செய்யும்போது, உப்பைப் போட்டுத்தான் பதம் செய்து, வாத்தியமாக்கினுர்கள். உப்பிலிருக்கும் சோடியம் சக்தியும், தோலிலிருக்கும் கெந்தக சக்தியும் கலந்து, மனிதனின் கையிலுள்ள பாஸ்பரஸ் சக்தியும் கலப்பதால், நடனமாடுபவர்களின் மனம் தாளத்தில் ஞாபகத்தைச் செலுத்த முயற்சிக்கிறது. வெண்கலம், பித்தளையும் செம்பும் கலந்தது. தாம்பரமும் செம்பும், கலந்து உருகி உலோகமாக மாறும்போது, சத்தமுள்ளதாக மாறுகிறது. சத்தத்தை உண்டாக்குபவனும் மனிதன். மனிதனின் உடலிலுள்ள மூலாதார உஷ்ணத்தின் தொடர்புடன் சத்தம் கலந்து அனுபவிக்கும் போது, நரம்பிடையே தோன்றிய தளர்ச்சி மாறி, முறுக் கேறிவிடுகிறது,

பழமையிலுள்ள நடனமாடும் பெண்கள் நல்ல உடற் கட்டோடு யிருந்திருக்கிறுர்கள். கூட்டுறவு மட்டும் நடன மாடுபவர்களுக்கு விரோதமான மருந்து. கூட்டுறவிருக்க லாம். நடனத்திற்கு 15 நாட்களுக்கு முன்னிருக்கவேண்டும். நடனமே வாழ்க்கைக்குக் கூட்டுறவென நினைப்பவர்கள் நடனக் கலைக்கே வரக்கூடாது. இதைத் திட்டமிட்ட கலைஞன், கலைமகளுக்குக் கணவன் பிரம்மா என வைத் தான். பிர்ம்மா படைப்புக் கடவுள். படைப்புக்கடவுளின் மனைவி கலைத் தெய்வம். படைப்பவன் ஆண். கல்விக் கடவுள் பெண். தாய்மைக்குத்தான் பிள்ளையருமை தெரி யும். தந்தைக்குத் தெரியாது. தந்தை அலட்சியமாய் படைப்புத் தொழிலைச்செய்து, பாமரரை உற்பத்தி செய்து விட்டால், நாடு கெட்டுவிடுமென்றுதான், படைக்கும் கடவுள் நாவில் கலைமகளைக் குடியிருக்க வைத்தான். தியானத்திலிருந்துவிட்டு மந்திரத்தைச் சொல்லும்போது

அது கலை வடிவமாகவே உற்பத்தியாகட்டுமென்றக் கருத்துமிருக்கின்றது.

படைக்கும் கடவுளின் மனைவி கலைமகளாயிருப்பதால் நடனமாடுபவர்களின் கலை நடனம்தான். நாக்கிற்கு நரம்பு கிடையாது. வெறும் சதையுள்ளது. எந்தப் பக்கமும் திரும்பும். அதில் கலைமகளிருப்பாளா? எனக் கேட்கலாம். நமக்கிருக்கும் நாக்குதான் பேசுவதற்கு உதவுகிறது. உள் நாக்கு வளர்ந்துவிட்டால் இருமல் வருகிறது. உள் நாக்கில்லாவிட்டால் பேச்சு வருவதற்கு சங்கடம். உள் நாக்குத் தான் தெய்வீக அருள். நாக்குத்தான் பேச்சை வாங்கி பரிமாறிக்கொள்ளும் இயந்திரம். இயந்திரம் நினைக் குமளவிற்கு திருப்ப வசதிவேண்டும். திரும்பும்போது அருள்வழியாகத் திருப்பவேண்டும். நாக்கின் முனையைக் கூருக வைத்திருக்கிருன். பேசுவதில் பிறர் நோக்கத்தின் குறிப்புணர்ந்து பேசவேண்டும். பேசத்தவறினுல், அங் குள்ள கலைமகளே தான் தண்டிக்காமல் பிறரை விட்டுத் தண்டிக்கச் சொல்லிவிடுகிருள்.

உதாரணமாக பொய் சாட்சி சொன்னுல் முதலில் நமக்கு லாபம் தருகின்றது. பின்னுல் நமக்கு பெருங் கெடுதியை உண்டாக்குகிறது. முதலில் பொய் சொல்ல நினைக்கும்போது, நாக்கிலேயே ஒரு மதமதப்பு தோன்றும். பொய் சொல்லி முடிந்தபிறகு நாக்கை வலிப்பதுபோல் தெரியும். சில சமயம் நாக்கைக் கடித்துக்கொள்வோம். அப்பொழுது யாரோ நம்மை வைவதாகச் சொல்லுவோம். பிறர் வையும்போது கடித்துக்கொள்வதில்லை. நாம் நிதான மாக சிந்திப்போமானுல், அன்று யாருக்காவது விரோத மாகவாவது, மனம் புண்படும்படி பேசியிருப்போம். அதற்

ஆனதால், நடனமாடும் நங்கைகள் நல்வழியோடு வாழத்தான் கலைமகளைக் கலைக்கடவுளாக அமைத்தார்கள். நடனத்தின் பாவங்களை வாழ்வோடு இணைத்துப் பார்க்கும் போதுதான் விபரீதம் ஏற்படுகிறது. சாகித்யத்தில் "காமன்கணை பாயுதே, மோகலாகிரி மீறுதே" என்ற அடிகளுக்கு அபிநயம் பிடிக்கும்போது எதிரே யிருப்பவருக்கும் கணைபாய ஆரம்பித்து, மோகலாகிரியுடன் விலாசம் விசாரிக்க ஆரம்பித்து விடுகிறுர். அதனுல் நடனத்திற்கு அமைக்கும் பாட்டுகள், நாட்டின் நலத்தையும், மொழிப் பற்றையும் பின்பற்றியதாக இருக்கவேண்டும்.

ஆண்கள் நன்ருக ஆடினுலும், பெண்களில்லா விட்டால் பார்ப்பவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. பெண்கள் தனியாக ஆடினுல் வராதவர்கள் கூட வருவார்கள். அதனுல் நடனத்திற்கு அமைக்கும் பாட்டு நாட்டின் நிலைமையை விளக்குவதாகயிருக்கவேண்டும். "வேலவனே, உன்னைத்தேடி ஒருமடநதை, விடிய முழுதும் காத்திருக்கும் வகை என்ன" இந்தப்பாட்டைப்போல், "தமிழே, உன்னை அரியணையேற்ற, நாள் முழுவதும் உழைப்பதென்ன" என்ற கருத்து வந்தால், தலைமை வகிக்க வந்த மந்திரிகளுக்காவது, நாம் வாழுவது தமிழ்நாடுதானென்ற ஞாபகமாவது வரும். சட்டசபையில் வாதாடும்போது. சாதாரண நடனத்தில் கூடத் தமிழைப்பற்றிப் பாடினுர்கள். நாம் ஏன் தமிழ்நாடு எனச்சொல்ல வெட்கப்படுகிருேமென நினைப்பார்கள்.

நான் என்ன நினைக்கிறேன். நடன நாடகங்கள் நடத்தியிருந்தால், நிகழ்ச்சிகளினுல் ஞாபகப்படுத்த முடியும். மார்வாரி நடனத்தையும் எல்லா நிகழ்ச்சிகளிலும்

கலப்பதால், அதைப்பார்க்கும் நம் அரசியல் தலைவர்களுக்கு மார்வாரியின் சாயல் ஏற்பட்டு விட்டதோ? என அஞ்சவேண்டியிருக்கிறது. நடன நாடகங்கள் நடத்தினால் அதில் வரும் கருத்துகளைப் பார்க்கும்போது, மக்களுக்கு நம் நாட்டுநிலை தெரியவரும்.

சினிமாவில் நடனத்தைப் புகுத்த நினைக்கிறார்கள். நடனத்தைப்பல இந்திப் படங்களைப் பார்த்து, உடை கவனம் செலுத்தாமல் தயார் செய்து விடுகிறார்கள். அந்த நடனத்தைப் பார்க்கும்போது நம் பழயகால தெருக்கூத்தில் கோமாளிவேசம் போடுபவனுடைய ஆட்டத்திற்கு நல்ல பெயர் கிடைக்கும். நடன டைரக்டர்களுக்கு முதலாளியின் அபிப்பிராயம்தான். நடனத்தின் தாளம், தலையாட்டுதல்தான் வெற்றி, அவர் கொடுக்கும் செக்கின் தொகைதான் நற்சாட்சிப் பத்திரம். இந்த நிலையிலிருக்குமானால் கலை உலகம் எப்படித் திருந்தமுடியும். மனிதனின் கற்பனையை, பொருளாதார நெருக்கடி நொறுக்கி சுக்குநூறாக்கி விடுகிறது. அந்நிலைமையில் கலை தெரியாத புகழ் கிடைத்த ஒருவரிடம் சரணகதியடைய நேரிடுகிறது. வறுமையின் காரணமாக இவனின் கற்பனை சொற்பத் தொகைக்கு விற்கப்படுகிறது. தற்கொலையைவிட கொடும் பாதகம் மற்றவனின் கற்பனைக்குத் தன் பெயர் போடுவது. இதை நினைத்துத்தான் கலைமகள் கல்லின்மீது உட்கார்ந்துவிட்டாள். பாமரனிடம் தான் நான் உட்காருவேன். கலைஞன்மீது உட்கார்ந்தால் கற்பனை என் பாரத்தினால் தடை ஏற்பட்டு விடுமென்றுதான், பாமரர் சார்பிற்கு பொருளும், பகுத்தறிவுக்கு அருளும், தருவதாக உறுதி கொண்டிருக்கிறாள். இந்தவிதமான காரணத்தால் லட்சுமி என்றைக்கும் நின்றுகொண்டே யிருப்பதால்,

கலை மனதில் உட்காருவதைப்போல், பொருள் எப்பொழுது உருண்டோடுவோமென்று நின்றுகொண்டே யிருக்கிறது. நடனத்தால் ஏற்படும் பொருளை, கலைஉலகத்திற்குப் பயந்து சேமித்து வைக்காமலிருந்தால், உருண்டோடிவிடும். ஆனதால் நடனக்கலைஞர்கள், நடனமாடுபவர்கள், பின்னணி வாத்தியக்காரர்கள் யாவரும் கலைத்தெய்வத்திற்குப் பயந்து, நாட்டின் கலாச்சாரத்தை அனுச்சாரமாக்காமலிருக்கப்பாடுபடவேண்டுமென்ற எண்ணம் வளரவேண்டும்.

## இசைக்கலை :

ஓசையை அழகாக அமைத்து அசையா உள்ளத்தை அசைய வைக்கும் கலைதான் இசைக்கலை. இசைக்கலையைப் பற்றிய ஆராய்ச்சி தமிழ் நாட்டிலுள்ளதைப்போல் வேறு எந்த நாட்டிலுமில்லை. காரணம், அடியவர்களாகப் பிறந்தவர்கூட, இசையால் பரமனைப் பாடி பக்தி செய்தவர்கள். பாட்டைக் கேட்க பரமனே மனமுவந்து தமிழகத்திற்கு வந்தான். ஞானசம்பந்தருக்கு உமையவளே வந்து ஞானப் பால் தந்தாள். ஞானப்பால் தந்ததால் பாட்டுப் பாடினுரென்றதை சினிமா உலகம்கூட பரிகாசம் செய்தது. தமிழ் இசையால் வாழ்ந்த உலகத்தில் இயற்கையாகவே ஞானப்பாலுண்டவர்களாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

ஞானப்பாலை நம்பாதவர்கள், அஞ்ஞானப்பாலை சாப்பிடாமல், விஞ்ஞானப்பாலை சாப்பிட்டதாகக் கற்பனை செய்து கொள்கிறார்கள். ஒன்றை இல்லையென்று சொல்லும்போது, மற்றொன்றை நம்பித்தானுகவேண்டும். எதை நம்பி மறுக்கிறார்களோ அதைச்சொன்னவன் ஒருசித்தன். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற வாக்கியத்தை நம்புபவர்கள்தான் ஞானப்பாலிலிருந்து, ஞானமுள்ள எல்லா இசைகளையும் மறுக்கின்றார்கள்.

இசையை தெய்வீகமாக்கி விட்டகாரணத்தால் ஓசையைக் கோவிலில் வைத்தார்கள். உள்ளிருக்கும் ஆண்டவனே ஓசைக்குக் கட்டுப்பட்டுத்தான் வாழ்கிருனென்பதை உணர்த்துகிறது. நாதத்திற்குக் கட்டுப்படா உயிரினம் எதுவும் கிடையாது. மகுடியின் ஓசையால் நாகப்பாம்பு கட்டுப்படுகிறது. குழலின் ஓசையால் மாடுகள் கட்டுப்படுகின்றன. வார்த்தையின் ஓசையால் ஒரு நாட்டையே சுதந்திரம் பெறச்செய்தது. ஓசையின் பெருமையால்தான் நாடே இயங்கிவருகிறது. வானொலியின் அலைவேகங்கள் காற்ருேடு கலக்கும்போது, செய்திகளைப் பரப்புவதற்குச் சக்தியை யளிக்கிறது.

ஓசையை எந்தவகையில் சேர்த்தாலும், அதன்பயனை அப்பொழுதே தெரிவித்துவிடும். சமுத்திரத்தின் ஓசையைக் கவனித்தால் உலக நாதம் ஓம்காரத்திலடங்கியதெனத் தெரிவித்துவிடுகிறது. மக்களின் கூட்டம் கூடியிருந்தால், அத்தனை மக்களின் ஜீவிய மூச்சு, ஓம்காரத்திலடங்கியதென ஓ வென்ற கூச்சல் தெரிவிக்கிறது. ஓம்கார நாதத்திலிருந்துதான் ஓசை பிறந்ததென்று நினைத்தால்கூட, தெய்வீகத்தினிடமிருந்து வந்ததால்தான் அத்துணைச் சக்தி பெற்றிருக்கிறது.

சத்தத்தைக்கொண்டே நிகழ்ச்சியைக் கண்டுபிடித்து விடலாம். ஒலிபெருக்கி மலிந்தகாலமிது. தூரத்தில், வந்தேமாதரம் என்ருல் காங்கிரஸ் கூட்டம். வளமார் திராவிடநாடு என்ருல் தி. மு. கழகம். வாழ்க திராவிடம் என்ருல் தி. க. கூட்டம். சத்தத்திஞல் நல்லவைகளும் ஏற்படுகின்றன, கெடுதிகளும் ஏற்படுகின்றன. காந்தியின் வாக்குச் சத்தத்திஞல் அன்புலகம் ஏற்படுகிறது. அணுகுண்டின் சத்தத்திஞல் அழிவுலகம் ஏற்படுகிறது. நன்மையும், தீமையும் ஏற்படுவது சத்தத்தின் மகிமையே.

சத்தத்தைப் பக்குவப்படுத்தி, சங்கீதமாக்கி சன்மார்க்கத்தில் ஈடுபடுத்திவிட்டார்கள். சங்கீதத்தைத் தெய்வீகத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். பழமையில் சங்கீதத்தையெல்லாம் கடவுட்டண்மைக்கே ஒப்புவிக்கத் திட்டமிட்டான். பாசுரங்கள், காவியங்கள், திருப்புகழ், தேவாரம், யாவும் ஆண்டவனைப்பற்றிப் பாடியவைகள். எந்த மனிதனையும் பற்றிப் பாடுவதில்லையென்ற வைராக்கியத்தில் பல அடியவர்கள் மிகச் சிரமப்பட்டுத் தன் லட்சியத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

பாட்டோடு, சேவையும் செய்திருக்கிறார்கள். உழவாரப் பணியைத் திருநாவுக்கரசு சுவாமிகள் செய்துவந்தார். கோவில்களை நல்ல முறையில் திருத்தினர். இசைவாணர்கள் இசை பாடுவதில் மட்டும் பயிற்சி பெறாது, சமூக நலத் திட்டங்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். நாட்டிலுள்ள பொருளாதாரத்தையும் பக்குவப்படுத்தியிருக்கிறார்கள். குவிந்துகிடக்கும் பணக்காரர்களின் பணத்தைத் தனது சங்கீதத்தின்மூலமாகப் பரந்து சிலவழிய முயற்சி செய்தனர்.

இசைக்கலை ஒரு ஒப்பற்ற கலை. அதைப் பயிற்சி செய்துகொள்பவன், சிறந்த மனப்பான்மையுள்ளவனாகவும் தெய்வீக நம்பிக்கையுள்ளவனாகவுமிருக்கவேண்டும். தெய்வீக நம்பிக்கையில்லாதவனுக்கு இசை வந்தாலும் அது நீடித்து நிற்காது. காரணம், ஆண்டவனே நாதவடிவம். அந்த நாதத்தை நம்பிப் பாடுகிறவன் ஆண்டவனிடம் நம்பிக்கை யில்லாவிட்டால் சுருதியோடு சேர்ந்து பாட முடியாமல், அபலமாகவே பாட்டு அமையும். அப்படியிருந்தால் கேட்பவர்களுக்குப் பிடிக்காது. இசையைக் கொண்டே, மக்களைத் தன்வயப்படுத்த முடியும்.

பாடுபவனின் நோக்கம் மக்களின் பக்கமிருந்தால் தன் கற்பனை கெட்டுவிடும். சில பணக்காரர்களையும், உயர்ந்த உத்தியோகஸ்தர்களையும், புகழமைந்தவர்களையும் முன்னணியில் உட்கார வைத்துவிடுவார்கள். பலருக்கு நுணுக்கமான சங்கீதம் தெரியாது. ராக ஆலாபனம் நடக்கும்போது, புரியாத பணக்காரர் முகத்தைச் சுளித்து, தன் கையிலுள்ள வைர மோதிரத்தைத் துடைத்துக் கொள்ள விரும்புவர். அதைக் கவனித்த பாடுபவர், தான் பாடுவதில் ஏதோ குற்றமிருப்பதாக எண்ணி நல்ல முறையில் பாடுவதை மாற்றிக் கொலைசெய்ய ஆரம்பித்து விடுகிறார். தாளத்தைத் தொடையில் போட்டுப்பார்த்துக் கொள்ளத்தான் வைத்தார்கள்.

பாடும்போது பக்கவாத்தியக்காரர்களின் ஒத்துழைப்புக் கிடைப்பது மிகக் கஷ்டம். ஒரே குழுவாக யிருப்பவர்கள் தனக்குள் ஒரு திட்டத்தை வைத்துக்கொண்டு வாசித்து விடுவார்கள். சில இசைக் கச்சேரிகளுக்கு, பாலக்காடு மிருதங்கமும், ஈரோடு பிடிலும், மன்னார்குடி கொன்னக் கோலும், உடுமலை கஞ்சிராவும், வைத்துவிட்டு ஒரு சாதாரணமானவரைப் பாடச்சொல்வார்கள். பக்க வாத்தியத்தின் ஒத்துழைப்பை நம்பிப் பாடுபவர் பாடுவார். பக்க வாத்தியக்காரர்களோ, தன் புகழை எண்ணிப் பாடுபவரோடு ஒத்துழைப்பதில்லை. அதனால், பாடுபவர் பாடு கஷ்டமாகப் போய்விடும். தாளத்தின் நிதானம் தெரியாமலிருக்க சாமர்த்தியமாக நடையை மாற்றி வாசிப்பார்கள். இந்த விபத்திலிருந்து தப்பிப் பாட்டுப்பாடி நல்ல பெயர் வாங்கவேண்டும். இந்த ஆபத்தையுண்டாக்கும் கலைஉலக தன்னலவாதிகள் வாழ்வார்களென்று முன்னமேயே தெரிந்துதான், தொடையில் தாளம் போடவேண்டுமென்று

வைத்தார்கள். தொடையிலுள்ள நரம்புக்கும் காதிலுள்ள நரம்புகளுக்கும் சம்பந்தமுண்டு. மட்டமாக உட்கார்ந்து தாளத்தைத் தொடையில் போடுகிறோம். மூலாதாரத்தில் பதிந்து காதுக்குச் சத்தம் போவதால், தாளத்தை நிதானம் செய்யமுடியும். பக்க வாத்தியக்காரர்களின் சதிச் செயலுக்கு ஈடுபடாமலிருக்கத்தான் தொடையில் தாளம் போடவைத்தது.

இசை வித்துவான்களின் வாழ்க்கை உருப்படாமல் போவதற்குக் காரணம் பொறாமைதான். எந்த வித்துவானையும் சிறந்தவனென்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒருவருக்கொருவர் குற்றம் சொல்வதைத் தவிர, நல்ல முறையில் எண்ணுவதே கிடையாது. எண்ணத்தின் எழுச்சிதான் வாழ்க்கையை வளமாக்குவதும் சீரளிப்பதும். அந்தப் பொறாமை, நம் தமிழகத்தில் தாண்டவமாடுவது போல் வேறெங்கு மிருக்காதெனவே நினைக்கவேண்டி வருகிறது.

அதிலும், புகழ் கிடைத்துவிட்டாலோ, அவர்தான் இசை உலக சர்வாதிகாரியாக மாறுகிறார். அவரிடம் சிஷ்யகோடிகள் சரண்புகுகின்றனர். கேட்கவேண்டுமா? கலைப் பண்பாட்டிற்குப் பதிலாக கர்வத்தின் எதிரொலியைத்தான் பார்க்கமுடியும். அவர் மற்றவர்களைப்பற்றிப் பேசும்போது, தன்னிடமுள்ள கலையைப் பிச்சை வாங்க நினைத்தார்கள். அதில் தப்பித்துவிட்டேனென்று வள்ளலாக வேறு பேசுவார்கள்.

இசைவாணர்களுக்கு அன்பிருக்கவேண்டும். அடக்கமிருக்கவேண்டும். தான் கற்றுக்கொண்டது கொஞ்சம்தானென்ற எண்ணம் வளர்ந்து, இன்னும் கலையில் ஞானம்

வளரவேண்டுமென்ற நோக்கத்தோடு வாழவேண்டும். பாடத்தின் ஆரம்பத்தில் பண்பாட்டோடு வாழ்ந்துவிட்டு புகழடைந்த பிறகு கற்றுக்கொடுத்த குருவையே இகழும் குணம் சில இசைவாணர்களிடமுண்டு.

குருவின் சாபம் பொல்லாதது. மாக்ஸ்மில்லர் என்ற ஜெர்மனிப் புலவன், "ஒரு கன்னிப் பெண்ணின் சாபமும், கற்றுக்கொடுத்த குருவின் சாபமும், ஒரு கலைஞனின் மரணத்திற்கு வழிகாட்டி" என உரைக்கிறான். பின் விளக்கம் தருகிறான். பருவமடைந்து உலகமறியாப் பெண்ணைக் கெடுத்துவிட்டு, கைவிட்ட மனிதன் வாழ்வு வாழ்வல்ல. பேதைமையுள்ள பெண்ணைப் புகழுரைக்கா ளாக்கி கைவிட்டுவிட்டால், அந்தப் பெண் "சுகமே, உன்னைப்பற்றி நான் கற்பனைகூடச் செய்யவில்லை கற்பனைக்குக் கர்த்தா, கொலையாளியாகிவிட்டான். என் புனிதமான கற்பைத்தான் கொலைசெய்யத் தெரிந்தவன், சுகத்தை என் உள்ளத்திலிருந்து அறுத்தெறிந்து கொலைசெய்ய முடியாமல் போய்விட்டான். திருட்டுத்தனமாகச் சென்றவன் வாழ்க்கையில் திருடனாகிப் பாழாவான்" எனச் சாபமிட்டிருப்பதை அவன் அனுபவித்துத்தான் தீருவான். அதைவிடக் குருவின் சாபம் சாமான்யமானதல்ல. சுகத்தைவிட உயர்ந்த கலையைத் தந்திருக்கிறான். சுகமாவது அனுபவிக்கும் வரையில்தான் நிலைக்கும். கலையோ, சாகாத நிலை, என்றும் மாறாத நிலை, யாராலும் அழிக்கமுடியாத சாசுவத நிலையுள்ள கலையை மனமுவந்து தன்னலமில்லா தியாகத்தின் வடிவமான தெய்வத்தை முன்னிறுத்தித் தருகிறான். அந்த ஒப்பற்ற நன்றியை மறந்தவனுக்கு வாழ்வில் எப்படி நன்மை கிடைக்கும்? வாழ்க்கைத் துணைவி கிடைத்தால்கூட, அத்துணைவியின்

அன்புகூட இவன் சார்பிலிருக்காது. ஒவ்வொரு வாழ்க்கை அதிகாரமும், குரு சாபத்தினுல் பாதிக்கப்படுமாதலால் தான், நாம் வணங்கும் ஆண்டவனுக்குப் பெயர் குருநாத னெனப் பெயர் வைத்திருக்கிருர்கள்.

குருநாதனுய் விளங்கும் ஆண்டவன், குருவுக்குத் துரோகம் செய்துவிட்டு, தன்னே உண்மையாக வணங்கினுல் அவனே மன்னிக்க இயலுமென்பதனுல்தான், நாதத்திற்கெல்லாம் குருவாக விளங்குகிறேனெனச் சொல்கிருர். நாதத்தைப் பக்குவப்படுத்திப் பாடும் பாவாணர்கள் கலேக்கு மதிப்புக் கொடுப்பதோடு, கலேயைத் தந்த நாட்டிற்கும் மதிப்புத் தரவேண்டும். நாடில்லாவிட்டால் கலேயேது? என்ற வினுவோடு காலந்தள்ளவேண்டும்.

தமிழ்நாட்டின் கலேயுணர்ச்சியை நினேக்கும்போது வேடிக்கையாக யிருக்கும். இசை பாடுவதில்கூட சர்வாதிகாரம். தெலுங்கில் பாடிய தியாகய்யா மொழி வெறிக்காகப் பாடவேயில்லே. தனது தாய்மொழி தெலுங்கு. ஆண்டவனேப்பற்றிப் பாடும்போது, தனது தாய்மொழியில்தான் பாடவேண்டுமென்று நினேத்தார். அதனுல் அவர் தெலுங்கில் பாடினுர். அவரின் மொழிப் பற்றிற்கு நாம் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிருேம்.

நம் தமிழ் நாட்டில் இசை வித்துவான்கள் பெரும்பாலோர் தமிழ் பேசுபவர்கள்தான். பிராமண இசைவித்துவான்கள் தங்களுக்குரியதாகச் சொல்லும் சமஸ்கிருதத்தையோ கிரந்தத்தையோ பேசுவதில்லே. வீட்டிலிருந்து நம்மோடு பழகும்வரையில் தாய்மொழியைத் தமிழாகத் தான் பாவிக்கின்றனர். அந்த வித்துவான்குழு, தெலுங்கில்

தியாகய்யர் உருப்படி பாடினுல்தான் வித்துவான்கள் குழுவில் இடமளிக்கிறுர்கள். யோசிக்குமளவில் தியாகய்யரின் மொழிப்பற்றுக்குத் துரோகியாகிறுர்கள். தியாகய்யர் ராமனைத்தான் பாடினுர். ஏழ்மையிலிருந்து எழுந்த எழுத்தோவியம், ராம ஓவியத்தோடு கலக்கும்போது ராமனுகத்தான் மாறமுடியும். ராமனைப் பாடும்போது. தாளத்தை நிதானப்படுத்தும்போது, அனுமானம் தோன்றித்தானுகும். அதனுல்தான் ராமனைப் பாடினுர். ராம என்று சொல்லிப் பார்த்தால், ராகத்தின் ஆரோகணம், அவரோகணமாகத்தான் வருகிறது. ரா என்றுல் இழுக்கும் மூச்சு. ம, என்றுல் அடங்கும் மூச்சு. இழுக்கும் சத்தமும் அடங்கும் சத்தமும் கலந்தது ராமநாமம். அதனுல் பழமை அறிவியல் வாதிகள் ராமனை ஏழாவது அவதாரமாக வைத்துவிட்டார்கள். சப்த ஸ்வரங்களையும் விஸ்தாரப் படுத்தும்போது ராவும், தாளத்தோடு இணைக்கும்போது மவும் தோன்றுகிறது. சாகித்யம் செய்ய நினைக்கும்போது அனுமானப்படுத்தவேண்டும். அதனுல்தான் ராமனுக்கு தூதனுக அனுமானை வைத்தார்கள். ராமனுக்கு மனைவி சீதை. பூமியிலிருந்து எடுக்கப்பட்டவள். அதுவும் நிலத்தை உழும்போது அகப்பட்டவள்.

மூச்சுக்கு மனைவி மூலாதாரம். விடும் மூச்சும், இழுக்கும் மூச்சும், அடங்கியிருப்பது மூலாதாரத்தில். மூலாதாரத்தில் பெண்மை சக்தியிருப்பதால் சீதையை மணம் புரிந்தது சிவதனுசை முறித்து, சிவத்தின் தத்துவமான பிரம்மச்சரியத்தை முறித்தபிறகுதான் சக்தியின் இயல்பு கலக்கமுடியும். உடற்கூற்றையே இராமாயணமாக வைத்த காரணத்தினுல்தான், மனிதனுக்கு இயல்பான குறை

சொல்லுதலையும் இராமன் பெற்றிருக்கிறுன். இவ்விதமான நிலையுள்ள ராமனைத்தான் தியாகய்யர் பாடி மோட்சமடைந்தார்.

அவரின் விழா தமிழ்நாட்டில் நடக்கும்போது தமிழில் பாடக்கூடாதென நினைப்பவர்களை என்ன நினைப்பது? தமிழ் சகல மொழியினரையும் வரவேற்கும் இயல்புடையது. தன்னகத்தே கொண்டுள்ள ஆத்ம சக்தியையும் யாரும் அழிக்கமுடியாதென்ற தைரியமுள்ளது. எந்த மொழி தன் நாட்டுக்கு வந்தாலும், அதை வாழவைக்கத்தான் நினைக்கும். ஆனல் அந்த மொழிக்கு கர்வம் வந்துவிட்டது தெரிந்தால், அதைத் தண்டிக்காமல் விடாது.

உதாரணமாக, பிரிட்டிஷ் அரசாட்சி காலத்தில், ஜஸ்டிஸ் மந்திரிசபை நடந்தது. அப்பொழுது "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்ற பாட்டைப் பாடக்கூடாதென உத்தரவு போட்டிருந்தார்கள். அதே ஜஸ்டிஸ் கட்சியின் மறு அவதாரமான திராவிடக்கழகம், ஜஸ்டிஸ் கட்சி மாறியவுடன் தமிழை நாத்தீகத்துடன் வளர்க்க ஆரம்பித்தது. தமிழ் தன்னைத் தடுத்து உத்தரவு போட்டவனைக் கொண்டே தன்னை ஆதரிக்கச் சொல்லிவிட்டது.

தமிழ்நாட்டில் தமிழில் பாடிய வித்துவான்கள் அநேகருண்டு. அவர்களின் விழா நடப்பதற்கு நேரம் வரவில்லை. முத்துத் தாண்டவர், அருணகிரி, மாம்பளக்கவிச் சிங்க நாவலர், சுப்புராமய்யர், சின்னையா, முதலியவர்களின் விழாக்கள் என்ன? அவர்கள் ஞாபகமே கிடையாது. தியாகய்யர் மட்டுந்தான பாடினுர்? பல வித்துவான்கள் தன்னை மறந்துபாடியவர்கள் எத்தனையோபேரிருக்கிறுர்கள்.

ஆனதால் இசையை வளர்ப்பவர்கள், பிடிவாதகுணத்தை மாற்றி தமிழிசையை வளர்க்கப் பாடுபடுவார்களென்பதை நம்புகிறேன்.

தமிழ் இசைச் சங்கம் வருடந்தோறும் கூடுகிறது. பத்து நாள் கச்சேரி நடக்கும்.

கச்சேரிகளில் தமிழ் இசைக்காகப் பாடுபடுபவர்களுக்கு வாய்ப்பு இருக்காது. தெலுங்குப் பாட்டைத்தான் பாடுவேனென்று பிடிவாதம் செய்து வாழ்ந்தவர்களுக்குத்தான் நிகழ்ச்சி கிடைக்கும். வெகுகாலமாகத் தமிழிலேயே பாடி வரும் மதுரை திரு. மாரியப்ப சுவாமிகளுக்கு இடம் கிடையாது. ஸ்வரங்களுக்குப் பதில் தமிழ் வார்த்தைகளையே போட்டு அழகாகப் பாடுவார். அவரின் பாட்டுக்கு மதிப்புக் கொடுக்காமல், தமிழைக் கொலை செய்யும் பாதகர்களுக்குத் தான் வாய்ப்புக் கொடுப்பதென்றால், தமிழ் இசைச் சங்கத்தை மாற்றி சர்வாதிகார அபிமான சங்கமெனப் பெயர் வைத்துவிடலாம்.

பிரபலமடைந்த பாடகர் ஒருவர் பாடுவதைப்பாருங்கள். "தமிழ்நாடு செய் தவப்பயனாய் வந்தவர்" என்ற அடியை விஸ்தாரம் செய்து பாடுவார். இந்த அடியை, தமிழ்நாடு செய் தவப்பயனாய் வந்தவர் என்று பாடுவார். நாய் வந்தவர், நாய் வந்தவரென்று பாடுவார். ரசிக சிகாமணிகள் தலையாட்டி, கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவிப்பார்கள். அந்த இடத்தில் தமிழபிமானமுள்ளவனிருந்தால், இசைக் கலைக்குத் தமிழ்நாட்டில் புத்திவர, இன்னும் எத்தனையோ ஆண்டுகள் தேவையென்றுதான் நினைப்பான்.

ஆனதால், தமிழ் நாட்டில் இசைக்கலை இன்னும் வளரவேண்டித்தானிருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள

நாகஸ்வர வித்துவான்கள்தான் சங்கீதத்திற்கு ஒரு வழி
காட்டியாக யிருந்தார்கள். நாகஸ்வர வித்துவான்களை
மேளக்காரர்கள் என்று கேவலமாகப் பேசிவந்தார்கள்
காரணம், தங்களின் கலையில் கவனம் செலுத்தினார்களே
தவிர, நாட்டின் நிலைமைக்குத் தன்னை மாற்றிக்கொள்ள
கற்றுக்கொள்ளவில்லை.

நாகஸ்வர வித்துவான்களால்தான், பரதநாட்டியம்
வளர்ந்தது. நாட்டியம் வளர்ந்தது. அதன் பெயர் பரத
நாட்டியமாக மாறிவிட்டது. பரதமுனிவரால் சொல்ல
பட்டதால் பரதமெனப் பெயர் வந்தது. உண்மையில்
நாதஸ்வர பரம்பரையின் சொல்பகட்டினால்தான் நாட்டியம்
வளர்ந்தது. உயர்ந்த நிலையிலுள்ள நாகஸ்வர வித்து
வான்கள் தன் இனத்தாரைக் கவனிப்பதில்லை. அதனா
அந்தக் கலைஞர்கள் வழியும் கெட்டுவிட்டது. அதன்
பெயரைமாற்ற, திருவெண்காடு, திருவீழிமிழலை, திருவா
வடுதுறை, திருவிடைமருதூர் முதலிய ஊர்கள் ஒப்பற்ற
நாகஸ்வர வித்துவான்களைத்தந்து, நல்லபெயரை வாங்கி
கொடுத்துவிட்டது.

திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர்கள் நாத
ரெத்தினமாக உலகெங்கும் புகழடைந்தார். காவிரியை
கொண்ட சோழநாட்டு வித்துவானாகிய ராஜரெத்தினம்
அவர்கள் தாம்பிரபரணிக் கரையிலுள்ள அருணாசலத்தை
சீடராக ஏற்று, சீராகக் கலையைப் போதித்தும் புகழ்
பெற்றார். குருவின் பக்தியை உள்ளூர தியானம்செய்து
கலைக்கு மரியாதை செலுத்திவரும் காருகுறிச்சி அருணா
சலம் புகழேணியில் விளங்குகிறானென்றால் காவிரித்தமிழ்
தாம்பிரபாணித்தமிழை வளரவைத்த வள்ளல் தன்மை
தானென்பது தெரியவருகிறது.

இசை வழியாகத் தமிழ்நாட்டைப் பார்க்கும்போது, அசையாத்தன்மையுடையதாகவே தெரிகிறது. உலகைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான் ஜெர்மனிக்காரன். அவன் சமாதி நிலையைப்பற்றித் தெரிந்துகொள்ள இந்தியாவுக்கு வந்தான். யோகிகள் நிறைந்த நாடு. இன்று புகழுடையுல் புண்ணிய ஊர்கள் யாவும் யோகிகளின் சமாதிதான். பழனியில் போகர், திருப்பதியில் கொங்கணர், சிதம்பரத்தில் திருமூலர், தீர்க்கதரிசிகளின் சமாதியினுற்தான், அருள்சுரந்து மக்களைத் தன்வயப்படுத்துகிறது. எவ்வளவு நாத்திகம் பேசினாலும், இந்த ஊர்களில் கூட்டம் குறையவே குறையாது. சமாதிகொண்ட ஆத்மஞானிகளின் அற்புத சித்துக்கள். இதைக் கேள்விப்பட்டுத்தான் வந்தான். வந்து திரும்பி ஜெர்மன் சென்று, "தமிழ் நாட்டில் ஒரு இசைக் கச்சேரியில் சமாதி நிலைமையைக்கண்டேன். பாடுபவர் தன்னை மறந்து சுருதியோடு இயைந்து பாடுவதே சமாதிநிலையெனக் கண்டுகொண்டேனென்றான். தமிழ் நாட்டில்இசைக்கும், யோகநிலைக்கும் சம்பந்தமிருந்துதானக வேண்டும்.

## சிலப்பதிகாரம் :

இசைக்குப் பிறகு சிலப்பதிகாரத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியதவசியம் ஏற்பட்டுவிட்டது. சிலம்பின் நாதத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சி, நடனத்தால் ஏற்பட்ட இணைப்பு, இசையின் கற்பனையால் ஏற்பட்ட பிரிவு, காமத்தின் எதிரொலியால் நடந்த அநீதி, நீதிக்காக தீயும் ஒத்துழைத்த அதிசயம், இத்தனை கருத்துக்களையுமடக்கித் தமிழகத்தின் காவியத் தலைமையாய் விளங்குவது.

கோவலன் ஒரு வியாபாரி. பணம் படைத்த குலத்தினன். அரசவைக்கு அபிமானமுள்ளவன். கண்ணகி அதே குலத்திலுதித்தவள். உடலழகோடு உள்ளத்தினழகையும் பெற்றவள். இருவரும் தம்பதிகளாகின்றனர் வாழ்க்கையின் சுகத்தை அனுபவித்தனர். தலைவனின் அன்பு தலைவியிடமே யிருப்பதை மாற்றியமைக்க எண்ணி மாதவி தோன்றுகிறாள். அவள் ஒரு நடன மாது. அவள் கலையிடம் மோகம் கொண்டு, கண்ணகியை மறந்து அவள்பால் செல்கிறான்.

இதன் ஆசிரியர் இளங்கோ அடிகள். துறவி. அவர் எழுதிய சிலப்பதிகாரத்தில் வியாபாரியைத்தான் தலைவனாக்கினான். சரக்கின் லாப நஷ்டத்தைப் பார்ப்பவன், வாழ்க்கைக் கலைச்சரக்கில் லாப, நஷ்டத்திற்குப் பதில் சுகத்தின் தராதரத்தைப் பார்க்கிறான். அந்தப் பார்வை நஷ்டத்தில் முடிகிறது. சுகத்தைப் பரிமாறிக்கொள்ளும் பாவையையும் திருத்துகிறான். கண்ணகியை ஒப்பற்ற கற்பின் சிகரமாக வைத்துவிட்டார். சுகத்தைத் தந்தவர் உரிமையுள்ள தலைவன். அந்த உரிமையை யாரும் வாங்கிக் கொள்ள முடியாதென்று தைரியமாக வாழ்ந்து தலைவனையே தியானம் செய்துகொண்டிருந்திருக்க வேண்டும். தியானத்தின் எதிரொலி, எந்த இசையால் மயங்கி மாதவிபால் சென்றானோ, அதே இசையால் பேதப்பட்டு பிரிகின்றான். பிரிந்தவன். கண்ணகியின் கால் சிலம்பை விற்க மதுரை செல்கிறான். வஞ்சிக்கப்பட்டு அரசனால் கொல்லப்படுகிறான். அநீதி வழங்கிய பாண்டியன் தானே உயிர்விடுகிறான். மதுரையைக் கண்ணகி தன் கற்பின் தீயால் எரிக்கிறாள்.

இந்நிகழ்ச்சியிலிருந்து தமிழ்நாட்டின் நிலை, என்ன நிலைமையிலிருக்குமென்பதை ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. கற்புடைய கண்ணகியை மறந்து, கலையாகிய மாதவியை நேசித்தான். அதுபோல் தமிழ்நாட்டு அரசியலின் கற்பாகிய மொழியாட்சியை மறந்து ஆங்கில நடனமாதாகிய ஆங்கிலத்தை நேசித்தார்கள். கற்பாகிய தமிழ் தானாகவே திருந்துமென்று நம்பியே யிருந்தது. மாதவியாகிய ஆங்கிலம், தனக்குரிய காலம் முடிந்துவிட்டதென சுதந்திரத் தலைவனுக்கு, சுதந்திரத்தைப்பற்றிச் சொல்லித் தமிழிடமே சென்று வாழ்வாயெனச் சொல்லிச் சென்றுவிட்டது. நம் சுதந்திரம் தமிழிடம் வரும்போது, தமிழ் உறவுள்ள மத்திய சர்க்காரிடம் சிக்கியிருந்தது. சிக்கிய தமிழுக்கு, வாழ்வளிக்க சிலம்பைச் சொல்லி ஞாபகப்படுத்த வேண்டிய நிலை வந்தது.

சிலம்பைக் காட்டியும் தமிழ் நாட்டிலுள்ள சிலருக்கு, நாம் தமிழரென்ற ஞாபகம் போய்விட்டது. ஞாபகத்தை மீண்டும் உண்டாக்க, பாடுபடவேண்டிய நிலைமையில்தானிருக்கிறது. சிலப்பதிகாரத் தலைவன் வியாபாரியாயிருந்ததால், தமிழ் நாட்டையும், தமிழ் மொழியையும், வியாபாரச்சரக்காக்கி, பதவிச் சந்தையில், உத்தியோக வியாபாரியிடம், வஞ்சகத்தை லஞ்சமாக்கி, பேரம் பேச ஆரம்பித்துவிட்டார்கள். வியாபாரத்தொடக்கமே இரண்டு தாலுகாக்கள் தெற்கேயும், நான்கு தாலுகாக்கள் வடக்கேயும் நஷ்டத்தைச் சமாளித்து, லாபமில்லாவிட்டாலும் முதலுக்கு மோசமில்லாமலிருக்கத்தான், சிலப்பதிகாரத்தைத் துணையாகக் கொண்டு, போராட ஆரம்பித்திருக்கிறார்கள். போராட்டத்தைப்பார்த்து, தமிழ் பேசுகிறவர்களே கேலி செய்கிறார்கள். காரணம், தமிழைத் தாய்மொழியாக

நினைக்காமல்; மாற்று மொழியை தன் மொழியாக நினைத்த கேவலத்தின் எதிரொலிதான்.

சிலம்பு தந்த செல்வமாகத் தமிழரசு கிடைத்து விட்டால் நல்லதாக நினைத்தாலும், நாட்டின் எல்லைகளும் மீட்கவேண்டிய கடமையாயிருக்கிறதென்பதையும் ஞாபகப் படுத்துகிறோம். எல்லைகளைப்பற்றி நினைக்கும்போது, மலை யும், கடலுமாக அமைந்திருக்கிறது. மலையை வைத்த காரணத்தால் என்னவோ, நம்மிடம் சொல்லாமலேயே அடுத்த மொழியின் எல்லைக்குப் போய்விட்டது. கடல் மீண்டுவிட்டது.

உயிருக்குத் தண்ணீர்தான் முக்கியம். தண்ணீரில்லா விட்டால் வாழமுடியாது. அதுவும் உப்புத்தண்ணீருள்ள எல்லை மீண்டுவிட்டது. உப்பு நம் வசமிருப்பதால், மலையை கொஞ்சம் முயற்சி செய்துதான் திருப்ப வேண்டும். திருப்புதவற்கு அரசியலாரின் மனமும் திரும்பவேண்டும். திரும்பும் நேரம் வந்துகொண்டிருக்கிறது.

கண்ணகிக்குச் சிலையெடுக்க சேர மன்னன் முயற்சித்ததற்கு தானமாகத்தான் தேவிகுளத்தை எடுத்துக்கொண்டான் போலிருக்கிறது. தேவிகுளத்தில் தான் கண்ணகி கோவிலிருக்கிறது. அங்கு அதைப் பத்தினி தெய்வமென்று சொல்கிறார்கள். தேவிகுளத் தைத் தானமாகப் பெற்ற கேரள அன்பர்கள், தமிழர் மீது நல்லெண்ணமில்லாமலேயே இன்னுமிருந்துவருகிறார் கள். ஆனல் தமிழனே பரந்த மனப்பான்மையாய் வாழ்ந்து வருகிறான்.

சிலப்பதிகாரக் கதையே, காதலில் ஆரம்பித்துக் காமத் தின் எதிரொலியால் துக்கத்துடன் முடிகிறது. காதலில் கட்டுப்பட்டு கண்ணகியின் சிலம்பை, காமவயப்பட்டுத்

திருந்திய கோவலன் விற்கச் செல்கிறன். காமவயப் பட்டுத் திருந்திய கோவலன் நல்லவனுயிருந்தாலும், பத்தினிகளின் எண்ணத்தின் எழுச்சியான சாபம் அவனை விடவில்லை. வஞ்சிக்கும் எண்ணம் மாதவிக்கில்லாவிட்டாலும், கண்ணகியை வஞ்சித்துத்தான் கோவலனைப் பெற்ருள். பாட்டுடைத் தலைவனின் கற்பனையால் மாதவியும் கோவலனும் பிரிகிருர்கள். காவிரியைப் பெண்ணுக, கடலை ஆணுக வைத்துப் பாடியதை, மற்ரெருவனைக் காதலிப்பதாக எண்ணிப் பிரிகிறன். சந்தேகத்திற்குக் காரணமாக மாதவி உண்மை யன்புடன் நேசித்தாள். மாதவியின் காதலுக்கும், சந்தேகத்தின் காரணமாகத் துரோகம் செய்தான்.

இரண்டு பெண்களின் சாபத்திற்கு இலக்கானுன் கோவலன். மனைவியாகிய கண்ணகி, கடமைக் காரணமாக ஏக்கத்தைச் சாபமாக நினைத்திருக்கலாம். மாதவி தான் கற்றுக்கொண்ட கலையால் கோபம் கொண்டு, உணராத கோவலனை நிந்தித்திருக்கவேண்டும். இரண்டுவித சாபங்கள், இரண்டு வகையில் குற்றவாளியாகிருன். வஞ்சிப் பத்தன் சாகசமாகப் பேசும்போது, வியாபாரியான கோவலன் வியாபாரத் தந்திரமென்று கவனமாயிருந்திருக்கலாம். ஏமாந்தது தான் மாதவியின் சாபம்.

மன்னன் நடனமாடும் பெண்ணைப் பார்த்துக்கொண்டிருந்தான். மன்னனின் தேவி, நடனப் பெண்ணைக் காதலிப்பதாக எண்ணி, கோபத்தோடு அந்தப்புரம் நோக்கிச் செல்கின்ருள். தன்னுடைய துணைவி கோபமாகச் சென்றுவிட்டதை நடனம் முடிந்தபிறகு யுணர்கிருன். மிகச் சங்கடமான நிலைமையில் தேவியைப் பார்க்கச் செல்கிருன். செல்லும்போது, தேவியை எவ்வாறு சமாதானப்படுத்துவ

தென்பதைக் காமத்தோடு இணைத்துப் பார்த்துக் கொண்டே செல்கிறான்.

காமத்திற்குக்கண்ணில்லையென்பதைவிட, காதுமில்லை யெனச் சொல்லிவிடலாம். அதற்கு உதாரணம் பாண்டி யன் நெடுஞ்செழியன், காம எண்ணத்தோடு செல்லும் போது, தேவியின் சிலம்பு திருடியவனென்றவுடன் தேவியின் பிணக்கையும், திருடனையும் சேர்த்துப் பார்த்த வுடன் திருடனைக் கொலை செய்யச் சொல்கிறான். இந்த மாறுபட்ட எண்ணம், யோசிக்காமல் செய்த தீர்ப்பு, பத்தினி யான கண்ணகிக்குச் செய்த துரோகத்தின் சாபம். பத்தினிப் பெண்ணின் கணவனென்று உணராமல் தீர்ப் பளித்த பாண்டியனைக் குற்றவாளியாக்க நினைக்கவில்லை இளங்கோ அடிகள். இரண்டு பெண்களின் சாபம் மட்டு மிருந்தால் முத்தமிழ் வளராதென எண்ணி பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவியையும் பாத்திரமாக்கிவிட்டார். பழகிய கணவன் மீது காரணமில்லாத சந்தேகம் வந்து விட்டால், சந்தேகத்திற்குப்பலி குற்றமில்லாப் பெண்ணின் கணவன்.

ஒரு பெண்ணின் கணவனுக்கு தன் கணவன் எமனாக யிருந்ததால், தன் உயிரைத் தானமும் கொடுத்ததோடு, தன் கணவனையும் தானம் கொடுக்கிறாள். கணவனிறந்த வுடன் உயிர்விட்டாள் கோப்பெருந்தேவி. கணவன் பிரிந்த பிறகு துறவியானாள் மாதவி. கணவனிறந்தபிறகு தெய்வ மானாள் கண்ணகி. உயர்ந்த முடிவில் முடிக்கும் இந்தக் காவியத்தைத் தமிழ்நாட்டில்தான் காண்கிறோம்.

கோப்பெருந்தேவியின் எதிரொலியாகத் தமிழகப் பெண்ணினம் வளரவேண்டும். கணவனின்ஒப்பற்றஅன்பை உயிராக மதித்து வாழ்ந்ததால் தான், அன்பு மறைந்த

வுடன் உயிரையே மாய்த்துக்கொண்டாள். காதலித்துக் கணவனாக ஏற்றுக்கொண்ட மாதவி, தனது குலவழக்கத்தையே மாற்றி, கோவலனாகவே மாறிவிட்டாள். கலையால் நேசித்தாள். கலையால் சுகம் பெற்றாள். கலையால் வாழ்ந்தாள். கண்ணகியோ, கணவன் இறந்தாலும் குற்றவாளியாக இறக்கக்கூடாதென்று நீதிக்கு வாதாடி, கோபாக்னியாகமாறி, தன்னையும், தன்னிடமுள்ள மாயையாகிய பெண்மையையும் எரித்து தெய்வீகமாக்கிக் கொண்டாள்.

கண்ணகியின் கற்புத்தீயில் மதுரை யழிந்ததாகயிருந்தாலும், செந்தமிழுக்கு இருப்பிடம் மதுரையாகத்தான் இன்றுமிருந்து வருகிறது, கற்புத் தீயினால் புனிதப்படுத்தப்பட்ட மதுரை ஒரு அற்புதமான கலா நிலையமாகயிருந்து வருகிறது. தமிழ் தந்த கருத்துக் குவியலாக மக்கள் வரவேண்டுமென்ற எண்ணத்தில் தான், தமிழில் மறைத்து சொன்ன கருத்துகளை தெளிவாகச் சொல்லும் கடமையைச் செய்திருக்கிறேன்.

தமிழறிஞர்களே, தெரிந்த முறையில் தெரிவித்தவைகளனைத்தும், என் இதயத்திடையே தோன்றிய ஆராய்ச்சிகள். கற்பனைக்குத் தகுந்தவாறு கருத்தமைந்தது கந்தனின் கருணை. "தமிழ் தந்த கருத்துக்குவியல்" வருங்காலத் தமிழ்மக்களின் கருத்துக்குவியலாகப் பதிந்து, தமிழ் ஆட்சி மொழியாகும் பணியிலும், நமக்குள்ள எல்லைகளை மீட்கும் ஆர்வமும், தன்மானத் தமிழ்நாடென மாற்ற நாட்டவர் எண்ணும்படி தமிழ்நாடெனப் பெயர் வைக்கவும், ஈடுபடுவார்களென்ற நம்பிக்கையில் தான் எழுதினேன்.

வாழ்க தமிழ்! வளர்க கலாச்சாரம்!!

விளங்குக தமிழ் நெறி !!!